திருச்செங்கோடு வேலன் திருப்புகழ்

6781



குகதாசன் உரை



“பலகாலும் உனைத் தொழுவோர்கள் மறவாமல் திருப்புகழ் கூறி படிமீது துதித்து உடன் வாழ அருள்வோனே, திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும் திருத்தணி” என்று 600 ஆண்டுகட்கு முன்னே தீர்க்கதரிசனம் செய்த திருவருட்செல்வர் அருணகிரிநாதர்.

உ

ஓம் முருகா சரணம்

திருவருட்செல்வர் அருணகிரிநாதர்
திருவாய் மலர்ந்தருளிய

திருச்செங்கோட்டு வேலவர் திருப்புகழ் தெளிவுரை

உரையாசிரியர்:
கந்தர் அநுபூதிச் செல்வர்
தவத்திரு குகதாச சுவாமிகள்
நெய்வேலி

சிரவை மடாலய ஆதீனத்தலைவர்
தவத்திரு சுந்தர சுவாமிகளால்
வெளியிடப்பட்டது

திருப்புகழ் பதிப்பகம்
35, முருகப்ப முதலித்தெரு
திருவல்லிக்கேணி சென்னை-600 005

முதற்பதிப்பு பிப்ரவரி 1990

★ தவத்திரு குகதாச சுவாமிகள்

விலை ரூ. 15-00

இந்த நூலாசிரியர் விரிவாக எழுதியுள்ள கந்தர் அநுபூதி உரை நூல் திருத்தணி அருள்மிகு சுப்ரமண்யசுவாமி திருக்கோயிலில் கிடைக்கும். விலை ரூபாய் 25/=

குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம்.



தும்மலபட்டி

நா. அழகப்பப் பிள்ளை அவர்கள்

" திருவேரகம் "

1—4—37 D

நிலக்கோட்டை

இவர்களின் நினைவாக இவர்தம் குமாரர்

திரு. **அழ. நாகரெத்தினம்** அவர்கள்

கொடுத்த நிதி உதவி கொண்டு இப்புத்தகம்

வெளியிடப்படுகின்றது.

உ

தவத்திரு சுந்தர சுவாமிகள்

ஆதீன கர்த்தர்
கௌமார மடாலயம்
சின்னவேடம்பட்டி அஞ்சல்
கோவை-641 006
போன்: 85025

அணிந்துரை

★

கொங்கிற் சிறப்புக் குலதிருச் செங்கோட்டில்
தங்கு வடிவேலன் தன்னழகை—மங்களமார்
நாலா யிரங்கண்ணை நான்பெற்றுக் காண என்றன்
பாலருணை நாதர் உரைப்பார்

நாகா சலவேலன் நல்லருளை யேநினைக்கும்
வாகர் அருணகிரி வள்ளல்பகர்—பாகாம்
திருப்புகழ்க்கு நல்லுரையைச் செய்தச்சில் ஏற்றி
விருப்புடன் தந்தார் விழைந்து

கந்தர் அநுபூதி காட்டும் அநுபூதியுரை
தந்த அருட்செல்வர் தண்முருகன்—கந்தமலர்த்
தாளைப் பரவுகுக தாசப்போர் சார்ந்தமுனி
வேளைப் பரவி மிக

சந்தவண் ணச்சரப தண்டபா ணிக்குரவன்
தந்த செங்கோட்டுத் தகைப்பாடல்—செந்தகையில்
சேர்த்தே அச்சிட்டுச் சீரார் படிவிழா
ஆர்த்து வெளியிட் டனர்

உரையால் சிறப்பு உவமையிலா அருணைத்
தரையார் முனிபாடல் சந்தம்—விரைவாகக்
கற்றுத் தெளிந்தகுக தாசன் தமிழ்ப்பணிகள்
வெற்றிபெற வேலனருள் மேவி

- சுந்தரசுவாமிகள்

உ
குருவே துணை.

தவத்திரு முருகதாச சுவாமிகள்,
கௌமாரமடாலயம்,
திருவாமாத்தூர்,
விழுப்புரம் – 605 402

அணிந்துரை.

★

*அருணை முனிவர் அருணகிரி நாதர்
திருமுருகன் மீது சிறப்பாய்த்—தருமினிய
சந்தத் திருப்புகழைச் சாற்ற அறியாதார்
இந்தப் புவியிலில்லையே*

*கந்தரநு பூதிக்குக் கண்ட வுரைபலவாம்
சிந்தனைக்கு நல்ல திருத்திதர—வந்த
குகதாச னென்னக் குலவும் புனிதர்
தகவார் உரைசெய் தனர்*

*அருணகிரி நாதர் அருளாடல் தன்னைப்
பெருகும் உரைநடையிற் பேசும்—பெருமை
குகதாசர் ஆய்வு குணமா யினிக்கும்
மிகமேன்மைத் தாயிருக்கும் மெய்*

*திருச்செங்கோட்டுக்குகன் மேற் சீராரருணைக்
குருப்புனிதன், வண்ணப்பாக் கூறும்—பெருமைமலி
தண்டபாணிப்பெருமான், சாற்றியவற்றைத் தொகுத்துக்
கொண்டுபதித்தல் குணம்*

*அத்தலத்தில் ஆண்டு தோறும் நடக்கும்
மெத்தச் சிறப்பாய்ப் படிவிழா மேவுமன்று புத்தகமாய்
நல்குகுக தாசருக்கு நன்றியுடன் வணக்கம்
மல்குக வென்றேத்திமகிழ் வாம்.*

அன்புரை.

★

திருமதி. ஜயலக்ஷ்மி தியாகராஜன், M. A., தமிழ்
M.12, பிரசாத்நகர், புது தில்லி. 110 005

கருணையின் வடிவினன்
கரத்திலோர் வேலினன்
பருணிக் கவியலா
வனப்பினைக் கொண்டவன்
ருணீக்கி மன்பதை
மனத்திடை உறைபவன்
அருணையிவன் நன்பனுக்
கருள்புரிந் தாண்டனன்

அன்னவன் புகழெலாம்
அவனியோர் உணர்ந்திட
இன்னிசைச் சந்தமொடு
இனிமையுஞ் சேர்த்தங்கு
ன்னரும கருத்தெலாம்
ஒருங்கிழைத் தளித்தனன்
ன்னரும் புகழ்படைத்த
அருணகி ரிநாதனே

ன்னவன் வாழ்க்கையை
தரணியில் உதித்ததை
னனென்ன விதங்களில்
அவரவர் கருத்தினால்
சொன்னதை ஏற்றுமதை
மறுத்துமுக் காலத்தை
இன்னதென் றறுதியால்
உறுதியாய்ச் செப்பினர்.

சிந்தையில் குடிகொண்ட
சிங்கார வேலனைச்
சந்ததம் வணங்கிட்டுச்
சரவணன் தாள்பணியும்
கந்தன்றன் அடியவர்
தவக்குக தாசனை
எந்தையாய்ப் பெற்றதிலே
பெருமகிழ் வெய்தேனே ?!

உ

பதிப்புரை.

★

முருகப்பெருமான் திருவருட்கடலைப் பருக அதன் இன்பத்தை நமக்கு வாரி வழங்கிய வள்ளல் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள். அவர் அருளிச் செய்த திருப்புகழ் பாடல்கள் உள்ளத்தை உருக்கி, ஒளி காட்டி கந்தன்கருணையை எளிதில் வழங்கும் அற்புத சக்தி வாய்ந்தவை. "பூர்வ பச்சிம தக்ஷிண உத்தர-திக்குள பக்தர்கள் அற்புதம் எனஓதும் சித்ர கவித்துவ சத்த மிகுத்த திருப்புகழ்" என்று அருணகிரியார் திருச்செங்கோட்டுத் திருப்புகழில் வியந்து போற்றுவார். "செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே" என ஏங்கித் துதிக்கிறார். மகாபுனிதம் வாய்ந்த ஒப்பற்ற தலம் திருச்செங்கோடு மாதிருக்கும் பாதியான மாட்சியுடன் காட்சியளிக்கும் மகத்தான தலம். இத் தகைய பெருமை வாய்ந்த திருச்செங்கோட்டுத் திருப்புகழ்ப் பாடல்களுக்கு அருமையான உரையை எழுதி அரியபணி செய்துள்ளார் பெரியவர். 'சுந்தர நுபூதிச் செல்வர்' குகத்திரு குகதாசன் அவர்கள் கடல் கடந்து சென்று தெய்வத் தமிழ்ப் பணியாற்றிவரும் பெருந்தகையாளர் உயர்திரு. நா. நாகரெத்தினம் அவர்கள் இந்நூலைப் பதிப்பிக்க நிதியுதவி செய்து உள்ளார் எனில் இந்நூலின் அருமையை உணரலாம். இதனைத் திருப்புகழ் அன்பர்கள் படித்து திருச்செங்-கோட்டு வேலவன் திருவருளைப்பெற வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

திருப்புகழ் பதிப்பகத்தார்.

முன்னுரை

★

திருவருட்செல்வர் அருணகிரிநாதர் திருமுருகன் மீது மலர்ந்தருளிய திருப்புகழ் பாடல்கள் பதினாறுயிரம் என்பர். திரு வ. தா. சுப்ரமண்யப் பிள்ளை அவர்களின் அரும்பெரும் முயற்சியால் நமக்குக் கிடைத்தவை 1360 திருப்புகழ்கள். இதனை அவரது குமாரர் தணிகைமணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் "முருகவேள் பன்னிரு திருமுறை" என்ற பெயரில் பொருளுடன் 6 பாகங்களாகப் புத்தகம் வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகம் இப்போது கிடைப்பதில்லை. திருமுருக கிருபானந்தவாரியார் உரை மட்டுமே கிடைக்கின்றது. திருப்புகழையும் அருணகிரிநாதர் எழுதிய மற்றைய நூல்களையும் எல்லோரும் கற்று அறிதல் வேண்டும் என்னும் அவாவில் 1981 ஆம் ஆண்டு கந்தர் அநுபூதிக்கு ஓர் ஆராய்ச்சி உரை இவண் எழுதியதை அப்போது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளராக இருந்த திரு U. சுப்ரமண்ய பிள்ளை I. A. S. அவர்கள், திருத்தணிகை அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில் பதிப்பாகப் பதிப்பித்து உதவினார்கள்.

அதன்பின் அருட்செல்வர் அருணகிரிநாதரின் சரிதையை ஆராய்ந்து தக்க சான்றுகளுடன் எழுதி அதனை வெளியிட பலரை அண்டினேன். அப்போது திருத்தணி திருமுருகன், திருவேரகம் குருநாதன், திருச்செங்கோட்டு வேலவன், திருப்புகழ் பாடல்களுக்கு உரைகள் எழுதி அச்சிடுவதற்காக பலரை நாடியபோது சென்னை பார்க்கர் பிரஸ் உரிமையாளர் அன்பர் திருமுருக N. சாரங்கபாணி அவர்கள் தாம் அச்சிடுவதாக ஏற்றுக்கொண்டு அதை அச்சிட்டுக் கொண்டு உள்ளார்கள். கூடிய சீக்கிரம் உங்களை எல்லாம் காணவருவார் அருணகிரிநாதர்.

அடுத்து திருத்தணி, திருவேரகம் திருச்செங்கோடு திருப்புகழ்களுக்கு ஆன உரையை வெளியிடுவதற்கு தக்க அன்பர்களை தேடிக்கொண்டு இருக்கும் போது 1978 ஜூலை மாதம் நடைபெற்ற திரு இடைக்கழி குடமுழுக்கு விழாவிற்கு முன் திருஇடைக்கழி வந்து ஆலயத்தில் மின் விளக்கு போட ரூ. 21000 உதவிய நண்பர் அழ. நாகரெத்தினம் அவர்கள் திருப்புகழ் பாடல்கள் வெளியிடத் தாம் முன் பணம் கொடுத்து உதவுவதாகச் சொன்னதுடன் ரூ. 9000 டிராப்டு எடுத்து அனுப்பினார்கள். அந்தத்தொகையை முன் பணமாகச் கொண்டு திருச்செங்கோட்டு வேலவனின் திருப்புகழ் பாடல்களுக்கும் திருச்செங்கோட்டு வேலவன் மீது பாடியுள்ள கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அலங்காரப்பாடலுக்கு தெளிவுரை எழுதி அத்துடன் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் திருச்செங்கோட்டில் பாடிய பாடல்களையும் மூலம் மட்டும் இப்புத்தகத்தில் இணைக்கப் பட்டு உள்ளது.

கொங்கு நாட்டின் பெருமைகள் பேசப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிலேயே கௌமார மடாலயம் கொங்கு நாட்டில் சேலம் அருகே சிரவணபுரம் என்ற இடத்தில் மட்டும் உள்ளதையும் அந்த மடாலயத்தின் முதல்வர் பற்றியும் இரண்டாவது பட்டம் பற்றியும் தற்போது அம்மடாலயத்தின் ஆதீன கர்த்தராக உள்ள தவத்திரு சுந்தர சுவாமிகளின் அரும் செயல்கள் பற்றியும் கண்டு உள்ளேன்.

இவைகளைக் காண்பதற்கு நிதி உதவி இப்புத்தகம் வெளிவர உதவியுள்ள அன்பர் அழ. நாகரெத்தினம் அவர் களுக்கு பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு உள்ளேன்.

இப்புத்தகம் வெளிவருவதற்கு எனது குமாரன் போல் எனக்கு வேண்டிய சகல உதவிகளைச் செய்யும் அன்புமிகு வலையபேட்டை திரு R. கிருஷ்ணன் அவர்களுக்கும் திரு இடைக்கழி திருமுருகன் ஆலயத்திற்கு கோபுரமும் கும்பா-பிஷேகமும் செய்து இருக்கும் அன்பர் திருமுருக திரு இடைக்கழி தொண்டர் பேராசிரியர் டாக்டர் திரு ஆ. மங்கலமுடையார் அவர்களுக்கும், திருச்செங்கோட்டுத் திருப்படி விழாவில் இப்புத்தகத்தை வெளியிட உதவிய விழாக் குழுவினர்க்கும் திருப்பணிக் குழுவின் செயலர்

அன்புமணி அவர்களுக்கும், புத்தகத்தை வெளியிட்டுதவிய சிரவை ஆதீனம் தவத்திரு சுந்தரசுவாமிகள் அவர்களுக்கும் இப்புத்தகத்தைக் குறிப்பிட்ட கால அளவில் அழகுபட அச்சிட்டுக் கொடுத்துதவிய வேதாரண்யம் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் நிர்வாக அறங்காவலர் பத்மஸ்ரீ வே. அப்பாக்குட்டி அவர்களுக்கும் அச்சகத்தைச் சார்ந்த அனைவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அணிந்துரை எழுதிக் கொடுத்துள்ள கௌமாரமடாலயம் தவத்திரு சுந்தரசுவாமிகள் அவர்களுக்கும், திருவாமாத்தூர் தவத்திரு முருகதாசசுவாமிகள் அவர்களுக்கும், டில்லி திருமதி ஜெயலெக்ஷ்மி தியாகராஜன் அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு உள்ளேன்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாடல்களைச் சுவடி பார்த்து எழுதித்தந்த கௌமார மடாலய சுவடித்துறை திரு R. கிருஷ்ண ராவ் அவர்களுக்கும் நன்றி செலுத்த கடமை பட்டு உள்ளேன். அவருக்கும் மற்றும் இப்புத்தகம் வெளி வருவதற்கு உதவிசெய்த பலருக்கும் திரு. அழ. நாகரெத்தினம் அவர்களின் சகோதரர் மாணிக்கவேலு அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

நெய்வேலி
27. 1. 90

அன்பன்,
குகதாசன்

திருச்செங்கோட்டு வேலவன் திருப்புகழ் தெளிவுரை

★

உள்ளடக்கம்

1.	திருப்புகழ் தெளிவுரை	1—103
2.	கந்தர் அநுபூதி பாடல் 11	103-104
3.	கந்தர் அலங்காரம் பாடல்கள் 23, 36, 70, 72, 90, 91, 97, 104	105—109
4.	கந்தர் அந்தாதி பாடல்கள் 23, 26, 41, 42, 56, 57, 68, 78, 82, 90, 91	109—114

வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் திருவாய் மலர்ந்து அருளியது

5.	திருச்செங்கோட்டு வேலவன் திருப்புகழ்	115
6.	திருச்செங்கோடன் திருப்புகழ்	115
7.	திருச்செங்கோடன் பதிகம்	123
8.	குமரவேள் பதிகம்	126
9.	திருச்செங்கோட்டு செவ்வேள் பதிகம்	129
10.	நாகமலை விசாகன் சந்தப்பதிகம்	130
11.	செங்குன்றூர் வாழ் தேசிகன் பதிகம்	132
12.	தெய்வசிலேடைப் பதிகம்	135
13.	வகுப்பு	136

கட்டுரை

14.	திருச்செங்கோடு	137
15.	கொங்கு நாடு	138
16.	செங்கோடும் செங்கோடனும்	141
17.	திருச்செங்கோடும் மாதொரு பாகனும்	142
18.	கௌமாரம்	143
19.	சிரவை மடாலயம்	145
20.	தவத்திரு இராமானந்த சுவாமிகள்	146
21.	„ கந்தசாமி சுவாமிகள்	148
22.	„ சுந்தர சுவாமிகள்	149
23.	திருப்படி விழா	155
24.	திருவருட்செல்வர் அருணகிரிநாதர் கண்ட திருச்செங்கோட்டு வேலவர்	160
25.	தெய்வத் திருமலை (வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்)	162
26.	அநுபந்தம் திருப்புகழ் விஷய ஆராய்ச்சி	168

வேலும் மயிலும் துணை

திருவருட்செல்வர் அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய

திருச்செங்கோட்டு வேலவர் திருப்புகழ் தெளிவுரை

திருப்புகழ் பாட்டு முதற் குறிப்பகராதி

★

பாடல்		பக்கம்
1.	அந்த வேட்கைப் பற்றி ...	1
2.	அத்து கிரின் நலதரத்து ...	6
3.	அன்பாக வந்து உன்ருள் ...	10
4.	ஆல காலப டப்பை ...	13
5.	இடம் பார்த்திடம் பார்த் ...	19
6.	கரையற உருகுதல் ...	23
7.	கலக்குங் கோதற ...	28
8.	காலனிடத்த ணுகாதே ...	32
9	கொடிய மறலியும் ...	34
10.	தமா தாமா லாபாலோக ...	43
11.	துஞ்சு கோட்டிச் சுழற்கண் ...	45
12.	நீல மஞ் சாள குழல் ...	53
13.	பத்தர் கணப்ரிய ...	63
14.	பந்தாடி அங்கை நொந்தார் ...	68
15.	புற்புதமே னும அற்புதநிலை ...	71
16.	பொற் சித்ரப்பச்சை ...	77
17.	பொன்ற லைப்பொய்க்கும்பி ...	81
18.	மந்தக் கடைக்கண் ...	85
19.	மெய்ச்சார் வற்றே ...	91
20.	வண்டர் மதங்கள் உண்டே ...	94
21.	வருத்தங் காண ...	97

முருகா சரணம்

குறிப்பு : இந்த புத்தகத்தில் கண்ட பாடல் எண்கள் முருகவேள் பன்னிரு திருமுறையில் கண்டபடி.

திருச்செங்கோடன் துணை.

திருவருட் செல்வர் அருணகிரிநாதர் அருளிய

திருச்செங்கோட்டு வேலவன் திருப்புகழ் தெளிவுரை

1

தத்த தாத்தத் தத்த தாத்தத்
தத்த தாத்தத் — தன தான.

அத்த வேட்கைப் பற்றி நோக்கத்
தத்தை மார்க்குத் தமராயன்-
பற்ற கூட்டத் திற்ப ராக்குற்
றச்சு தோடபற் றியவோடும்;
சித்த மீட்டுப் பொய்த்த வாழ்க்கைச்
சிக்கை நீக்கித் திணிதாய-
சித்ர வாக்குப் பெற்று வாழ்த்திச்
செச்சை சாத்தப் பெறுவேனோ;
கொத்து நூற்றுப் பத்து நாட்டக்
கொற்ற வேத்துக் கரசாய-
குக்கு டாத்தச் சர்ப்ப கோத்ரப்
பொற்ப வேற்கைக் குமரேசா;
தத்வ நாற்பத் தெட்டு நாற்பத்
தெட்டு மேற்றுத் திடமேவும்-
தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச்
சத்ய வாக்யப் பெருமானே.

(திரு. 383)

கொத்து நூற்றுப்பத்து நாட்ட = கூட்டமாக ஆயிரம் கண்களையுடைய, கொற்ற வேந்துக்கு = வீரமுடைய அரசனாகிய தேவேந்திரனுக்கு, அரசாய = அதிபதியாய், குக்குட அத்த = சேவலைத் திருக்கரத்தில் ஏந்தி, சர்ப்ப கோத்ரப் = சர்ப்பம் போன்று தோற்றம் அளிக்கும் மலையான திருச்செங்கோட்டில், பொற்பு வேற்கைக் = சிறப்புற்ற வேலினைக்கைக்கொண்டமூர்த்தமாக உள்ள, குமரேசா = குமரேசப் பெருமானே! தத்துவம் நாற்பத்தெட்டு நாற்பத்தெட்டு = தத்துவங்கள் தொண்ணூற்றுறினையும் (48 + 48) ஏற்றுத்திடமேவும் = ஏற்றுக்கொண்டு தைரியமாகப் பொருந்தும்படி, தர்க்க சாத்ர = தர்க்கசாத்திரங்களில் சொல்லப்பட்ட தக்கமார்க்கம் = தர்க்க நீதி வழிகளில், சத்ய வாக்ய பெருமாளே = சத்யமான நெறியைக் காட்டும் பெருமை

மிக்கவரே! அத்த(ம்) வேட்கை பற்றி = பொருள் ஆசையின் காரணமாக, நோக்கு = அப்பொருளை அடைவதற்காகவிருப்பம் வைக்கும், அத்தத்தை மார்க்கு = அந்த கிளிபோன்ற விலை மாதர்களுக்கு, தமராய் = வேண்டப்பட்டவனாய் அன்பு அற்ற கூட்டத்தில் = (சற்றும் உண்மையாக) அன்பு என்பதே இல்லாதவர்கள் கூட்டத்தில், பராக்கு உற்று = நோக்கத்தைச் செலுத்தி அச்சு தோள் பற்றி = உரு அமைந்த அவர்களது தோளைப்பற்றி அணைக்கும் பொருட்டு, இயவோடும் சித்தம் மீட்டு = அவ்வேசியர்களையே நாடிச் செல்லும் எண்ணத்தை மாற்றி, பொய்த்த வாழ்க்கை = பொய்யான இந்த உலக வாழ்க்கையில், சிக்கை நீக்கி = பிறப்பதும் இறப்புமான சிக்கலைத் தவிர்த்து, இனிப்பிறவாமை பெற்றிட திணி தாய = வன்மை வாய்ந்த சித்ர வாக்குப்பெற்று = அழகான சொற்களைக் கொண்டு வாழ்த்தி = உம்மைப் போற்றிப்புகழ்ந்து செச்சை சாத்தப் பெருவேனோ = அதன் காரணமாக உம் அருளுடன் தாங்கள் சூடியுள்ள வேட்சி மலர் மாலையை அடியேன் பெற்றிடப் பெறுவேனோ. பெற்றிட அருள்வாய்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திருச்செங்கோடனை நோக்கி "ஆயிரம் கண்களை உடைய தேவேந்திரனுக்கு அதிபரே! சர்ப்பகோத்ரம் எனப்படும் சர்ப்பம்போல் வடிவு கொண்ட மலையாம், திருச்செங்கோட்டு மலையில், செங்கைகளில் சேவலையும் வேலினையும் கைக் கொண்டு கோயில் கொண்டு உள்ள குமரேசப்பெருமானே! தொண்ணூற்று ஆறு தத்துவங்களையும் ஏற்று தர்க்கசாத்திரத் திற்குத்தகுந்த, சத்யமான நெறியைக் காட்டும் பெருமையில் சிறந்தவரே! பொருள் மீது கொண்ட ஆசையின் காரணமாக அப்பொருளைப் பெறுவதற்காகவே, ஆடவர்களை மயக்கும் கிளிபோன்ற அழகும் சொல்லும் உடைய, விலை மாதர்களின் வலையில் சிக்கி அவர்களுக்கு வேண்டப்பட்டவனாய், அன்பே சற்றும் இல்லாதவர்களின் கூட்டத்தில் எனது சித்தம் அனைத்தையும் செலுத்தி அழகான வடிவமுடைய அவர்களது தோள்களைப் பற்றி அணைந்திட, அவர்கள் பின் ஓடும், எண்ணத்தை மாற்றி அவர்கள் பால் செல்லாமல் தடுத்து, பொய்யான இந்த உலக வாழ்க்கையில் பிறப்பதும் இறப்பது மான சிக்கலினின்றும் விடுபட்டு, இனிப்பிறவாமை பெற்றிட, வன்மை வாய்ந்த சிறப்பான சொற்கள் எனது நாவில் வரப் பெற்று உம்மை அச்சொற்கள் கொண்டுப் போற்றிப் புகழவும் உமது வேட்சி மாலையை அருட் பிரசாதமாகவும் பெறும்

பூாக்கியமும் அடியேனுக்கு கிடைத்திட அருள் செய்வாய்'' என்பதாக நம்பொருட்டு தம்மை வியாஜமாக வைத்து வேண்டியுள்ளார்.

அடுத்து நம்மை நோக்கி விலைமாதர்கள் பொருள் சம்பாதிக்கும் ஆசையால் உங்கள் மீது அன்புகொண்டவர்கள் போல் நடிப்பார்கள், அவர்களிடம் அன்பு, பாசம் என்பதே கிடையாது. அவர்கள் மயக்கத்தில் மயங்கி, மயங்காதீர்கள். வேசியர் ஆசைவேதனை தரும். வேலன் திருவடியே நும் வினை தீர்க்கும். மாதர் ஆசையை மறந்திட மாமயிலோனைப்போற்றிப் பணியுங்கள். உங்கட்கு அருளவே திருச்செங்கோட்டில் கோயில் கொண்டுள்ளான் குமரேசன். அவன் அடிபோற்றி உய்வீர். அவன் உங்கட்கு வேட்சி மாலையை நல்குவான் எனச் சொல்லாமல் சொல்லி அறிவூட்டியுள்ளார்.

திருச்செங்கோட்டுமலையில் கோயில் கொண்ட செங் கோடனின் மூலவர்மூர்த்தம், மற்ற ஆலயங்களில் உள்ள மூர்த்தங்களைப் போல் இல்லாமல், தனது வலக்கரத்தில் வேலை -யும் இடக்கரத்தில் சேவலையும் கொண்டு எழிலாக நின்ற கோலத்தில் இருக்கின்றது. இதனை நமக்கு உணர்த்தவே இப் பாடலில் செங்கோடனை ''குக்குடாத்தசர்ப்ப கோத்ரப் பொற்ப வேற்கைக்குமரேசா'' என்று போற்றித் திருமுருகனின் தனித்தன்மை வாய்ந்த திருக்கோலத்தை நம் மனக்கண் முன் நிறுத்தி அக்கோலத்தை நாம் கண்டுகளித்து உணரச்செய் கின்றார் அருட்செல்வர் அருணகிரியார்.

இந்த எழில் உருவைத் திருக்கரத்தில் வேலுடனும் சேவலுடனும்கண்டதும் தான் அருட்செல்வர் அருணகிரியார்,

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்றுகண்டுதொழ
நாலாயிரங்கண் படைத்திலனேயத்த நான்முகனே"

என்று பிரமனையே சாடியுள்ளார் எனில் அது மிகையாகாது. நாலாயிரம் என்ன! கோடிக்கணக்கான கண்கள் பெற்றாலும் திருச்செங்கோடனின் எழில் உருவம் கண்டு களித்திடப் போதாது.

எனவேதான் திருச்செங்கோட்டில் பாடும் இத்திருப் புகழில் ''கொத்து நாற்றுப்பத்து நாட்டக் கொற்றவேந்து''என ஆயிரம் கண்களையுடைய இந்திரனைக்குறிப்பிட்டார் போலும்.

'குக்குட அத்த' என்பது சந்தம் நோக்கி "குக்குடாத்த" என வந்துள்ளது.

தொண்ணூற்று ஆறு தத்துவங்கள்

1. மூலப்பொருள்கள் 36 2. பிறநிலைக்கருவி 60 ஆக 96.

மூலப்பொருள்கள் 36

அசுத்ததத்துவம்	24
சுத்ததத்துவம்	5
சுத்த சுத்ததத்துவம்	7
ஆக	36 மூலப் பொருள்கள்.

பிற நிலைக்கருவி 60

பிருதிவியின் கூறு	5	அப்புவின்கூறு	5
தேயுவின் கூறு	5	வாயுவின்கூறு	5
ஆகாயத்தின் கூறு	5	தச வாயு	10
நாடி	10,	வாக்கு	4
வாசனாதி—	5		
குணம் —	3,	அகங்கார்த்திரயம்	3 ஆக 60.

அசுத்ததத்துவம் — 24 — (ஆத்மதத்துவம்)

1. ஆன்மதத்துவம் :—	அப்பு, தேய, வாயு, ஆகாயம் பிருதிவி ஆகிய பஞ்ச பூதங்கள்	—5
2. ஞானேந்திரியம் :—	மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகள் ---	5
3. கருமேந்திரம் :—	வாக்கு, பாதம், பாணி பாயு உபத்தம் ஆகியவை ----	5
4. தன்மாத்திரை :—	சத்தம் பரிசம் ஈசம் ரூபம் கந்தம் ஆகியவை	5
5. அந்தகரணம் :—	மனம், புத்தி அகங்காரம் சித்தம் ஆகியவை.	4
	மொத்தம்	24

சுத்த தத்துவம் 5 (சிவதத்துவம்)

1. சுத்த வித்தை	ஞானம் ஏறிக்கிரியை குறைந்தது	உருத்திரம்
2. ஈச்சுரம்	ஞானம் குன்றிக்கிரியை உயர்ந்தது	மகேசுவரம்

3. சதாக்கியம் ஞானமும் கிரியையும் ஒத்தது சதாசிவம்
4. சத்தி கிரியை நாடல் விந்து
5. சிவஞானம். ஞானம் ஒன்றல். நாதம்

சுத்த சுத்த தத்துவம் 7

1. காலதத்துவம். ஆன்ம போகங்களை அளக்கும் காலம்
2. நியதிதத்துவம். ஒவ்வொரு ஆன்மாவும் தன் கன்ம பலனை அனுபவிக்கச் செய்வது
3. கலாதத்துவம்: ஆணவ மலத்தின் வன்மையைச் சற்றுக் குறைப்பது
4. வித்தியாதத்துவம். ஆன்மாக்களுக்கு பகுத்தறிவைத் தருவது.
5. அராக தத்துவம். இச்சையை எழுப்புவது.
6. புருடதத்துவம். ஆணவ மலம் கன்மமலம், மாயா மலம்
7. மூலப்பகுதி— மாயை, (விரிக்கின் பெருகும் என விடுத்தம்)

சத்யவாக்யப் பெருமாளே: —

திருச்செங்கோட்டு மலையின் மீது திருச்செங்கோடனை தரிசிக்கச் செல்லும்போது அறுபதாம்படி என்று அறுபது படிகள் மட்டுமே கொண்ட இடம் ஒன்று உள்ளது. இந்த அறுபது படிகளும் செங்குத்தான உயரமான பாறையின் மீது இருக்கின்றன. படிகளின் இரு ஓரங்களிலும் திரி இட்டு எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றி எரியவிடுவதற்கு வசதியாக பள்ளங்களும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்துக்குப் பெயர் 'சத்யவாக்குப்படி' என்பர்.

இங்கு உள்ள மக்கள் தமக்குள் உண்டாகும் கொடுத்தல் வாங்குதல் முதலியவற்றில் ஏற்படும் பணத்தகராறு முதலியவை ஏற்பட்டால் இரு பக்கத்தார்களும் இந்த 60 ஆம் படி இடத்திற்கு வந்து இரு பக்கங்களிலும் உள்ள குழிகளில் நெய் விளக்குகள் ஏற்றி வழிபாடு செய்து இந்த 60 படிகளின் மீது இருந்து சத்தியம் செய்து வழக்கை முடிவு செய்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டுள்ளார்கள். இப்படியின் மீது இருந்து செய்யப்படும் சத்தியம் சென்னை நீதிமன்றங்களும் ஏற்றுக்கொள்கிறது என்பர்.

இந்த சத்திய வாக்குப்படியின் மேல் அருள் மிகு சுப்பிரமணியர் ஆலயம் உள்ளது. இந்த சத்யப்பாறையின் மீது இருந்துகொண்டு திருச்செங்கோடன் சத்தியத்தைக் காப்பாற்றுவதால் அருட்செல்வர் அருணகிரியார் திருச்செங்கோட்டு வேலனை "சத்யவாக்யப் பெருமாளே" என்று போற்றியுள்ளார்.

2

தத்த தனதனன தத்த தனதனன
தத்த தனதனன தனதான.

அத்து கிரின்நலத ரத்து அலனவள
கத்து வளர்செய்புள கிதபூத—
ரத்தி ருகமலக ரத்தி தயமுருகி
அத்தி யிடனுறைய நெடுமாம;
ரத்து மலர்கனிய லைத்து வருமிடத
லத்து ரகசிகரி பகராதே—
யத்தி மலவுடல்ந டத்தி யெரிகொள்நிரை
யத்தி னிடையடிமை விழலாமோ
தத்து கவனவரி ணத்து உபநிடவி
தத்து முநிஉதவு மொழியாறுத்—
தத்தை நறவைஅமு தத்தை நிகர்குறவர்
தத்தை தழுவியப னிருதோளா:
தத்து உததிதுரக தத்து மிகுதிதிசர்
தத்துமலைஅவுணர் குலநாகத்—
தத்த மிசை மரக தத்த மணியமயில்
தத்த விடும்அமரர் பெருமாளே.

(திரு. 382)

தத்து கவன அரிணத்து = பாய்ந்து வேகமாகச் செல்லும் மானினிடத்தில்,உபநிட விதத்துமுநிஉதவு = வேதஒழுக்கமிக்க சிவமுனிவரின் பார்வையால் தோன்றிய, துத்தத்தை நறவை அமுதத்தை = பாலும் தேனும் அமுதமும் சேர்ந்த இனிமையை நிகர் மொழியால் = நிகர்க்கும் இனிமையான மொழிகளைப் பேசும், குறவர் தத்தை = குறவர் குலத்துக் கிளியான வள்ளி அம்மையார் அவர்கள், தழுவும் பன்னிருதோளா = தழுவி அணையும் பன்னிரு புஜங்களை யுடையவரே! தத்துஉததி துரகதத்துமிகு = அலைகடல் போல் குதிரைப்படைகளை மிகுதியாகக் கொண்ட, திதிசர் = திதியின் புத்திரர்களான தைத்யர்

கள் எனப்படும் அசுரர்களும்,தத்துமலை அவுணர் = தாவி வரும் மலை போன்ற உருவமுடைய அவுணர்களுமாகிய, குலநாகம் = சர்ப்பக்கூட்டங்கள் தத்த மிசை = நடுங்கி ஒடுங்க அவர்கள் மீது, மரகத தமனிய மயில் = மரகத நிறமும் பசும் பொன் நிறமும் கொண்ட மயிலை, தத்தவிடும் = பாயும்படி செலுத்தியதால், அமரர் பெருமாளே! = தேவர்களால் போற்றப் படும் பெருமையினை உடையவரே! அத்தி இடன் உறையும் = உமக்கு பயந்து சமுத்திரத்தில் ஒளிந்து கொண்ட, நெடு மாமரத்து = சூரபன்மனாகிய நீண்ட மாமரத்தின் மலர்கனி அலைத்து = மலர்களையும் கனிகளையும் அழித்து,வரும் இடை தயத்து = வரும்போது இடைப்பட்ட,உரகசிகரி பகராதே = நாக கிரி என்றும் இத்திருத்தலத்தையும் இங்கு கோயில் கொண்ட உன்னையும் போற்றிப்புகழ்ந்து பணியாமல், அத்திமலஉடல் நடத்தி = எலும்பும் மலமும் கூடிய உடலைச் சுமந்துகொண்டு அதுகிரின் நல் அதரத்து = அழகிய பவளம் போன்ற சிவந்த உதட்டையும், அல் அள அளகத்து = இருள் போன்ற கருமை யான கூந்தலையும், வளர் செய் புளகித பூதரத்து = மகிழ்ச்சி யால் பருத்து வளர்ந்துள்ள மலைபோன்ற தனங்களையும், இருகமலகரத்து = தாமரை மலர் போன்ற இரு கரங்களையும் உடைய விலைமாதர்களிடத்து, இதயம் உருகி = மனம் சென்று உருகுவதால், எரிகொள் நிரையத்தினிடை = நெருப்புமயமான நரக வாழ்விலே, அடிமை விழலாமோ = அடியேன் அவதிப் படலாமோ? கூடாது என்றபடி.

அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனை நோக்கி பாய்ந்து வேகமாகச்செல்லும் மானினிடததில், வேதஒழுக்க மிக்க சிவமுநிவரின் பார்வையால், தோன்றிய, பாலும் தேனும் அமுதமும் சேர்ந்த இனிமையினும் இனிமையாகப் பேசும் குறவர் குலத்துக் கிளியான வள்ளி அம்மையார், தழுவும் பன்னிரு புயங்களை உடையவரே! கடல் போல் பரந்து மிகுந்த குதிரைப்படைகளுடன் கூடிய திதியின் புத்திரர்களாகிய தைத்யர்களாம் அசுரர்களும், தாவி வரும மலைபோன்ற உருவம்கொண்ட அவுணர்களுமாகிய சர்ப்ப கூட்டம் நடுங்கி ஒடுங்கிட அவர்கள் மீது மரகதநிறமும் பசும் பொன் நிறமும் கொண்ட (இந்திரனாகிய) மயிலைப்பாயும் படிச் செலுத்தியதால் தேவர்களால் போற்றப்படும் பெருமையினை உடையவரே! உமக்குப்பயந்து, பூத்துக் குலுங்கும் மலர்களுடனும் காய் கனி களுடனும் கூடிய மாமரமாக மாறி ஆழ்கடலில் மறைந்து கொண்ட சூரபன்மனாகிய மாமரத்தைவெட்டி வீழ்த்தி வரும்

போது இடைப்பட்ட திருத்தலமான திருச்செங்கோட்டின் மலையின் மீது கோயில் கொண்டுள்ள உம்மையும், உரகசிகரி எனப்படும் நாககிரியாம் திருச்செங்கோட்டையும் போற்றிப் புகழ்த்து பணியாமல், எலும்பும் மலமும், இரத்தமும், தசையும் சேர்ந்த இந்த அநித்தியமான பொல்லாப்புழுமலிசடலத்தை நித்தியமென்று நினைத்துக்கொண்டு, அழகிய வேசியர்களின் நற்பவளம் போன்ற சிவந்த உதட்டையும், இருள்போன்று கருமை நிறம் கொண்ட கூந்தலையும் மகிழ்ச்சியால் பருத்து வளர்ச்சியுற்ற மலை போன்ற தனங்களையும், தாமரை மலர் போன்ற இரு கரங்களையும் கண்டு அவர்கள் பால் மோகம் கொண்டு மனம் உருகும் அடியேன், வேசையர் ஆசையால் நரக வாழ்வில் சிக்கி பிறப்பதும் இறப்பதுமாக மாதாவின் கர்ப்பவாசமான நரகத்தில் உழன்று பாழ் வாழ் வெனும் படு மாயையிலும் உழன்று உன்னை மறந்து உழலத்தான் வேண்டுமோ? சூரபன்மனின் மாயையைப் போக்கிய உமக்கு ஏழையேனின் வேசையர் மயக்கத்தை ஒழிப்பது முடியாத காரியம் அல்லவே என்னை ஆட்கொண்டு, உம்மையும், நீர் கோயில் கொண்ட திருச்செங்கோட்டையும், போற்றிப் புகழ்ந்து பணியவும் உன் அருள்பெறவும் அருள்வாய் என்று நம் நமித்தம் தம்மை வியாஜமாக வைத்துப் பாடிய பாடல்.

இப்பாடல் மூலம் அருட்செல்வர் அருணகிரியார், 'நீவீர் மாதர்களின் ஆடை அலங்காரங்களையும் உடல் வனப்பும் கண்டு மயங்கி ஏமாராதீர்கள். அவர்கள் ஆசையும் நேசமும் பாசமும் நரக வாழ்வைத்தான் தரும். பொல்லப்புழு மலிந்து இரத்தமும் சீயும் எலும்பும் தசையும் நிறைந்த இவ்வுடல் நிலையற்றது. பிறப்பதும் இறப்பதுமாக மாதாவின் கர்ப்பவாசமாகிய நரகவாழ்வுப்பெற்று அவதிப்படாமல், திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட திருச்செங்கோடன் மீது பற்றுகொண்டு அவனையும் அவன் கோயில் கொண்ட திருத்தலங்களையும் அவன் அடியார்களையும் போற்றிப்புகழ்ந்து பணியுங்கள்! அப்பெருமான் உங்கள் மாதர் ஆசையை மறப்பித்துத் தனது திரு மலரடியை அருள்வான் என்பதாகச் சொல்லாமல்சொல்லி நமக்கு அறிவுரைகளை விடுத்துள்ளார். அவர் வழி நின்று அவன் அருள் பெறுவோம்.

"தத்து (உ)ததிதுரக தத்து மிகு திதிசர்
தத்து மலை அவுணர்
தத்த மிசைமரக தத்த மணி மயில்
தத்த விடும்அமரர் பெருமானே" குலநாகத்

இதில் திருமுருகன் கடல்போல் பரந்து மிகுந்த குதிரைப்படைகளுடன் கூடிய திதியின் புத்திரர்களாகிய தைத்யர்களாம் அசுரர்களும், தாவிவரும்மலை போன்ற உருவம் கொண்ட அவுணர்களுமாகிய சர்ப்ப கூட்டங்கள் நடுங்கி ஒடுங்கிட அவர்கள் மீது மரகதமும் பொன்நிறமும் கொண்ட மயிலைப் பாயும்படி செலுத்தியதால் தேவர்களால் போற்றப்படும் பெருமையினை உடையவர் என்று முருகனைப்போற்றுமிடத்து, தேவர்கள், அவர்களுடைய பகைவர்களான அவுணர்களை அழிக்க திருமுருகன் மயிலை ஏவியதற்காக மட்டும் திருமுருகனைப் போற்றவில்லை. அப்படி ஏவப்பட்ட மயில் அவர்களது தலைவர் தேவேந்திரனாக இருந்ததால் அவர்கள் திருமுருகனைப் பெரிதும் போற்றினார்கள் என்ற அருமையான ஓர் உண்மையையும் எடுத்துக்காட்டியுள்ளார் அருட்செல்வர் அருணகிரிநாதர்.

இந்திர ஞாலத்தேர் சூரபன்மனை அடையாமல் திருமுருகனால் தடுக்கப்படவே, சூரன் சக்ரவாகப் பறவை வடிவம் கொண்டு போரிடவும், பட்சி உருவம் கொண்டவனை தேரில் இருந்து தாக்குதல் முறையாகாதென்று திருவுளங்கொண்ட முருகன் தேவேந்திரனைப் பார்க்க, இந்திரன் நீண்ட தோகையை உடைய மயிலாக உருக்கொண்டு திருமுருகனை வணங்கினார். திருமுருகனும் அந்த மயிலைத் தனது வாகனமாகக்கொண்டு சூரனுடன் போர் செய்தார் என்பது புராணம். அந்த தேவேந்திரனை மயிலே இப்போது அவுணர்கள் மீது விடப்பட்ட மயில்.

தங்களது தலைவன் திருமுருகனது வாகனமாக உள்ளான் என்பது குறித்து தேவர்கள் மகிழ்ச்சியுற்றுத் திருமுருகனைப் போற்றியதுபோல், பூதகணங்களும் தங்கள் இனத்தவர் திருமுருகனது வாகனமாகவும் கொடியாகவும் உள்ளார்கள் என்ற மகிழ்ச்சியால் கோடிக்கணக்கில் மேளதாளங்கள் கொண்டு முருகனைப் போற்றியதாகவும் இத் திருத்தலத்தில் பாடியுள்ளதான திருப்புகழ் பாடல் 21 ல் அருட்செல்வர் அருணகிரிநாதர் அழகுபட எடுத்துக் காட்டியுள்ளதும் போற்றுதற்குரியவை. பூதகணங்களால் போற்றப்பட்டதை பாடல் 21-இல் காண்போம்.

3

தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த தனதான-

அன்பாக வந்து உன்ருள் பணிந்து
ஐம்பூதம் ஒன்ற நினையாமல்-
அன்பாலல் மிகுந்து நஞ்சாரு கண்கள்
அம்போரு கங்கள் முலைதானும்;
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்-
கொண்டே நினைந்து மன்பேது மண்டி
குன்ரு மலைந்து அலைவேனே;
மன்ருடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை அணிவோனே
வந்தே பணிந்து நின்ரூர் பவங்கள்
வம்பே தொலைந்த வடிவேலா;
சென்றே இடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்-
செஞ்சாலி கஞ்சம் ஒன்ருய் வளர்ந்த
செங் கோடமர்ந்த பெருமானே.
(திரு. 367)

மன்று ஆடிதந்த மைந்தா = மன்றில் ஆடிய கூத்தப் பெருமான் சிவன் தந்து அருளிய குமாரரே! மிகுந்த வம்பு ஆர் கடம்பை = மிகவும் வாசனை பொருந்திய கடம்ப மலர்களையும் மாலைகளையும் அணிவோனே! = அணிந்து கொள்பவரே! வந்தே பணிந்து நின்ரூர் = உம்முன் உற்று உம்மைப் பணிந்து போற்றி நிற்கின்ற அடியார்களின் பவங்கள் வம்பே தொலைத்த = பிறவிப் பிணிகளைப்போக்கிடும் வடிவேலா = கூர்வேல் கொண்ட வேலாயுதக் கடவுளே! செஞ்சாலி = செந்நெற் பயிர்களும், கஞ்சம் = செந்தாமரை மலரும், ஒன்ருய் வளர்ந்த = ஒன்றுபட்டு வளர்கின்ற, செங்கோடு = திருச்செங்கோடு என்னும் திருத்தலத்தில், அமர்ந்த பெருமானே = கோயில் கொண்ட பெருமையில் சிறந்தவரே! அன்பாக வந்து = அன்புடனே உமது சந்நிதானம் உற்று, உன் தாள் பணிநது = உமது திருவடிகளை வணங்கி ஐம்பூதம் ஒன்ற = ஐம்பெரும் பூதங்களான மெய், வாய், கண் மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளும் ஒன்றுபட்டு, நினையாமல்

உம்மை நினைக்காமல், அன்பால் மிகுந்து = மிகுதியான அன்பும், நஞ்சு ஆரு கண்கள் = விடமும் கூடிய கண் பார்வையும், அம்போருகங்கள் முலை தானும் = தாமரை மொட்டுக்கள் போன்ற கொங்கைகளையும் கொண்டு கொந்தே மிகுந்து = பூங்கொத்துகள் நிரம்பி, வண்டாடி நின்று = வண்டுகள் சூழ்ந்து வட்டமிட்டு கொண்டாடுகின்ற = ரீங்காரம் செய்யும் குழலாரை = கூந்தலையும் உடைய விலை மாதர்களை, கொண்டே நினைத்து = மனதில் நினைத்துக்கொண்டு மன்பேது மண்டி = நிலைபெற்ற அறியாமை நிறைந்து, குன்றுமலைத்து அலைவேனோ = மனம் குன்றி சோர்ந்து செய்வது அறியாது அலையமாட்டேன் ஆகையால், சென்றே இடங்கள் = அடியேன் செல்லும் இடங்களில் (உம்மை நினைத்து) கந்தா எனும் போ = அடியேன் கந்தா என்று அழைக்கும் போது தாங்கள், செஞ்சேவல் கொண்டு = செவ்விய சேவலை திருக்கரத்தில் தாங்கிக்கொண்டு வரவேணும் = அடியேன் முன் வரவேண்டும்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் நம் நிமித்தம், தம்மை வியாஜமாக வைத்து திருமுருகனை நோக்கி மன்றுகள்தோறும் ஆடும் கூத்தப்பெருமானின் குழந்தையே மிகவும் வாசனை பொருந்திய கடப்பமலர்களையும் மாலைகளையும் விருப்பமுடன் அணிந்து கொள்பவரே! செந்நெற்பயிரும் செந்தாமரை மலரும் ஒன்றுபட்டு வளரும் வயல்கள் பெரிதும் சூழப்பட்டு செல்வச்சிறப்பு உற்ற, திருச்சேங்கோட்டில், திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட பெருமையிற் சிறந்த செங்கோட்டு வேலவரே! உம்முடைய சந்நிதானம் உற்ற ஒருவன் உள்ளன்புடன் நீரே! தஞ்சமென, உம்தாள் பணிந்தால் அவரை, அஞ்சேல் என ஆதரிக்கும் கடவுள் நீர். உம் சந்நதி உற்று உம்மைப் பணிந்து போற்றிடும் அடியார்களின் பிறவிப்பிணியைப் போக்கிடவே! கூர்வேல் கைக்கொண்டுதிருச்செங்கோட்டில் கோயில் கொண்டுள்ளாய், உமது அடியார்கள் எவரும் அன்புடனே, உமது சந்நிதானம் உற்று, உமது திருவடிகளைப் பணிந்து, கட்டுக்கு அடங்காத ஐந்து பெரும் பூதங்களான மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளையும் ஒன்று படச்செய்து உம்மை நினைக்காமல், மிகுதியான அன்பும் விடமும் கூடிய கண் பார்வையும் தாமரை மொட்டுகள் போன்ற கொங்கைகளையும் கொண்டு, பூங்கொத்துகள் நிரம்பி வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யும்

கூந்தலை உடைய விலைமாதர்களை மனதில் நினைத்துக்கொண்டு நிலை பெற்ற அறியாமை நிறைந்து மனம் குன்றி சோர்ந்து செய்வது அறியாது அலையமாட்டார்கள். ஆகையால் உமது அடியார்கள் செல்லும் இடங்களில் உம்மை நினைத்து 'கந்தா' என்று அழைக்கும் போது அவர்களுக்கு ஞானத்தை அருள்வதற்காக, செவ்விய சேவலைக் கைக்கொண்டு முன்வர வேண்டும். அதற்காகத்தானே இத்திருத்தலத்தில் தாங்கள் சேவலையும் வேலையும் கைக்கொண்டே இக்கோயிலில் எழுந்தருளி இருக்கிறீர் என்பதும் காண்பீர்.

திருமுருகனின் மெய் அடியார்கள் ஒருபோதும் அவனது சன்னதி உற்று ஐம்பொறிகளையும் ஒருமைப் படுத்தி ஏகசித்தமாகத் திருமுருகனைப் போற்றிப் புகழ்ந்து பணியாமல் மாதர் ஆசையால் மதி இழந்து அறிவு அற்று அல்லல் பட மாட்டார்கள் என்பதை எவ்வளவு உறுதியுடன் திருமுருகனிடம் எடுத்துக்காட்டி வாதாடி அவ்வடியார்கள் எப்போது உம்மை "கந்தா" என்று நினைத்தாலும் தாங்கள் அவர்கள் முன் சேவல் ஏந்திச்சென்று அருள வேண்டும் என வேண்டியுள்ளார் என்பதையும் கண்டு முருகன் அடியார்கள் அனைவரும், அருட்செல்வரின் வாக்கு பொய்த்திடா வண்ணம் மாதர் ஆசையை மறந்து மாமயிலோன் மலரடி பற்றி, அவன் சன்னதி உற்று ஒரு மனதுடன் அவன் புகழ் ஏத்தி, 'கந்தா' எனவும் அக்கந்தன், நம் முன் காத்து இருக்கும் அருள் பெறுவோம்.

திருமுருகனைக் "கந்தா" என்று தான் எப்போது அழைத்தாலும் தன்முன் தோன்ற வேண்டும் என்று தனக்காகத்தான் இப்பாடலை அருணகிரியார் பாடியுள்ளதாகக் கருத்து கொள்கின்றவர்களும் உள்ளார். அவர்கள் கருத்து பொருத்தமற்றதேயாம். அருட்செல்வர் அருணகிரியார் முன் திருமுருகன் அருணகிரியாரால் அழைக்கப் படாமலும் அழைக்கப்பட்டும் திருவண்ணாமலையில் தோன்றியுள்ளபோது இத்தகைய ஒரு வேண்டுகோளைத் தன் நிமித்தம் முருகனை வேண்ட வேண்டிய தேவையே அருணகிரியாருக்கு இல்லை என்பது காண்பீர்

இப்பாடலில் சந்தம் நோக்கி 'தொலைத்த' என்ற சொல் 'தொலைந்த' என்றும், 'எனும் பொழுது' என்ற சொல் 'எனும் போ' என்றும் வந்துள்ளது. ஐம்பூதம் என்று மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளையே உணர்த்துகிறர். இவைகளைக் கட்டுப்படுத்தி ஒன்று படுத்துவது

மிகவும் சிரமமான செயல் என்பதைச் சுட்டிக்காட்டவே ஐம்பொறிகளை ஐம்பூதம் என்று கூறியுள்ளார். ஐம்பொறிகளின் சேஷ்டைகளைப் பற்றி அருட்செல்வர் அருணகிரியாரே கந்தர் அலங்காரத்தில்,

ஓரவொட்டா ரொன்றை யுன்னவொட்டார் மலரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று
தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற்கொன்றவனே.

என்று திருமுருகனிடத்தே முறையிட்டுள்ளதும் காண்பீர்.

இத்திருத்தலத்தில் திருமுருகன் மற்ற ஆலயங்களினின்றும் வேறுபட்டு மூலத்தானத்தில் வேலும் சேவலும் கைக்கொண்டு உள்ளான் என்பதை முதல் பாடலில் காண்பீர்.

4

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன தனதான

ஆல காலப டப்பைம டப்பியர்
ஈர வாளற வெற்றும்வி ழிச்சியர்
யாவ ராயினும்நத்திஅ ழைப்பவர் தெருவூடே

ஆடி ஆடி நடப்பதொர் பிச்சியர்
பேசி ஆசை கொடுத்து மருட்டிகள்
ஆசை வீசி அணைக்குமு லைச்சியர் பலருடே

மாலை யோதிவி ரித்துமு டிப்பவர்
சேலை தாழநெ கிழ்த்தரை சுற்றிகள்
வாசம் வீசும ணத்தில்மி னுக்கிகள் உறவாலே

மாயை யூடுவி ழுத்திஅ முத்திகள்
காம போக வினைக்குள் உளைப்பணி
வாழ்வி லாமல்ம லச்சன னத்தினில் உழல்வேனோ

மேலை வானோர் உரைத்தச ரற்கொரு
பாலனாகிஉ தித்தொர்மு நிக்கொரு
வேள்வி காவல்நடத்திஅ கற்குரு அடியாலே

மேவியேமிதி லேச்சிலை செற்று மின்
மாது தோள் தழுவிப்பதி புக்கிட
வேறு தாய்அட விக்குள் விடுத்தபின வனோடே

ஞால மாதொடு புக்கவ னத்தினில்
வாழும் வாலிப டக்கணை தொட்டவன்
நாடி ராவணனைச்செகு வித்தவன் மருகோனே

ஞான •தேசிக சற்குரு உத்தம
வேல வாநெரு வைப்பதி வித்தக
நாகமாமலை சொற் பெற நிற்பகோர் பெருமாளே
திரு [379]

மேலைவானோர் உரைத்தசரற்கு = முன்னம் தேவர்களால் போற்றிப்புகழப்பட்ட தசரத சக்ரவர்த்திக்கு, ஒரு பாலனாகி உதித்து = ஒப்பற்ற குழந்தையாக அவதரித்து ஓர்முநிக்கு = ஒப்பற்ற விசுவாமித்திர முனிவருக்கு, ஒரு வேள்வி = அவர் செய்யும் ஒரு வேள்வியை, காவல் நடத்தி = காவல் செய்து அந்த யாகத்தைக்காத்து, அகற்கு உரு அடியாலே = கால் அடியில்பட்ட கல்லுக்கு பெண் உருவை திருவடியின் மகிமையால் தந்து அருளி, மிதிலை மேவி = மிதிலை மாநகரை அடைந்து, சிலைசெற்று = அங்கு சிவதனுசை முறித்து, மின் மாது தோள்தழுவி = மின்னைநிகர் சீதாதேவியாரைத் திருமணம் செய்துகொண்டு, பதிபுக்கிட = அயோத்தி மாநகரம் அடையவும், வேறு தாய் = மாற்றுந் தாயாகிய கைகேயி, அடவிக்குள் விடுத்த = காட்டுக்குச் செல்லும்படி அனுப்ப, பினவனோடே = தனக்குப்பின் தோன்றிய இலக்குமணனோடும்,ஞாலமாதொடும் = பூதேவியாம் சீதா பிராட்டி யாருடனும், புக்கு = கானகம் சென்று அவ் வனத்தினில் = அந்த கானகத்தில் வாழும் வாலி = வாழ்ந்து வந்த வாலி, படக்கணை தொட்டவன் = இறக்கும்படி அம்பினை எய்தவனும், நாடி = சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு இலங்கைசென்று, இராவணனைச்செகுவித்தவன் = இராவணனை அழித்த வருமான இராமபிரானாகிய திருமாலின், மருகோனே = மருகனே! ஆலகால படப்பை = ஆலகாலவிடம் உடைய பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய, மடப்பியர் = மடமாதர்கள் ஈரவாள் அற எற்றும், விழிச்சியர் = கண்களை யுடையவர்கள் யாவராயினும் நத்தி அழைப்பவர் = யாராக இருந்தாலும் அவர்களை வருந்தி அழைப்பவர்கள், தெருவூடே = தெருவின் நடுவில், ஆடிஆடி நடப்பதொர் பிச்சியர் = ஆடிஆடி

நடக்கின்ற தனிப் பைத்தியங்கள், பேசி ஆசை கொடுத்து மருட்டிகள் = நயமாகப் பேசி ஆசையை ஊட்டி மயக்குபவர்கள், ஆசை வீசி அணைக்கும் = ஆசையெனும் வலையை வீசி தம் கொங்கைகளுடன்சேர்த்து அணைக்கும் தன்மையர், பலரூடே = பலர்களுடைய மத்தியிலே, மாலை ஓதி விரித்து முடிப்பவர் = இயல்பாகக் கூந்தலை அவிழ்த்து முடிப்பவர்கள், சேலை தாழ நெகிழ்த்து = புடவை கீழே தாழும்படி தளர்த்தி, அரை சுற்றிகள் = இடையில் சுற்றிக் கொள்பவர்கள், வாசம் வீசும் மணத்தில் மினுக்கிகள் = நல்ல வாசனை வீசும் நறுமணங்களைப் பூசிக்கொண்டு மினுக்குபவர்கள் உறவாலே = தங்களது சம்பந்தத்தினால், மாயை ஊடு விழுத்தி = மாயையின் உள்ளே விழும்படி அழுத்திகள் = அழுத்துபவர்கள் ஆகிய விலைமாதர் களின் காம போகவினைக்குள் = காம போகச் செயல்களில் ஈடுபட்டு வினைகளில் சிக்கி, உனை பணி வாழ்வு இல்லாமல் = உம்மைப் பணிந்து போற்றிப் புகழ்ந்து வாழும் வாழ்க்கை இல்லாமல், மல சனனத்தினில் உழல்வேனோ = மும்மலங்களுக்கும் இருப்பிடமான பிறவியைப் பெற்று உழல்வேனோ?

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனை திருமாலின் மருகனே! என்று அழைக்கும் முகத்து, கம்ப நாட்டாழ்வார் 13000 பாடல்களில் பாடிய இராம காதையை 9 அடிகளில் சுருக்கமாகவும் வெகு அழகாகவும் சொல்லியுள்ளது போற்றலுக்கு உரியது.

"மேலை வானோர் உரைத்தசரற் கொரு பாலனாகி உதித்து"

முன் ஒரு சமயம் தேவேந்திரனுக்கும் சம்பராசுரன் என்ற அசுரனுக்கும் உண்டான போரில் தசரத சக்கரவர்த்தி தேவலோகம்சென்றுசம்பராசுரனை அழித்து தேவலோகத்தைக் காப்பாற்றிக் கொடுத்தார். அதன் காரணமாக தசரதச் சக்கரவர்த்தி தேவர்களால் போற்றப்பட்டார்.

எனவே, தேவர்களால் போற்றப்பட்ட தசரத சக்கரவர்த்திக்கு, ஒப்பற்ற பாலனாக உதித்தான் என்கின்றார்.

இந்த சம்பாராசுர யுத்தத்தின்போது ஸ்ரீ இராமபெருமானின் மாற்றுந்தாய் ஆன கைகேயி அம்மையாரும் தசரதச் சக்கரவர்த்தியுடன் சென்று அவருக்கு உதவியதன் காரணமாக இரண்டு வரங்களைச் தசரத சக்கரவர்த்தியிடம் பெற்றாள். அந்த இரண்டு வரங்கள் கொண்டு தான் இராமன் காடாளவும் பரதன் நாடாளவும் செய்தாள் கைகேயி.

'குன்றளிக்குங் குலமணித்தோள் சம்பரனைக் குலத்தொடு சென்று நீ கொண்டு
அன்றளித்த அரசன்றே புரத்தான் இன்று ஆள்கின்றது அரச என்றான்"

(க. ராமா)

இதனால் அன்று மானிடரும் சர்வ சாதாரணமாக தேவலோகம் சென்று வந்தார்கள் என்பது தெளிவு. முசுகுந்த சக்ரவர்த்தியும் தேவலோகம் சென்று தேவர்களுக்கு உதவியுள்ளார்.

அடுத்து தசரதச் சக்ரவர்த்தியின் பாலனாய் அவதாரம் செய்த ஸ்ரீ ராமர் விசுவாமித்ர முநிவர்களின் யாகத்தைக் காத்து ரட்சித்ததை,

"ஓர் முநிக்கொரு வேள்வி காவல் நடத்தி"

என்றும், அதன்பின் அகல்யாதேவியின் சாபவிமோசனம் செய்து கல்லைப் பெண் உருவாக்கிய செயலை,

"அகற்கு உரு அடியாலே"

என்றும் மிதிலை மாநகர் சென்று சிவதனுசை முறித்து சீதாபிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டு அயோத்தி அடைந்ததை,

"மேவியே மிதிலைச் சிலை செற்று மீன்
மாது தோள் தழுவிப் பதிபுக்கிட"

என்றும், அழகுபடக் கூறி மாற்றாந்தாய் கைகேயி அம்மையார் தந்தையாரிடம் பெற்ற இருவரம்கொண்டு பணித்த பணியை தந்தையின் வாக்கை பரிபாலனம் செய்ய தம்பி இலக்குமண-னும் சீதா பிராட்டியும் பின் தொடர கானகம் சென்றதை,

"வேறு தாயடவிக்குள் விடுத்தபி னவனோடே
ஞால மாதொடு புக்கு"

என்றும் அவ்வனத்தில் வாலியைக் கொன்று சீதையை நாடி இலங்கை சென்று இராவணனை அழித்து சீதையை மீட்டார் என்பதை

'அவனத்தினில் வாழும் வாலி படக்கணை தொட்டவ
னோடி ராவணனைச் செகு வித்தவன் மருகோனே'

அழகுபடக் கூறி அந்த ஸ்ரீ இராமபெருமானாகிய திருமாலின் மருகனே என்று முருகனைப் போற்றுகின்றார்.

இத்திருத்தலத்தில் பாடியுள்ளதான "அந்த வேட்கை" எனத்தொடங்கும் முதல் திருப்புகழில்

"கொத்து நூற்றுப் பத்து நாட்டக்
கொற்ற வே(ந்)த்து

'ஆயிரம் கண்களை உடையவன் தேவேந்திரன்' என்று கூறிய அருட்செல்வர் அருணகிரியார் இப்பாடலில் தேவேந்திரன் ஆயிரம் கண்களைப் பெற்றதற்கான அகல்யா சாபவிமோசனக் கதையையும்

"அ கற்கு உரு அடியாலே"
என்னும் தொடர் கொண்டு ஞாபகப்படுத்துகின்றார்.

கௌதம முநிவரின் மனைவி அகலிகையை, இந்திரன் கௌதமர் வடிவில், முநிவர் இல்லாத சமயத்தில் வந்து அகலிகையைத் தழுவினன். அதனால் கௌதமர் சாபத்தால் அகலிகை கல் ஆயினள். தேவேந்திரன் உடல் முழுவதும் ஆயிரம் பெண் குறிகளைப் பெற்றான். அந்த அகலிகை ஸ்ரீ இராமபிரானது திருவடிபட்டு மீண்டும் பெண் உரு பெற்றாள். இந்திரனும் முநிவரைத் தம் தவறுக்கு மன்னிக்கும்படி வேண்ட அக்குறிகள் ஆயிரம் கண்கள் ஆயின என்பது புராணம்.

இப்பாடலையும் அருட்செல்வர் அருணகிரியார் நம் பொருட்டே தம்மை வியாஜமாகவைத்து வழக்கம் போல் பாடலின் முன்பகுதியில் பொது மாதர்களின் அடாத செயல் களை விரிவாக எடுத்துக்கூறி, திருமுருகனை நோக்கி, தேவர்களால் பெரிதும் போற்றிப் புகழப்படும் தசரத சக்ரவர்த்தியின் புதல்வனாய் பூலோகத்தில் அவதாரம் செய்து ஒப்பற்ற தவசிரேட்டர் ஆன விசுவாமித்ர முநிவரின் யாகத் தைக் காத்து ரட்சித்து சாபத்தின் காரணமாகக் கல்லாய் கிடந்த கௌதம முனிவரின் மனைவி அகலிகையை பாத பரிசத்தால் பெண் உருவாக்கி மிதிலை மாநகர் உற்று சிவ தனுசை முறித்து சீதாபிராட்டியைத் திருமணம் செய்துகொண்டு அயோத்தி மாநகர் உற்று, மாற்றுந்தாய் கைகேயி அம்மை யார் கானகம் செல்லும்படி பணிக்க தம்பி இலக்குவனனுடன் வைதேகியும் பின்தொடர கானகம் சென்று அக்கானகத்தில் வாழ்ந்த வாலியை வதைத்து, சீதையைநாடி இலங்கை சென்று

இராவணனை அழித்த ஸ்ரீ இராமபிரானுன திருமாலின் மருகரே! ஞான தேசிகரான சற்குருவே! உத்தமமான வேலவரே! நெரூர் என்னும் திருத்தலத்திலும் கோயில் கொண்ட வித்தகரே! 'நாகமாமலை' என்னும் (நாகம் போல் உருவம் கொண்ட மலையினை உடைய) திருச்செங்கோட்டில் புகழ் பெற்று நின்ற கோலத்தில் அருள் பாலிக்கும் பெருமையிற் சிறந்த செங்கோட்டு வேலவரே! விலை மாதர்களின் காம போக வினைக்குள் சிக்கி உம்மைப் போற்றிப் பணியும் நல் வாழ்வு அற்று மும்மலங்களுக்கும் இடமான இம் மாயப்பிறவியைப் பெற்று பிறப்பதும் இறப்பதும் பிறப்பதும் இறப்பதுமாக உழல்வேனே? மாதர் ஆசை அற்று உமது மலரடியைப் பற்றிப் போற்றிப் பணிந்திட பணித்திடுவாய் என வேண்டும் முகத்து நம்மையும் நோக்கி, வேசியர்களின் விபரீதச் செயல்கள் பற்றி விவரமாக இப்பாடலின் முன்பகுதியில் விவரித்துள்ளது கண்டு வேசியர் ஆசை வேதனை தரும் என்பதை உணர்ந்து அவ்வாசைகளை அறவே மறந்து மாமயிலோன் மலரடிபற்றி உய்வீர் என அரிய உபதேசத்தையும் சொல்லாமல் சொல்லுகின்றார் அருட்செல்வர். அவர்வழி பற்றிநிற்போம்.

சந்தம் நோக்கி 'தசரதர் கொரு' என்பது 'தசரற்கு' எனத் திரிந்துள்ளது.

நெருவைப்பதி = இத்திருத்தலம் கருவூருக்கு வடக்கே ஆறு மைல் தூரத்தில் காவேரியாற்றின் தென் கரையில் உள்ளது. இவ்வூரில்தான் சதாசிவபிரம்மேந்திரர், சமாதி இருக்கின்றது ரயில் நிலையம் உள்ளது.

நாகமலை = சர்ப்பகிரி, = உரககிரி = சர்ப்ப கோத்ரம், உரகசிகரி என்பன திருச்செங்கோட்டில் உள்ள மலையின் காரணப் பெயர்கள். இந்த மலையை, மேலவீதியிலிருந்து பார்த்தால் நாகம் ஒன்று படுத்து இருப்பது போல் தோன்றும். அதனுல் இம்மலை நாகமலை என்று அழைக்கப்படுகிறது.

திருமுருகனே ஒரு சமயம் ஆயர் சிறுவனுக வந்து மலையின் பெயர் நாகமலை தான் என்பதை ஊர்ஜிதம் செய்ததாக கொங்கு மண்டலம் சதகம் பேசும்.

ஒரு சமயம் அகந்தை மிக்க கொண்ட பிரதிவாதி பயங்கரன் என்ற தமிழ் பண்டிதர், திருச்செங்கோட்டை நோக்கி வெண்குடை மேளதாளங்கள் புடைசூழ பல்லாக்கில் வந்து கொண்டிருந்தார். திருச்செங்கோட்டை நெருங்கவும்

நாகம்போல் தோற்றம் தரும் மலையைக் கண்டு இந்நாகம் படம் எடுத்து ஆடாததென்? என்னும் கருத்து தோன்ற

"சமர முகத்திருச் செங்கோடு சர்ப்பசியில மென்ன
அமரிற்படம் விரித்தாடத தென்னை"

என்று முதல் இரண்டு அடிகளைப் பாடி அதற்குமேல் அப்பாடலை முடிக்க முடியாது முழித்தார். அவ்வமயம் ஆங்கு உற்ற ஆயர் சிறுவன்

"அஃது ஆய்ந்திலையோ!
நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமுருகன் மயில்வாகனம் கொத்துமென்றே"

எனப் பாடலைப்பாடி பூர்த்தி செய்ததாகவும் அப்படி, ஆயர் சிறுவனாக வந்து பாடியது திருச்செங்கோட்டு வேலவனே என்பர்.

5

தனந்தாத் தனந்தாத் தனந்தாத் தனந்தாத்
தனந்தாத் தனந்தம் தனதான

இடம்பார்த் திடம்பார்த் திதங்கேட் டிரந்தேற்
றிணங்காப் பசிப்பொங் கனல்மூழ்கி-
இறுங்காற் கிறுங்கார்க் கிரும்பார்க் குநெஞ்சார்க்
கிரங்கார்க் கியற்றண் டமிழ்நூலின்;
உடம்பாட் குடன்பாட் டியம்பாத் தயங்காத்
துளங்காத் திடப்புன் கவிபாடி-
ஒதுங்காப் பொதுங்காப் பதுங்காப் பூகன்றேத்
துறும்பாற் குணக்கன் புறலாமோ;
கடந்தோற் கடந்தோற்ற றிந்தாட் கருந்தாட்
கணைந்தாட் கணித்திண் புயமீவாய்;
கரும்போற் கரும்போர்க் குளங்காட் டிகண்டேத்
துங் செங்கோட்டில் நிற்குங் கதிர்வேலா;
அடைந்தோர்க் குணந்தோர்க் களிந்தோர்க் கமைந்தோர்க்
கவிழ்ந்தோர்க் குணற்கொன் றிலதாகி-
அலைந்தோர்க் குலைந்தோர்க் கிளைந்தோர்க் கவந்தோர்க்
கறிந்தோர்க் களிக்கும் பெருமாளே.

(திரு. 371)

கடம்தோல் = மதம் பொழியும் யானை, கடம் தோற்ற = வள்ளிமலைக்காட்டில் எதிர்பட்டதைக், அறிந்தாட்கு = கண்ட

வள்ளி அம்மையார், அரும்தாட்கு = உம்முடைய அருமையான திருவடிகளைப், அணைந்தாட்கு = பற்றிக்கொண்ட அவ்வம்மையாருக்கு அணிதிண்புயம் ஈவாய் = புஜபல பராக்ரமம் மிக்க உமது அழகிய பன்னிரு தோள்களையும் தழுவிடத்தந்தவரே! கரும்போற்கு = கரும்புவில்லை ஏந்திய மன்மதனுக்கு, அரும் போர் குளம் காட்டி, = அரிய போராக நெற்றிக்கண்ணைக் காட்டிய சிவபெருமான், கண்டும் ஏத்தும் = கண்டு போற்றும் செங்கோட்டில் = திருச்செங்கோட்டு மாமலையின் மீது நிற்குங் கோயில் கொண்டு நின்ற கோலத்தில் இருக்கும் கதிர்வேலா = கதிர்வேல் தாங்கிய வேலவரே! அடைந்தோர்க்கு(ம) = உன்னைச் சரண் அடைந்தவர்களுக்கும் உணர்ந்தோர்க்கும் = உணர்ந்து கொண்டவர்களுக்கும் அளிந்தோர்க்கு = கருணையுள்ளம் உடையவருக்கும், அமைந்தோர்க்கு = மன அமைதி பெற்றவர்களுக்கும், அவிழ்ந்தோர்க்கு = பக்தியால் உள்ளம் நெகிழ்ந்தவர்களுக்கும் உணற்கு ஒன்று இலதாகி = உண்பதற்கு ஏதும் உணவு அற்றவர் ஆகி, அலைந்தோர்க்கும் = அலைகின்றவர்களுக்கும் குலைந்தோர்க்கும் = நிலைகுலைந்து போனவர்களுக்கும் இளைந்தோர்க்கும் = கவலையால் வாடுபவர்களுக்கும், அலந்தோர்க்கும் = அல்லல் உற்றவர்களுக்கும், அறிந்தோர்க்கும் = சகலமும் அறிந்த ஞானிகளுக்கும் அளிக்கும் பெருமாளே! = திருவருள் புரியும் பெருமையிற் சிறந்தவரே! இடம் பார்த்து இடம் பார்த்து = (எங்கு எப்போது யாரிடம் சென்றால் பொருள் கிடைக்குமென்று) ஒவ்வோர் இடமாகப் பார்த்துத் தேடிச் சென்று, இதம் கேட்டு = அவர்களுடைய சமயம் அறிந்து, இரந்து ஏற்று = யாசித்து பொருள்பெற்று, இணங்காப் பசி பொங்க = ஒத்து உழைக்காத பசி அதிகரித்துப், அனல் மூழ்கி = பசித் தீயில் மூழ்கி வாடி, இறும் காற்க்கு = இறக்கும் நிலையில் இருந்தாலும், இறுங்காக்கு = உள்ளம் நெகிழாமல் இரும்பு ஆர்க்கு நெஞ்சார்க்கு = இரும்பைப் போல் கடினமான நெஞ்சை உடையவராய், இரங்கார்க்கு = (சற்றும் மனம் கசிவுற்று) இரக்கமே காட்டாதவர்களிடம், இயல் தண்தமிழ் நூலின் = இனிமையான இயல்தமிழ் நூலின், உடம்பாட்டுடன் = நியதிகளுக்கு உட்பட்டு, பாட்டு இயம்பா = பாடல்களைப் பாடாமல் தயங்காத்துளங்கா = தயங்காமலும் கலங்காமலும், திடப்புன்கவிபாடி = திடத்துடன் புல்லிய பாடல்களைப்பாடி, ஓதும் காப்பு ஒதுங்க = விரட்டுகின்ற காவல்காரனுக்குபயந்து ஒதுங்கியும், பதுங்கா = பதுங்கியும் இருந்து

புகன்று ஏத்தும் = பாடல்களைப் பாடிப் புகழும், உறும்பால் குணக்கு = இயல்பினை உடையவர் குணத்திற்கு, அன்பு உறலாமோ = ஆசைப்படலாமோ.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனை நோக்கி, "மன்மதனைத் தமது நெற்றிக்கண்ணால் எறித்த சிவபெருமானால் போற்றப்பட்டு திருச்செங்கோட்டு மலையில் வேலாயுதத்துடன் கோயில் கொண்டு இருப்பவரே! வள்ளிமலைச் சாரலில் தினைப்புனம் காவல் செய்த வள்ளியை அச்சமுறுத்தி அடைய நினைத்து, விநாயக பெருமானின் துணை கொண்டு அவரை மதயானையாக வந்து வள்ளி அம்மையாரை வழி மறிக்கச் செய்து உமது பாதம் பற்றிப் போற்றி உமது பன்னிரு புயங்களையும் தழுவச் செய்த வள்ளி மணாளரே! உம்முடைய குணாதிசியங்களை என் சொல்வேன்! உம்மைத் தஞ்சம் எனத் தாள் பணிந்தாரை அஞ்சேல் என ஆதரிக்கும் தெய்வம் நீர். கருணையுடையோர்க்கு கருணைக் கடல் நீர், மனம் அமைதி உற்றவர்க்கும் உள்ளம் நெகிழ்ந்தவர்க்கும் பக்திப் பரவசமூட்டும் பரமன் நீர். உணவு இன்றி அலைபவர்களுக்கும் நிலை அற்று இருப்பவர்களுக்கும், ஆறுதல் அளித்திடவே ஆறுதலை கொண்டீர். உமது கழலடி பற்றினோர்க்கு கவலையே வாராது. தவசிரேட்டர்களுக்கு மெய்ப்பொருள் உணர்த்தும் மெய்ஞானி நீர். உம்மை அண்டினோர் ஆதரிக்கப்படுவார் என்பது உண்மை. இதனை ஓர்ந்து உன் மலரடிப் பற்றிப் போற்றிப் பணிந்து உய்யும் வழியை நாடாது எங்கு எப்போது யாரிடம் சென்றால் பொருள் கிடைக்கும் என்று ஒவ்வொரு இடமாகப் பார்த்துத் தேடிச்சென்று, அவர்கள் சமயம் அறிந்து யாசித்துப் பொருள் ஏற்று ஒத்து உழைக்காத பசி அதிகரித்து பசித்தீயில் மூழ்கி வாடி இறக்கும் நிலையில் இருந்தாலும், உள்ளம் சற்றும் நெகிழாமல் இரும்பைப் போல் கடினமான நெஞ்சை உடை யவராய், சற்றும் மனம் கசிவு உற்று, இரக்கம் காட்டாதவர்களிடம், இனிமையான இயல் தமிழ் நூலின் நியதிகளுக்கு உட்பட்டு பாடல்களைப் பாடாமல், தயங்காமலும், கலங்காமலும் திடத்துடன் புல்லிய பாடல்களைப் பாடி, விரட்டுகின்ற காவல்காரனுக்குப் பயந்து ஒதுங்கியும் பதுங்கியும் இருந்து பாடல்களைப்பாடிப் புகழும் இயல்பினை உடையவர்கள் இருக்கின்றார்களே! இத்தகைய குணம் உடையோர் சகவாசமே கூடாது அவர்கள் நேசம் இல்லாதிருக்க அருள்வாய் என்று நம் நிமித்தம் தம்மை வியாஜமாக வைத்துப் பாடிய பாடல்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனின் திவ்யகுணங்களை மிகப்பெருமையாக அப்பெருமானை நீயே தஞ்சம் எனத் தாள் பணிந்தாரை அஞ்சேல் என ஆதரிப்பான். எளியார்க்கு எளியவன் கருணை உள்ளம் படைத்தோர்க்கு கருணாகரன். மன அமைதி உற்றவர்களுக்கும் உள்ளம் நெகிழ்ந்தவர்களுக்கும் பக்தி பரவசம் ஊட்டுபவன். உணவு இன்றி அலைபவர்களுக்கும் நிலையின்றி தவிப்பவர்களுக்கும் ஆறுதல் அளித்திடும் ஆறுமுகன் அவன். அவன் கழலடி போற்றினவர்களுக்கு கவலையே இருக்காது. தவசிரேட்டர்களுக்கு மெய்ப்பொருள் உணர்த்தும மெய்ஞானிவைதாரையும் வாழ வைக்கும் பெருமான் என்பதாக அவன் புகழைக் கூறி, நரர்களைப்பாடிப் போற்றுவதை விடுத்து நாதன் தாள் பணிவீர். நரனைப்போற்றி அவலமடையாதீர்கள் எவ்வளவு முறை அவர் வீடு ஏறிச்சென்று பாடிப்புகழ்ந்தாலும் ஏதும் ஈயார். ஆகையால் நரனைப்பாடாமல் நாலுகவித் தியாகன் நாகாசலனைப் போற்றுங்கள் என்று அறிவுரையும் சொல்லாமல் சொல்லுகிறார்.

அந்த நாள் தமிழ் புலவர்களின் அவலநிலையை தத்ரூபமாகச் சித்தரித்துக் காட்டியுள்ளதுடனும் அருட்செல்வர் அருணகிரியார் அவர்களைக் கண்டித்தும் உள்ளார். அருட்செல்வர் அருணகிரியாரும் செல்வந்தர்கள் வீடு தேடி அவர்களைப் பாடிப்பொருள் ஈட்டி வேசியர்க்கு ஈந்தார் என்பாரும் உளார்.

அப்படி அவர் பாடிப்பொருள் தேடி வேசியர்க்கு கொடுத்தார் என்று கூறும் நண்பர்கள் அந்த விதமாக அருணகிரியார் பாடிய பாடல் எதையும் எடுத்துக்காட்டாகக் காட்டினரில்லை. எனவே இது ஏற்கத்தக்கதல்ல. அக்கவிகளின் நேசம் அறவே வேண்டாம் என்று கண்டிப்பவர் அதனைச் செய்து இருக்கமாட்டார்.

அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங்கோட்டில் பாடிய திருப்புகழ்களில் சொற்களை வெகு அழகாக அமைத்து உள்ள சாதுர்யம் போற்றற்பாலது. இவைகள் மிகவும் சமத்காரமான பிரயோகங்களாக உள்ளன. ஒரே சொல்லுக்கு ஒரே சப்தமுடைய பதங்களைச் சந்தத்திற்கு ஏற்ப சாதுயர்மாக அமைத்து சப்த ஜாலம் கொண்டு அப்பதங்களுக்கு இருபொருளும் பொருந்த அமைந்துள்ளார். அந்த வகையில்

இந்தப் பாடலில் அந்த மாயாஜால வேடிக்கைகள் மிக அதிக மாக உள்ளது. அருட்செல்வர் அருணகிரிநாதர் திருமுருகன் திருவருள் கொண்டு தான் இந்த விதமாகப் பாடியுள்ளார் என்பது தெளிவு. ஆண்டவன் அருள் இல்லையேல் இப்படிப் பாட முடியாது.

இறுங் காற்கு இறுங்கார்
உடம் பாட்டுடன் பாட்டியம்பா
ஒதுங் காப்பு ஒதுங்கா
கடந் தோற் கடந் தோற்
கரும் போர் கரும் போர்

இந்த ஒரே சொற்கள் இரு பொருள்பட அமைக்கப் பட்டுள்ளன.

6

தனதன தனதன தனதன தனதன
தத்தான தந்த தனதான

கரையற உருகுதல் தருகயல் விழியினர்
கண்டான செஞ்சொல் மடமாதர்
கலவியில் முழுகிய நெறியினில் அறிவுக
லங் காம யங்கும் வினையேனும்
உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்
உன்பாத கஞ்ச மலர்மீதே—
உரவொடு புனைதர நினதரு அடியரொ(டு)
ஒன்றாக என்று பெறுவேனோ;
வரைஇரு துணிபட வினைபடு சுரர்குடி
வந்தேற இந்த்ர புரிவாழ—
மதவித கஜரத துரகத பததியின்
வன்சேனை மங்க முதுமீன
திரைமலி சலநிதி முறையிட நிசிசரர்
திண்டாட வென்ற கதிர்வேலா—
ஜெகதல மிடி கெட வினைவளவயலணி
செங்கோ டமர்ந்த பெருமானே

(திரு 370)

வரை இருதுணிபட = கிரவுஞ்சமலை பிளவுபட்டு இரு பாகமாகும் படியும், வினைபடுசுரர் = விலங்கும் சிறையும் இடப்பட்ட தேவர்கள், குடிவந்து ஏற = தேவலோகத்தில்

வந்து மீண்டும் குடிபுகவும், இந்தரபுரி வாழ=தேவலோகம் வாழ்வு பெறவும், மதவிதகஜரத துரகத பதாதியின்=பல விதமான மதம் கொண்டயானை ரதம், குதிரை, காலாட் படைகளின், வன்சேனைமங்க=வலிய சேனைகள் அழியவும் முதுமீன் திரைமலிசலநிதி=முன்னைய மீன் வாழ்ந்த அலைகள் நிறைந்த சமுத்திரம், முறை இட=முறையிடவும், நிசிசரர் திண்டாட=அசுரர்கள் திண்டாடவும், வென்ற கதிர்வேலா= வெற்றியினை அடைந்த கதிர்வேலவரே! ஜெகதலம்=பூதலம் முழுவதும், மிடிகெட=வறுமையற்று இருக்கும்படி விளைவள வயல் = விளைச்சலைக்கொடுக்கும் வளம் மிகுந்த வயல்களால் அணி செங்கோடு = சூழப்பட்ட திருசெங்கோடு எனனும் திருத்தலத்தில் அமர்ந்த பெருமாளே = கோயில்கொண்ட பெருமையிற் சிறந்தவரே! கரைஅற உருகுதல் திரு=(தங்களது பார்வையால் ஆடவர்களை) அளவுகடந்து உருகச்செய்யும் கயல்விழியினர் மீன்போன்ற கண்களையுடையவர்களும், கண்டு ஆன செம்சொல்= கற்கண்டு போல் இனிமையாகப் பேசும் சொற்களை உடையவர்களுமாகிய, மடமாதர்=விலைமாதர்களின் கலவியில் முழுகிய = சேர்க்கை இன்பத்தில் மூழ்கிய நெறியினில் = வழியில் அறிவு கலங்கா = அறிவு கலங்கி மயங்கும் வினையேனும் = மயங்குகின்ற வினையை உடைய வனின், உரையையும் அறிவையும் = பேச்சுகளையும் அறிவை யும்= உயிரையும் உணர்வையும் = உயிரையும் உணர்ச்சி களையும், உன் பாத கஞ்ச மலர் மீதே = உமது திருவடித் தாமரை மலர் மீது, உரவோடு புனைதர= மனோ பலத்துடன் அணிவித்திட, நினைதரும் = விரும்பும் அடியரொடு= அடியார்களுடன், ஒன்றாக என்று = ஒன்றுசேர்ந்து கூடி இருக்கும் பேற்றினை எப்போது, பெறுவேனோ= பெற்று உய்வேன்! அருள் செய்க.

முன்பாடலைப் போலவே இப்பாடலும் நம்மவர் நிமித்தம் நம்நலம் கருதித் தம்மை வியாஜமாக வைத்து பெறுவேனோ என்று முருகனை வேண்டுகிறார்.

அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனை நோக்கி முருகா! கிரவுஞ்சமலை பிளவுபட்டு இரண்டு பாகமாக ஆகும் படியும், அசுரர்களால் சிறையிடப்பட்ட தேவர்கள்சிறைமீட்கப் பட்டும், விலங்குகள் நீக்கப்பட்டும் தேவலோகத்தில் குடி புகவும், தேவலோகம் செழித்து தேவர்கள் நல்வாழ்வுபெறவும் மதம் மிகுந்த யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை

காலாட்படைகளாகிய நால்வகைப் படைகளைக் கொண்ட சூரனின் படைகள் அழிந்துபடவும், பூர்வம் ஒரு சமயம் திருமால் மீனாக வாழ்ந்த அலைகளையுடைய கடலினிடத்து சூரபன்மன் ஒளிந்துகொண்டதால் அக்கடலை வற்றச்செய்த தால், அக்கடல் முறையிடவும், அசுரர்கள் திண்டாடவும் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனார்த்தம் கதிர்வேலை விடுத்து வெற்றிகொண்ட வேலாயுதக் கடவுளே!

இப்பூதலத்திலே என்றும் வறுமை என்பது இல்லாத அளவுக்கு தான்யங்களின் விளைச்சல் அதிகமாக இருக்கும் அளவுக்கு வளம் பொருந்திய வயல்கள் எண்ணற்றவைகளால் சூழப்பட்ட திருத்தலமான திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்ட திருச்செங்கோட்டு வேலவரே என்று பிற்பகுதிப் பாடலில் வழக்கம்போல் போற்றி முற்பகுதியில் முருகனை நோக்கி முருகா! தங்களது பார்வையினால் ஆடவர்களது மனதை அளவுகடந்து உருகச் செய்யும் மீன் போன்ற கண்களையும் கற்கண்டுபோல் இனிமையாகப் பேசும் சொற்களையும் உடைய விலைமாதர்களின் சேர்க்கை இன்பத்தில் மூழ்கிய வழியில் அறிவு கலங்கி மயங்குகின்ற தீவினையேன், தாம் பேசும் சொற்களையும் அவர்களது அறிவையும், உயிரையும், உணர்வுகளையும் உமது திருவடித் தாமரைகளின் மீது மனோபலத்துடன் அணிவித்திட ஆவல் கொண்ட அடியார்களின் கூட்டத்துடன் கூடி அவர்களுடன் சேர்ந்து உன்னைப் போற்றிப் புகழ்ந்து பணியும் பேற்றினை எப்போது பெறுவேன் என்று முருகனை வேண்டுமுகத்து நம்மை நோக்கி, மாதர் ஆசையை மறந்து மாமயிலோன் பாதம் பற்றுங்கள். முருகன் அடியார்களின் கூட்டங்களில் இணக்கம் கொண்டு அவர்களைப் போலவே முருகனைப் போற்றி பணியுங்கள். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல் நீங்களும் மேன்மை பெறுவீர்கள் என்று அறிவுரைகளைச் சொல்லாமல் சொல்லுகிறார்.

"ஜெகதல மிடிகெட விளைவயல் அணிசெங்கோடு"

சோழநாட்டின் நெற்களஞ்சியம் என்று தஞ்சையையும் யானைகட்டி போர் (நெற்போர்) அடிக்கும் பாண்டியநாடு என்றும் சொல்வர் ஆனால் அருட்செல்வர் இந்த பூதலத்தின் வறுமையையே போக்கும் அளவுக்கு பயிர்கள் விளையக்கூடிய வயல்களால் சூழப்பட்டது திருச்செங்கோடு செல்வச்

செழிப்புற்றது என்று திருச்செங்கோட்டின் வளமையைப் புகழ்ந்து பேசுகிறார். திருச்செங்கோடு கொங்கு நாட்டைச் சார்ந்தது, கொங்குசெழித்தால் எங்கும் செழிக்கும் என்பர்.

செங்கோடு செம்மை+கோடு, செம்மை சிவந்த கோடு-மலை இம்மலையும் சிவந்த நிறமுடையதாகவே உள்ளது. முன் ஒரு சமயம் ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் ஏற்பட்ட போட்டியில் மகாமேரு மலையை, ஆதிசேடன் தனது படத்தை விரித்து மூடிக்கொண்டதாகவும், வாயு தன் பலம் கொண்டு மேருமலையை பெயர்த்திட முயன்றபோது, வாயுவின் வேகம் தாங்காது ஆதிசேடன் சற்றே தன் படத்தை மேலே தூக்க, மேருவின் சிகரங்களில் ஒன்று பிய்த்துக் கொண்டு வந்து வீழ்ந்து உள்ளது. ஆதிசேடனின் வாய் இரத்தம் பட்டு மேருமலையிலிருந்து பிய்த்துக்கொண்டு வந்த பாகம் சிவந்து உள்ளது. அதனால் தான் செங்கோடு எனப் பெயர் பெற்றது என்பர்.

"கலவியில் முழுகிய நெறியினிலறிவுக
லங்கமயங்கும் வினையேனும்
★ ★ ★ ★ நினைதருமடியரொ
டொன்றாக என்று பெறுவேனோ"

மாதர்களது காமக்கலவியில் மூழ்கி அறிவு மயங்கிய வினையேனும் என்பதாகத்தாம் மாதர் மயக்கில் மயங்கிக் கிடந்ததை எடுத்துக் கூறி தனக்காகவே, எப்போது அடியார்கள் கூட்டத்தில் என்னைச் சேர்ப்பாய் என்று, அருணகிரியார் திருமுருகனைக் கேட்பதாக வாதாடுபவர்களும் உள்ளார்.

அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனது திருவருள் பெறுவதற்கு முன்பு வேசியர்கள் நேசனாய்த் திரிந்தார் என்பது உண்மையே. ஆனால் திருமுருகனால் தடுத்தாட் கொள்ளப்பட்டதும் அடியார் திருக்கூட்டத்தவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர் ஆகிவிட்டார். மற்றவர்கள் அவருடன் இணையத் தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் அருணகிரியார் அடியார் கூட்டத்துடன் இணையும் பாக்கியம் தனக்கு என்று கிடைக்கும் என்று முருகனை வேண்டுவதாகக் கூறுவது பொருத்தமுடைத்தா என்பதை சற்றே சிந்திப்பீர்களாக.

மேலும் அருட்செல்வர் அருணகிரியார் கந்தர் அலங்காரம் 100வது பாடலில், திருமுருகன் தன்னைத் திருவடி—

யார்கள் கூட்டத்தில் சேர்த்துவிட்டார்கள். ஈகை என்பதையே சற்றும் நினைத்து பாராத, அறிவு அற்ற என்னைத் திருமுருகன் தனது திருவாடியார்களின் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டது எனது பாக்கியமே. அந்த பாக்யத்தால் எனது பிறவி அற்றுப் போய் இந்த உடல்சிறை விடுதலை பெற்று விட்டது எனது பிறவியும் ஒழிந்து விட்டது என்பதையும் காண்பீர்.

இடுதலை சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலிலாத் தொண்டரிற் கூட்டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவியற விச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாசவினை விலங்கே"

எனவே அருட்செல்வர் அருணகிரியார் திருப்புகழ் பாடல்களில் தனக்காக முருகனை வேண்டுவது இல்லை நமக்காவே தம்மை வியாஜமாக வைத்துப் பாடியுள்ளார் என்பது தெளிவு!

அருட்செல்வர் அருணகிரியார் கந்தர் அநுபூதி 37 ஆவது பாடலில் மனதினை முன்னிலைப்படுத்தி நமக்கு அறிவுறுத்தும் வகையில்

கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பத மேவலையே
புரிவாய்! மநனே பொறையாம் அறிவால்
அறிவாய்! அடியோடும் அஹந்தையையே

என்று கூறியதையும் மனதில் கொண்டு திரு அடியார்களின் திருக்கூட்டத்தில் சேர்ந்தால் நமது அகந்தை தாமாகவே அகன்றுவிடும்.

திருத்தொண்டர்களின் பெருமை பற்றிப் பேசும் புராணம் பெரிய புராணமாகும்.

'உமையோா இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

என்று ஔவைப் பிராட்டியார் தொண்டர்தம் பெருமையை திருமுருகனிடம் பறைசாற்றியதைக் காண்பீர்.

சூரியன் முன் நிற்கவும் அவனைச்சற்று பார்க்கவும் முயற்சிக்கலாம். ஆனல் சூரியனது வெப்பத்தைப் பெற்ற மணலில்

நிற்பது முடியாது. அதேபோல் ஆண்டவன் அருள் பெற்ற அடியார்களை எதிர்க்க முடியாது. ஈசனினும் அடியாரே மேம் பட்டவர்.

ஈசனெதிர் நின்றாலும் ஈசன் அருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்பதரிதாமே—தேசுவளர்
செங்கதிர் முன் நின்றாலும் செங்கதிர்வன் கிரணம்
தங்கு மணல் நிற்கரிதேதான்.

என்று அடியாரின் பெருமையை குமரகுருபர சுவாமிகள் நீதிவெண்பாவில் கூறியுள்ளார்.

திருவடியார்களின் கூட்டத்தில் சேர்வதால் கிடைக்கப் பெறும் பலன்கள தவம் யாகம் முதலானவை செய்தாலும் கிடைக்காது என்று ஸ்ரீமத் பாகவதத்தில் உத்தவருக்கு உபதேசிக்கிறார் ஸ்ரீகிருஷ்ணபகவான். ஆதிசங்கரரும் பஜகோவிந்தம் 9 ஆவது சுலோகத்தில்

ஸத்ஸங்கத்வே
நிஸ்ஸங்கத்வே
நிர்மோஹத்வே
நிஸ்சலதத்யே

நிஸ்ஸங்கத்வே
நிர்மோஹத்வம்
நிஸ்சலதத்வம்
ஜீவன் முக்தி

என்றதும் காண்பீர்.

7

தனத்தந் தானன தனத்தத் தானன
தனத்தந் தானன தனதான.

கலக்குங் கோதற வடிக்குஞ் சீரிய
கருப்பஞ் சாறெனு மொழியாலே —
கருத்தும் பார்வையும் உருக்கும் பாவிகள்
கடைக் கண் பார்வையில் அழியாதே;
விலக்கும் போதகம் எனக்கென் றேபெற
விருப்பஞ் சாலவும் உடையேன் நான்—
வினைக் கொண்டேமன நினைக்குந் தீமையை
விடற்கஞ் சேலென அருள்வாயே;
அலைக்குந் தானவர் குலத்தின் சேனையை
அறுக்குஞ் சூரிய வடிவேலா —
அழைத்துன் சீரிய கழற்செந் தாமரை
அடுக்கும் போதகம் உடையோராம்

சிலர்க்கன் றேகதி பலிக்குந் தேசிக
திருச் செங் கோபுர வயலூரா,
திதிக்கும் பார்வையின் மதிப்புண் டாகிய
திருச் செங் கோடுறை பெருமாளே!.

(திரு. 372)

அலைக்குந் தானவர் = தேவர்கள் முனிவர்கள் மக்கள் முதலானவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கிய அசுரர்களின் குலத்தின் சேனையை அறுக்கும் = வம்சத்தைச் சார்ந்த சேனைகளை அழித்திடும், கூரிய வடிவேலா = கூர்மைமிக்க வேலாயுதத்தைக் கொண்ட வடிவேலரே! நின் சீரிய-உம் முடைய சிறப்புற்ற, கழற்செந்தாமரை அடுக்கும் = செந்தாமரைத் திருவடிகளைப்பற்றிப் போற்றும், போதகம் உடையோராம் = ஞானத்தை உடையவர்கள், சிலர்க்கு = சிலருக்கு, அன்றே அழைத்து கதிபலிக்கும் = அப்போதே அழைத்து வீடுபேற்றினை அளித்திடும், தேசிகா = குருமூர்த்தியே! திருசெம் கோபுர வயலூரா, = திருமிகுந்த செவ்விய கோபுரமுடைய வயலூர் அரசே! திதிக்கும் பார்வையின் = நீர், காத்து அருளும் இந்த பூதலத்தில், மதிப்பு உண்டாகிய = சிறப்பினைக் கொண்ட திருச்செங்கோடு உறை = திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்ட, பெருமானே = பெருமையிற்சிறந்தவரே! கலக்கும் கோது அற = தெளிவின்மைக்கான சக்கைகளை நீக்கி வடிக்கும் = வடிக்கப்பட்ட சீரியகருப்பம் சாறு = சிறந்த கரும்பின்சாறு, எனும் மொழியாலே = என்று சொல்லும்படி இனிமையான மொழியால் பேசி, கருத்தும் பார்வையும் = உள்ளத்தையும் நோக்கத்தையும், உருக்கும் பாவிகள் = உருகச்செய்யும் பாவிகளான விலைமாதர்களின், கடைக்கண் பார்வையில் = கீழ் நோக்கும் பார்வையால் ஏற்படும் மயக்கில் மயங்கி, அழியாதே = அழிந்துபடாமல், விலக்கும் போதகம் = விலகச்செய்யும் நல் அறிவை, எனக்கென்றே பெற = எனக்கு மாத்திரமே பெறவேண்டும் என்ற, விருப்பம் சாலவும் = விருப்பத்தை மிகுதியும், உடையேன் நான் = உடையவன் நான், வினைகொண்டே = ஊழ்வினையின் காரணமாக,மனம் நினைக்கும் தீமையை = மனத்திலே நினைக்கும் இந்தத்தீய எண்ணத்தை, விடற்கு = விட்டு விடுவதற்கு அஞ்சேல் = நீ பயப்படாதே என்று அந்த தைரியத்தை அருள்வாய் = அடியேனுக்கு அருள்செய்வீராக! என்றுதான் தன்னலம் இல்லாதிருக்க வேண்டியுள்ளார்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திரு முருகனை நோக்கி, தேவர்கள் முநிவர்கள் மக்கள் முதலான யாவர்களையும் இம்சித்து துன்புறுத்திய அசுரர்களின் கொட்டம் அடங்க அந்த அசுரர்களின் வம்சத்தை அவர்களது சேனையுடன் அழித்திடும் ஆற்றல் மிக்க கூர்வேலைக்கொண்ட திருச்செங்கோட்டு வேலவரே! நீர் உம்முடைய சிறப்புற்ற செந்தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பற்றிப் போற்றும் ஞானம் உடைய ஒரு சிலருக்கு வீடு பேற்றினை அப்போதே அழைத்து அருள் புரியும் குரு மூர்த்தியாகத் திகழ்கின்றீர். அழகான சிறந்த கோபுரத்தை உடைய வயலூரிலும் கோயில் கொண்டு இருக்கும் அரசனும் நீயே. உம்மால் காத்து அருளப்படும் இந்த பூலோகத்தில் மிகவும் உயர்வாக மதிக்கப்படும் திருத்தலமான திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட பெருமையிற் சிறந்த செங்கோட்டு வேலவரே! தூசுகள் நீக்கி வடித்து எடுக்கப்பட்ட மதுரமான கரும்பின் சாற்றைப் போல் இனிமையாகப்பேசி ஆடவர்களின் உள்ளத்தையும் எண்ணத்தையும், உருகச்செய்யும் பாவிகளாகிய விலை மாதர்களின் கீழ் நோக்கும் பார்வையால் காம மயக்கத்தில் ஆழ்ந்து அழிந்து படாமல் விலகுவதற்கான நல் அறிவை நான்மாத்திரமே பெற வேண்டும் என்ற தன்னல விருப்பத்தை மிகுதியும் உடையவனாக உள்ளேன். வினையின் காரணமாக இந்த விதமாகத் தன்னலம் கொண்டு நினைக்கும் தீய எண்ணத்தை மறந்து தன்னலம் அற்று இருப்பதற்கு ஆன தைரியத்தைத் தாங்கள் தந்து அருள்புரிய வேண்டுமென்று நம் நிமித்தம் தம்மை வியாஜமாக வைத்தே பாடியுள்ளார்.

நம்மையும் நோக்கி, மாதர் மயக்கத்தில் வீழ்ந்து மாயாதீர்கள். எந்த ஒரு நலனைப் பெறுவதனாலும் தன்னலம் மட்டும் கொள்ளாதீர்கள். ஆண்டவனிடத்து அருள் வேண்டினும் தன்னலம் வேண்டாம். எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுங்கள். என்றதான சீரிய அறிவுரைகளையும் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

ஆனால், இப்பாடலுக்கு உரை கண்ட ஒரு உரையாசிரியர் அருணகிரியார் தன்னலமுடையவர் ஆனதால், தனக்காகவே இப்பாடலைப் பாடியுள்ளார். "போதகம் எனக்கென்றே பெற விருப்பஞ் சாலவும் உடையேன் நான்" என்றதைக் காண்பீர். அருணகிரியார், யாரும் பெறாத ஞானத்

தையும் வாக்குவன்மையும் பெற வேண்டும் என்ற விருப்பும் கொண்டிருந்தார். பிறருக்குக் கிட்டாதவகையில் சிறப்பாக தான் ஞானம் பெற்று விளங்கவேண்டும் என்று விரும்பு கின்றார் என்பதாகத் தன்னலம் மற்ற தகமை சான்றோரை திருச்செந்தூர் திருப்புகழ் "பருத்தந்தத்தினைத்த" என்று தொடங்கும் பாடலில்,

"எனக் கென்றப் பொருள் தங்க
தொடுக்கும் சொல் தமிழ் தந்திப் படியாள்வாய்"

என்னும் அடிகளை அவருக்குச் சாதகமாக எடுத்துக்காட்டி அருணகிரிநாதர் தன்னலமுடையவர் என்று சொல்லி அவருக்குத்தாழ்வைக் கண்டுள்ளார்.

அப்பொருள் தங்க = அன்று சிவபெருமானுக்கு உபதேசித்த அந்தப் பிரணவப்பொருள் பொருந்தி இருக்க தொடுக்கும் தமிழ்சொல் = பாமாலை தொடுப்பதற்கு வேண்டிய தமிழ்ச்சொல் அறிவை எனக்கு என்று தந்து = அடியேனுக்கு என்றைக்கு தந்து அருளி இபடி ஆள்வாய் = இப்பூமியில் அடியேனை ஆட்கொண்டருள்வாய்.

என்பதே, உரையாசியர் தமக்குச்சாதகமாக எடுத்துக்காட்டிய இரண்டு அடிகளின் பொருள். இதில் தன்னலம் எங்கு உள்ளது. மேலும் அருணகிரிநாதர் எனக்கு உள்ள தீய குணமான தன்னலம் போக்கி அருள்வாய் என்று முருகனிடத்தே முறையிட்டுள்ளார். ஆகையால் உரை யாசிரியரின் கூற்று ஏற்புடைத்தன்று.

சிலர்க்கன்றே கதிபலிக்குந்தேசிக:-

திருமுருகன் சீரிய செந்தாமரைமலர் போன்ற திருவடி களைப் போற்றிப் பணியும் ஞானசீலர்களில் சிலருக்கு அப்போதே அழைத்து வீடுபேற்றினை அளித்திடும் குரு மூர்த்தியாக இருப்பதால் அந்த ஞானத்தை முருகனைப் போற்றிப் பணிந்து நாமும் பெறுவோம்.

பாலிக்கும் என்ற சொல் பலிக்கும் என்று வந்துள்ளது.

திதிக்கும் பார்வையின் மதிப்புண்டாகிய திருச்செங்கோடு-

தாங்கள் காத்து அளிக்கும் இப்பூமியில் உள்ள முருகன் திருத்தலங்கள் திருச்செங்கோடே உயர்ந்ததாக மதிக்கப்படு கிறது என்று அருட்செல்வர் அருணகிரிநாதர் கூறுவது போல்

உண்மையிலேயே திருச்செங்கோட்டு முருகன் மற்ற எல்லா முருகன் கோயில்களைக் காட்டிலும் உயர்ந்த இடத்திலேயே கோயில் கொண்டு உள்ளார். திருசெங்கோடன், இம்மலை கடல் மட்டத்துக்கு மேல் 2000 அடி உயரத்தில் இருக்கின்றது.

8

தான தனத் தனதான

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீல அகத்திய ஞான தேனமுதைத் தருவாயே
மால்அயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே!

(திரு. 380)

இத்திருத்தலத்தில் அருட்செல்வர் அருணகிரியார் பாடியுள்ள பாடல்களில் மிகவும் சிறியதும் பொருள் பொதிந்ததும் இப்பாடலே.

மால் அயனுக்கு அரியானே = திருமாலுக்கும் பிரம்மனுக்கும் அறிதற்கு அறியவரே! மாதவரைப் பிரியானே = மகா தவசிரேட்டர்களைப் பிரியாது இருப்பவரே! நாலுமறைப் பொருளோனே = நான்கு வேதங்களின் உட்பொருளாய்த் திகழ்பவரே! நாககரிப் பெருமாளே = நாககிரி என்று சொல்லப்படும் (பாம்பு போன்ற வடிவுடை மலையாம்) திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்ட பெருமையிற் சிறந்தவரே, காலனிடத்து அணுகாதே = இயமன் இருக்கும் இடத்தைஅணுகாமல் அதாவது இறந்து படாமலும்,காசினியிற் பிறவதே = இனியும் மாதவின் கருப்பையுற்று இந்த பூமியில் பிறக்காமல் இருக்கவும், சீல அகத்திய ஞான = பயில வேண்டியதான நல் ஒழுக்கமாம் ஞானமாகிய, தேன் அமுதை = தேன் அமுதத்தை, தருவாயே = தந்து அருள் புரிவாயாக.

இப்பாடலையும் அருட்செல்வர் அருணகிரியார் நமக்காகவே தம்மை வியாஜமாக வைத்தே பாடியுள்ளார். அருட்செல்வர் அருணகிரியாரைத் திருமுருகன் தடுத்தாட் கொண்ட அன்றே அவருக்கு இனிப்பிறவா வரம் அளித்து விட்டார். ஆகையால் அருணகிரியாருக்கு தனக்காக இனி இப்பூமியில் பிறவாதவரம் வேண்டத்தேவை இல்லை. அவர் நமது வக்கீலாக இருந்து நமக்காகவே முருகனிடத்து வாதாடுகின்றார்.

முருகா நீ திருமாலுக்கும் பிரமனுக்கும் காண்பதற்கு அரியவன். ஆனாலும் மகா தவசிரேட்டர்களை விட்டுப் பிரியாதவன். உனது பக்தர்களுக்கு மிகவும் எளியவன். உன் அடியார்களுக்குஇறப்பு என்பதே கிடையாது. அதனால் அவர்கள் காலனிடத்து அணுகமாட்டார். இறப்பு இல்லாதபோது பிறப்பும் இல்லை. ஆகையால் காசினியில் பிறக்கவும் தேவை இல்லை. நான்கு வேதங்கட்கும் உட்பொருளாய்த் திகழும் நீர் இப்பூமியில் நாகமலை எனும் திருச்செங்கோட்டில் கோயில்கொண்டுள்ளதால் இவ்வுலக மக்கள் யாவரும் காலனுடு புகாமலும் காசினியிற் பிறவாமலும் இருப்பதற்கு அவர்கள் பயில வேண்டியதான நல் ஒழுக்கம் என்னும் ஞானத்தேன் அமுதத்தை அருள் செய்வீராக என்பதும் காண்பீர்.

ஆகையால் அன்பர்கள் எல்லோரும் திருப்புகழ் பாடல்களிலேயே அளவில் மிகவும் சிறியதும், அரும்பெரும் பொக்கிஷங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதுமான இப்பாடலை மனப்பாடம் செய்து காலையிலும் மாலையிலும் ஓதுவது மிகவும் அவசியம். காலனை அணுகோம் காசினியிற் பிறவோம்.

திருப்புகழின் சாரமே இப்பாடல் எனின் அது மிகையும் ஆகாது, உண்மைக்குப் புறம்புமாகாது.

நாலுமறைப் ... . பெருமாளே!

திருமுருகன் நான்கு வேதங்கட்கும் உட்பொருளாய் இருந்து கொண்டு திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்டு சிறந்து விளங்குகிறன் என்ற இக்கருத்தை அருட் செல்வர் அருணகிரியார் கந்தர் அநுபூதி 11 ஆம் பாடலில் "நாகா சல வேலவா நாலுக வித்தியாக" என்று புகழ்ந்துள்ளதும் போற்றற்பாலது.

நாககரி—இம்மலை பார்வைக்கு நாகம் போல் தோற்றுவதால் இந்தமலைக்கு பாம்பு மலை என்னும் பொருள்பட, அரவகிரி, உரகவெற்பு கட் செவிக்குன்றம், தந்திகிரி, பூசகபூதரம் நாகாசலம், நாகமலை, பனிமலை, நாகபூதரம், முதலாகிய பெயர்கள் உள்ளன.

நாகமலை என்ற பெயர் பேர்ந்ததற்கான காரணம் நான்காவது பாடலில் காண்பீர்.

சீல அகத்திய ஞானம்—சீலமுடைய அகத்திய முனிவருக்கு தாங்கள் திருத்தணிகை மாமலையில் செய்த ஞான உபதேசமான அமிர்தத்தை அருள்வாயாக எனவேண்டுவதாகவும் பொருள் கொள்ளலாம்.

9

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன தனதான.

கொடிய மறலியும் அவனது கடகமும்
மடிய ஒருதினம் இருபதம் வழிபடு
குதலை அடியவன் நினைதருள் கொடு பொரு மமர்காண

குறவர் மகள் புணர் புயகிரி சமுகமும்
அறுமு கமும் வெகு நயனமும் ரவிஉமிழ்
கொடியும் அகிலமும் வெளிபட இருதிசை யிருநாலும்

படியு நெடியன எழுபுணரியுமுது
திகிரி திகிரியும் வருகெனவருதகு
பவுரி வரும்ஒரு மரகததுரகத மிசையேறிப்-

பழைய அடியவ ருடன் இமையவர்கணம்
இருபுடையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவி வரமதில் அருணையில் ஒருவிசை வரவேணும்

சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவணி தரசிர தரபாரத்

தரணி தரதநு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுணதரபணி
சயில விதரண தருபுர சசிதரு மயில் வாழ்வே!

நெடிய உடலுரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகை யெழ இடியெழ நெடுவானும்

நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடிய வோர் படைதொடு
நிருப குருபர சுரபதிபரவிய பெருமாளே

(தி. 387)

சடில தர, = சடா பாரத்தை சிரசில் தாங்குபவரும், விட தர = ஆல்கால விடத்தைக்கண்டத்தில் கொண்ட நீலகண்டரும் பணிதர, = பாம்பினை ஆபரணமாகக்கொண்டவரும்,தரபரசுதர = மேன்மைமிக்க மழுவாயுதத்தை ஏந்தியவரும். சசிதர = சந்திரனை சடாபாகத்தில் தாங்கியவரும், சுசிதர = தூய்மையானவரும், இத்தமருகம் = இனிய நாதத்தையுடைய உடுக்கையையும். மிருகதர = மானையும் திருக்கரங்களில் உடையவரும், வனிதர = பார்வதி தேவியை இடப்பாகத்தில் தாங்கியவரும், சிரதர = பிரமனது சிரங்களை மாலையாகத் தரித்தவரும், பாரத்தரணிதர = பாரமான இப்பூதலத்தையே தாங்குபவரும், தநுதர = மேருமலையை வில்லாகக் கொண்டவரும், வெகுமுக குலதடினிதர = அதிகமான (ஆயிரம்) முகங்களையுடைய சிறந்த கங்கா தேவியைத் சடாமகுடத்தில் தாங்கியவருமான, சிவசுதா = சிவபெருமானின் குழந்தையே! குணதர = அருட் குணங்களை உடையவரே, பணிசயில—பாம்பு மலையாகிய திருச்செங்கோட்டில் கோயில் கொண்டவரே! விதரண = விவேக மூர்த்தியே! தருபுரசசிதரு = கற்பக விருட்சம் உள்ள. தேவ லோகத்து இந்திராணி அம்மையார் தந்த, மயில் வாழ்வே = மயிலாகிய தேவயானை அம்மையாரை வாழ்வித்த தெய்வயானை மணவாளரே! நெடிய உடல் உரு இருள்எழ = பருத்த உடலும் இருள்போல் கருத்த உருவமும், நிலவு எழ எயிறும் = நிலவு போல் பிரகாசிக்கும் வெண்ணிறப் பற்களும் கொண்டு, சுழல்விழிதழல் எழ = சுழல்கின்ற கண்களில்கோபத் தீப்பொறி பறக்கவும், எழுகிரி நெறிய = ஏழுமலைகளும் நெறிபடவும், அதிர்குரல் புகை எழ = அதிர்த்திடும் குரல்களில் புகை எழவும், இடி எழ = இடிபோல் முழக்கம் செய்து கொண்டு, நெடுவனும் நிலனும் = பெரிய விண்ணுலகமும் மண்ணுலகமும், வெருவர = அதிர்ச்சியடையும்படி, வருநிசிசரர்தளம் = வருகின்ற அசுரர்களுடைய சேனைகள், நிகிலசசலமும் மடிய = எல்லாம் முழுவதும் அழிந்து ஒழிய, ஓர்படை தொடு = ஒப்பற்ற சர்வசம்காரப் படையை ஏவிய அல்லது விடுத்த, குருபர = குருமூர்த்தியே, சுரபதி பரவிய பெருமாளே = தேவர்களது தலைவனான தேவேந்திரன் போற்றும் பெருமையிற் சிறந்த செங்கோட்டுவேலவரே, கொடிய மறலியும் = கொடியவனாகிய இயமனும், அவனது கடகமும் மடிய = அவனது கூட்டமும் மடிந்து போகும்படி., ஒரு தினம் = ஒரு நாள், இருபதம் வழிபடும் = உம்முடைய திருவடிகள் இரண்டையும் பற்றி வழிபடுகின்ற, குதலை அடியவன் = உம்முடைய குழந்தையாகிய அடியேன்

நினது அருள் கொடு = உம்முடைய திருவருட் கடாட்சத்திடம் கொண்டு, பொரும் அமர்காண = (இயமனுடன்) செய்யப் போகும் போரினைக் காண்புதற்கு, குறவர்மகள் குறவர்களின் குலக்கொழுந்தான வள்ளி தேவியார், புணர்புயகிரிசமுகமும் = தழுவுகின்ற தான மலை போன்ற புயங்களுடன் (தாங்கள்), அறுமுகமும் = ஆறுதிருமுகங்களும் வெகு நயணமும் = பதினெண் கண்களும், ரவிஉமிழ்கொடியும் = சூரியனை உதிக்கச் செய்யும் சேவற்கொடியும் கொண்டு, அகிலமும்வெளிபட = அகில உலகங்களும் வெளிப்பட்டு உடன்வர, இருதிசை இருநாலும் = பத்து திசைகளையும், படியும் = இப்பூமியையும் நெடியன எழுபுனரியும் — நீண்ட ஏழுகடல்களையும், முதுதிகிரி திகிரியும் = முதிர்ந்த சக்ரவாளகிரியையும், வருகென = சுற்றி வருக எனச்சொன்ன மாத்திரத்தில், வருதகு = சுற்றிவரும் ஆற்றலுடன், பவுரி வரும் = சுற்றி வருகின்றதான, ஒரு மரகத துரகத மிசையேறி = ஒப்பற்ற மரகத மயிலின் மீது யேறி அமர்ந்து, பழய அடியவருடன் = உம்முடைய பழய அடியவர்கள் பலருடன், இமையவர் கணம் = தேவர்களின் கூட்டமும், இரு புடையுமிகு = இரண்டு பக்கங்களிலும் மிகுதியாகச் சூழ்ந்துவர, தமிழ்கொடு மறைகொடு பரவிவர = தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலான தமிழ் பாடல்களும், வேத பாராயணமும் முழங்கிவர, மதில் அருணையில் = மதில்களால் சூழப்பட்ட திருவருணைக் கோயிலிலே, ஒரு விசை = ஒருமுறை வரவேணும் = (போரினைக்காண) வரவேண்டும்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரிநாதர், சடா பாரத்துடன் கூடியவரும், ஆலகால விடத்தைக் கண்டத்திலே கொண்ட நீலகண்டரும், நாக ஆபரணங்களைப் பூண்டவரும், மேன்மை மிக்க மழுவாயுதத்தைத் திருக்கரத்தே ஏந்தியவரும், சந்திரனைச் சடையில்வைத்தவரும், தூய்மையானவரும், இனிய நாதத்தைக் கொடுக்கும் உடுக்கையையும் மானையும் கரத்தில் கொண்டவரும், பார்வதி தேவியைத் தம்து இடப்பாகத்தே ஏற்றவரும், பிரமனது சிரசுகளை மாலையாகப் பூண்டவரும் மேரு மலையை வில்லாகக் கொண்டவரும் ஆயிரம் முகத்தன்னைகங்காதேவியை சடாமகுடத்தில் தாங்கி உள்ள வருமான சிவபெருமான் இவ்வுலகம் உய்ய அளித்த சிவகுமாரரே!

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்

கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்குதித்தனன் உலகம் உய்ய.

[கந்த புராணம்]

என்று திருமுருகனை அழைத்து, அருட்குணங்களை உடையவரே பணிசயிலம் எனப்படும் திருச்செங்கோட்டில் கோயில் கொண்டவரே! தேவேந்திரன் மனைவி சசிதேவியார் தந்த தெய்வயானை அம்மையாருக்கு வாழ்வளித்த தெய்வயானை மணவாளரே! நெடிய உருவமும் கருத்த உடலும் நிலவு போல் பிரகாசிக்கின்ற வெண்ணிறப் பற்களும் கொண்டு சுழல்கின்ற கண்களில் கோபம் தீப்பொறிபறக்கவும் ஏழுமலைகளும் நெறிபடவும் அதிர்த்திடும் குரல்களில் புகை எழவும் இடிபோல் முழக்கம் செய்து கொண்டுபெரிய விண்ணுலகமும் மண்ணுலகமும் அதிர்ச்சி அடையும்படி வருகின்ற அசுரர்களின் சேனைகள் எல்லாம், முழுதும் அழிந்து ஒழிய ஒப்பற்ற சர்வ சம்காரப் படையை விடுத்த குருமூர்த்தியே! தேவர்களது தலைவஞகிய தேவேந்திரன் போற்றும் பெருமையில் சிறந்த செங்கோட்டு வேலவரே! என்று போற்றிப் புகழ்ந்து, முருகா! கொடியோரஞகிய இயமனும் அவனது கூட்டமும் மடிந்துபோகும்படி ஒருநாள், உம்முடைய அருளைப் பெற்றதின் தைரியத்தால் உம்முடைய தாமரை மலர் போன்ற திருவடிகள் இரண்டையும் மறவாமல் என்றும் பணிந்து போற்றிடும் குழந்தையாகிய அடியேன் உம்முடைய திருவடி கடாச்சத்தின் திடம் கொண்டு இயமனுடன் செய்யப் போகும் போரினைக் காண்பதற்கு தாங்கள் குறவர்களின் குலக்கொழுந்து வள்ளி அம்மையாருடன் ஆறுமுகம் பன்னிரு தோள்கள் கரங்கள் பதினெண் கண்கள் சேவற்கொடி முதலானவை கொண்டு அகில உலகங்களும் வெளிப்பட்டு உம்பின் வர பெரிய எண் திசைகளும் மேல், கீழ், ஆகாயம் பூமி நீண்ட ஏழு கடல்கள் முதிர்ந்த சக்ரவாளகிரி ஆகியவற்றைச் சுற்றி வருக என்று சொன்ன மாத்திரத்தில் சுற்றி வரும் ஆற்றல் கொண்ட ஒப்பற்ற மரகத மயிலின் மீது அமர்ந்து உம்முடைய பழய அடியார்கள் பலருடன் தேவர்கள் கூட்டமும் உமக்கு இரு பக்கங்களிலும் சூழ்ந்து வர திருப்புகழ் தேவாரம் திருவாசகம் முதலான தமிழ் பாடல்களும் வேதபாராயணமும் கோஷித்துவர மதில்களால் சூழப்பட்ட திருவருணைக் கோயிலில் ஒரு முறை இயமனுடன் செய்யப் போகும் போரினைக் காண வருகை தரவேண்டும் என வேண்டி அழைக்கின்ருர்.

இந்த விதமாக இயமனுடன் தான் போரிடப்போவதைக் காணவர வேண்டும் என்று திருமுருகனை அழைக்கும் முகத்து திருமுருகன் திருவருள் பெற்ற அடியார்கள், இயமன் என்ன பிரமனையும் சாடுவார்கள். அவர்கள் இருக்கும் திக்கு நோக்கியும் காலன் வரமாட்டான். அவர்கள் காலனுக்கு பயப்படத் தேவையில்லை. அவர்களுக்கு இறப்பு என்பதே இல்லை, என்பதை நமக்கு அறிவுறுத்தவே இப்பாடலை நம் பொருட்டே பாடியுள்ளார்.

கந்தர் அலங்காரத்திலும் அருட்செல்வர் அருணகிரியார்.

பட்டிக் கடாவின் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ்வேற்பெரு மாள்திரு முன்பு நின்றேன்
கட்டிப்புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

(க.அ.64)

"பட்டிக்கடாவின் மேல் வரும் அந்தகா! உன்னைப்பார் அறிய வெட்டிப்புறங்கண்டலது விடேன். கட்டிப்புறப்படடா இக்கணமே நீ வெம்பி வந்திப்போது என்னை என்ன செய்ய முடியும் உனது அடங்கா கோபத்துடன் வரும் திரிசூலத்தைச் சத்திவாள் கொண்டு துண்டாகும்படி வெட்டி விடுவேன்" என்று இயமனைச்சாடி இதுபோல் பல பாடல்கள் பாடியுள்ளதுடன், பிரமனையும் சாடி,

பங்கேருகனெனைப் பட்டோலையிலிடப் பண்டுதனை
தங்காலி லிட்ட தறிந்திலனோ தனிவேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோனறியினினி நான் முகனுக்கிருவிலங்கே.

(க.அ.89)

கந்தனின் அடிமை நான் என்பதையும் மறந்து அந்த பிரமன் பட்டோலையில் என்னைப் பற்றி எழுதப்புகின் முன்னம் பிரமனது காலில் மட்டும் விலங்கு இட்ட வேலாயுதன் இப்போது கையிலும் சேர்த்து விலங்கு மாட்டுவான் என்றதும் காண்க.

மக்கள் யாவரும் காலநாடு புகாமல் கந்தலோகம் உற்றுஉய்ய வேண்டும், காலனிடத்து அணுகாதே காசினியிற் பிறவாதிருக்க வேண்டும், என்ற கருணையின் காரணமாகவே அருட்செல்வர் அருணகிரியார், இயமனுடன் தான் போரிடப்

போவதைக்காண வாரீர் எனத் திருமுருகனை அழைக்கும் இப்பாடல் கொண்டு, முருகனடியார்கள் அஞ்சுவது ஏதும் இல்லை. அவர்கள் அண்டையிலும் அணுக அஞ்சுவான் அந்தகன், காலன் அணுகாமல் காத்திடுவான் கந்தன். கந்தன் கழல் பற்றினோர்க்கு இல்லை காலபயம். வேலைப் போற்றிக் காலனை அகற்றுங்கள். கருப்பத்தூறிற்பிறவோம். கால்நாடு காணும் கந்தலோகம் செல்வோம்.காலனை எதிர்ப்போம்என்ப தான அறிவுரைகளைப் புகட்டுவதுடன் காலன் நம்மை அணுகக் கூடாது என்பதற்காக நமக்காகவே, கந்தர் அநுபூதியில்,

"கார் மாமிசை காலன் வரியிற் கலபத்
தேர் மாமிசை வந்தெதிரப்படுவாய்" என்றும்

"உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மயிலில் வரவேணும்."
(திரு 1077)

அந்த கனு மெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லென் வலியமயில்மேல் நீ
அந்த மறலி யொடு கந்த மனிதனம
தன்பனென மொழிய வருவாயே. (திரு 70.)

என்று திருப்புகழ் பாடல்களிலும்

நமன் வரிற் நீலச்சிகண்டியின் மேல் முருகா! நீ வரல் வேண்டும்; என்றதான அன்பு கட்டளையை அருட்செல்வர் அருணகிரியார் அருமுகனுக்கு நம் பொருட்டு இட்டு உள்ள தால், காலபயம் அற்றிடக் கந்தன் கழல் பற்றிப் போற்று வோமாக. நீலச்சிகண்டிகள் ஏறும் பிரான் கோலக்குறத்தியுடன் நம் துயர் போக்கவும் காலனை அகற்றவும் எந்நேரமும் வருவான் எப்போதும் காப்பான் என்பது உண்மை.

கந்தா! எனும் போது செஞ்சேவல் கொண்டு வருவான் திருசெங்கோடன்.

பணிசயிலம் — பாம்பு போல் காணப்படும் மலை. விளக்கம் பாடல் 4 ல் காணவும். வனிதர— என்பது வனிதைதா என வருவதற்கு பதில் கடைக் குறையாக வனிதர என ஆயிற்று.

திருமுருகனையன்றி மற்ற எவரையும் தனித்துப்பாடாத தன்மை கொண்ட அருட்செல்வர் அருணகிரியார் இப் பாடலிலும் சிவசுதசிவபெருமானின் குமாரனே! என்று திருமுருகனை அழைக்கும் முகத்து சிவபெருமானை மிகவும் அழகுபட சிவநேசர்களும் போற்றுத வகையில்

சடிலதர, விட்தர, பணிதர, தர
பாசுத்ர, சசிதர, சுசிதர, இத
தமருக மிருகதர, வனிதர, சிரதர பாரத்
தரணிதர, தநுதர வெகு முககுல
தடினிதர, சிவசுதா"

என்று போற்றிப் புகழ்ந்துள்ளது போற்றற்பாலது. இதில் தர என்பது பதின் மூன்று முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது காண்பீர். இந்த விதமாகச் சொற்சாதுர்யங்களை அதிகமாக திருச்செங்கோட்டில் பாடிய பாடல்களில் உபயோகித்து இத்திருத்தலத்தில் பாடிய பாடல்களுக்கு ஓர் தனிப் பெருமையைத் தந்து உள்ளார்.

ஒருமரகத துரகத மிசை—ஒப்பற்ற மரகத நிறம் உடைய குதிரையாகிய மயிலின் மீது என்பதாம்.

இங்கு துரகதம்—குதிரை மயிலாக வந்துள்ளது, இந்த மயிலின் ஆற்றலை அருட்செல்வர் அருணகிரியார் வெகு அழகாக,

"இருதிசை இருநாலும்
படியுநெடியன எழுபுணரியுமுது
திகிரிதிகிரியும் வருகென வருதகு
பவுரிவரு மொரு மரகத துரகதம்"

என்று திருமுருகனின் மயிலாகிய குதிரையின் ஆற்றலைக் கூறி அந்த ஆற்றல் மிக்க மயிலின் மிசை அமர்ந்துவரவேண்டுமென அழைக்கின்றார் முருகனை.

இப்பாடலில் "பரவிவரமதில் அருணையில்" என்பதற்கு பதிலாக "பரவவருமதில் அருணையில்" என்ற பாட பேதம் உள்ளது. இப்பாட பேதத்தால் பாடலின் பொருளில் எந்த விதமான மாற்றமும் ஏற்படுவதற்கில்லை.

இந்தப் பாடலுக்குப் பொருள் கண்ட திருப்புகழ் விரிவுரை ஆசிரியர் ஆறாவது தொகுதி பக்கம் (194-200.) ல் "பரவ வருமதிலருணையில்" என்பதை பரவ + வரும் + அதில் + அருணையில் எனக்கொண்டு வரும். அதில்—வந்தது போல், முன்னே சொல்லிய வண்ணமாக முன் தனக்குச் காட்சி தந்தது போல், கூற்று வனுடன் பொருது அவனை மடியச் செய்யும் வீரப் போரைக் காண்பதற்கு இன்னொரு விசை வரவேணும் என்றும்

திரு தணிகைமணி செங்கல்வராய பிள்ளை அவர்கள், அவரது முருகவேள் பன்னிரு திருமுறை தொகுதி 2-ல் பக்கம் 487-ல், "அன்று அடியேனை ஆட்கொள்ள அருணையில் வந்தது போல் ஒருமுறை வந்தருள வேண்டும்." (யமனோடு அடியேன் செய்யும் போரினைக் காணவேணும்) என்றும் அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும் என்ற புத்தகத்தில் பக்கம் 54-ல் "நீ முன் அருணையில் ஒரு முறை மகாசபையில் வந்தது போல் மயில் மீதேறிப் பழைய அடியார் கூட்டத்துடன் தமிழ் முழங்க மறை முழங்க வரவேணும்" என்றும் விளக்கம் கண்டுள்ளார்கள்.

முன் அருணையில் வந்தது போல் மீண்டும் ஒரு முறை வரவேண்டும் எனக் காணும் இவ்விருவர்களின் பொருளும் பொருத்தமுடையதாகப் படவில்லை.

திருமுருகன் திருவருணையில் திருவருட் செல்வர் அருணகிரிநாதரின் முன் தோன்றி ஆட்கொண்டது இரண்டு முறையாகும்.

ஒன்று அருணகிரிநாதர் அழைக்காமலே அவர் திருவண்ணாமலை ஆலயத்தின் கோபுரத்தின் மீது ஏறி உடலுயிர் விடுத்த போது முன்தோன்றி சயிலம் எறிந்த வேலினைக் கைக்கொண்டு உலகம் அறிய ஆட்கொண்டது.

இதனை அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்சிராப்பள்ளியில் பாடிய திருப்புகழில்,

"சயிலம் எறிந்தகை வேற்கொடுமயிலினில் வந்தெனை
யாட் கொள்ல், சகமறியும்படி காட்டிய குருநாதா."
(திரு, 331)

என்று குறிப்பிட்டுள்ளார்.

மற்றொன்று, அருட்செல்வர் அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் தெய்வம் காட்டும் நிகழ்ச்சியில் ஆலயத்தில் கூட்டப்பட்ட சபைக்குத் திருமுருகனை வந்து அருளி, காட்சி தரும்படி வேண்டிக்கொண்டது. அதற்கு இசைந்து திருமுருகனும் சற்றும் தாமதியாமல் ஒரு நொடியில் திருவருணை உற்று அருணகிரிநாதரை உலகறிய ஆட்கொண்டான்.

இதனை அருட்செல்வர் அருணகிரியார் விருத்தாசலம் திருப்புகழில்,

"உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒரு நொடி தனில் வரு மயில் வீரா"

(திரு 755)

எனப்புகழ்ந்து போற்றியுள்ளார்.

முன்னது அழையாமலே ஆறுமுகன் ஆட்கொண்டதாகும். இதன் காரணமாகத்தான் அருட்செல்வர் அருணகிரிநாதர் திருத்தலயாத்திரை மேற்கொண்டதால் இந் நிகழ்ச்சி தலயாத்திரைக்குமுன் ஏற்பட்ட நிகழ்ச்சியாகும். எனவே இந்நிகழ்ச்சியை அருட்செல்வர் அருணகிரிநாதர் தமது திருச்சிராப்பள்ளித் திருத்தல யாத்திரையின் போது, திருச்சிராப்பள்ளி திருப்புகழில்,

"சயிலம் எறிந்தகை வேற்கொடு மயிலினில் வந்தெனை
யாட் கொளல் சகமறியும்படி காட்டிய குருநாதா"

[திரு 331]

என்று குறிப்பிட்டுள்ளார்.

பின்னது தெய்வம் காட்டும் நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங்கோட்டை தரிசித்த பின்னரே நடந்த நிகழ்ச்சியானதால் அதைப்பற்றி திருச்செங்கோட்டுப் பாடலில் பேசமுடியாது.

திரு தணிகைமணி அவர்கள் அவருடைய அருணகிரிநாதர் வரலாறும் நூலாராய்ச்சியும் என்ற புத்தகத்தின் பக்கம் 20ல் "இங்ஙனம் சபையில் முருகபிரானை வர வேண்டிப்பாட, முருகவேளும் வேண்டினவாறே ஒரு நொடிப்பொழுதிற் சபையில் தோன்றித்தரிசனம் தந்து அருணகிரியாரைத் தாம் ஆட்கொண்டதை உலகறியப் புலப்படுத்தினர்'' என்பது

"சயிலம் எறிந்தகை வேற்கொடு மயிலினில் வந்தெனை
யாட் கொள்ல் சகமறியும்படி காட்டிய குருநாதா"

[திரு 331]

என்வரும் திருச்சிராப்பள்ளிப் பதிகத்தாலும்

"உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில்
ஒருநொடி தனில் வரும் மயில் வீரா"

[திரு 755]

என்னும் விருத்தாசலத்துப்பத்தகத்தாலும் மற்றவும் அறியக்கிடக்கின்றது. இந்த நிகழ்ச்சியைத் திருச்செங்கோட்டுப் பதிகம் ஒன்றில் அருணையில் ஒருவிசை பரவ வருமதில் (வந்தது போல) திருப்புகழ் 387—என்னும் அடியிற் குறிப்பித்துள்ளார் எனக்கண்டுள்ளார்.

இக்கூற்று ஏற்பதற்கில்லை. திருச்செங்கோடு திருத்தல யாத்திரை முடிந்த பின்பு தான் திருவண்ணாமலையில் தெய்வம் காட்டும் நிகழ்ச்சி நடந்துள்ளதால் அந்த நிகழ்ச்சியை "முன் வந்தது போல" என்று முன் கூட்டியே சொல்லமுடியாது. இது முரண்பாடாக உள்ளது.

ஆகையால் "பரவ வருமதில் அருணையில்" என்ற தொடருக்கு "வரும் அதில்" எனக்கொண்டு முன் வந்தது போல் எனப்பொருள் காணாது பரவிவரும் மதில் சூழ்ந்த அருணையில் ஒருமுறை வரவேண்டும் என்று பொருள் கொள்வதே சர்ச்சைகளுக்கு இடம் இல்லாமல் இருக்கும்.

10

தானா தானா தானா தானா
தானா தானத் — தனதான

தாமா தாமா லாபா லோகா
தாரா தாரத் — தரணீசா

தானா சாரோ பாவா பாவோ
நாசா பாசத் — தபராத

யாமா யாமா தேசா ரூடா
யரா யாபத் — தெனதாவி

யாமா காவாய் தீயே நீர்வீர்
யாதே யீமத் — துக்லாமோ

காமா காமா தீனா நீனா
காவாய் காளக் — கிரியாய்கந்

கானா லீலா பாலா நீபா
காமா மோதக் — கனமானின்

தேமார் தேமா காமி பாகி
தேசா தேசத் — தவரோதுஞ்

சேயே வேளே பூவேகோவே
தேவே தேவப் — பெருமாளே

[திரு 381.]

தாமா = மலர் மாலைகளை அணிபவரே!, தாம ஆலாபா = இதசல்லாபரே, லோக ஆதாரா = லோகங்கள் யாவற்றிற்கும் ஆதார புருஷரே!, தாரம் தரணிஈசா = கடல் சூழ்ந்த பூமண்டலத்தின் அதிபரே, தான ஆசாரோ = தானமும் ஆசாரமும் உடையவர்களால், பாவா = தியானிக்கப்படுபவரே, பாவோ நாசா = அடியார்களின் பாவங்களை நாசம் செய்பவரே, காமா = அடியார்களின் விருப்பங்களை, காமாதீனு = காமதேனுவைப் போல் கேட்டதைக் கொடுப்பவரே, நீள் நாகாவாய் = நீண்ட நாகம் போல் உள்ள காளக்கிரியாய் = காளக்கிரி எனப்படும் திருச்செங்கோடு மலையில் கோயில் கொண்டவரே! கங்காளா லீலா பாலா = எலும்புக் கூட்டை விநோதமாக அணிந்துள்ள சிவ பெருமானின் குமாரரே! நீபா = கடப்பமலர் மாலையைச் சூடியவரே, காம ஆமோத கன மானின் = அன்பும் நற்குணமும் பெருமையுமுடைய வள்ளிமான் அளித்த,தேம் ஆர் தேமா காமி பாகி = தேன்சேர்க்கப்பட்ட தினைமாவை விரும்பி உண்பவரே! தேசா தேசத்தவர் ஓதும் = உலகத்தில் உள்ள யாவராலும் போற்றப்படும் தேசோமயமான சேயே வேளே = இளம் பூரணரே! குமாரக் கடவுளே, பூவே சோவே = பூ போன்ற மெல்லிய இதயம் கொண்டவரே, தலைவரே. தேவே தேவப் பெருமாளே = தேவாதி தேவனாகத் தேவர்கள் யாவருக்கும் தலைவனாகத் திகழும் பெருமையில் சிறந்தவரே, பாசத்து அபராத = ஆசாபாசங்களில் பற்றுவைத்ததின் அபராதமாக யாமா = தெற்கேயுள்ள, யாமாதேசார் ஊடு ஆய் = யம லோகத்தில் உள்ளவர்களுடைய ஆராயா ஆபத்து = ஆராயப்படாத ஆபத்து, எனது ஆவி = என்னுடைய உயிர், ஆமா காவாய் = சேர்தல் அமா காத்திடுவாய், தீயேன் நீர்வாயாதே = பொல்லாதவன் நற்குணம் வாய்க்காமல், ஈமத்து உகலாமோ = சுடுகாட்டைச் சேர்ந்து அழியலாமோ.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங்கோட்டு வேலனை மலர்மாலைகளை விரும்பிச் சூடுகின்றவரே! இதச்சல்லாபரே! அனைத்து லோகங்களுக்கும் ஆதாரபுருஷரே! கடல் சூழ்ந்த இப்பூமண்டலத்தின் அதிபரே! தர்ம சிந்தனையும் ஆசாரமும் உடைய அடியார்களால் போற்றப் படுபவரே! அடியார்களின் பாவங்களைப் போக்குபவரே! அன்பர்களின் விருப்பங்களை காமதேனுவைப் போல் பூர்த்தி செய்யும் அருளாளரே! நீண்ட நாகம் போன்று உள்ளதான நாககிரி எனப்பெயர் கொண்ட திருச்செங்கோட்டு

மலையின் மீது கோயில் கொண்டவரே! எலும்புகளை மாலையாக அணிந்துகொண்டு திருவிளையாட்டல்கள் செய்த சிவபெருமானின் புதல்வரே! கடப்ப மலர் மாலைப் பிரியரே! அன்பும் மகிழ்வும் பெருமையும் உடைய வள்ளிமான் கொடுக்கும் தேன் கலந்த தினைமாவை ஆவலுடன் ஏற்று உண்பவரே! தேஜோமயானந்தர் என்று உலகத்தவர் போற்றும் இளம் பூர்ணரே! குமாரக்கடவுளே! பூப்போன்ற அழகும் மென்மைக் குணமும் குடி கொண்ட தலைவரே! தேவர்களுக்கு எல்லாம் தேவாதி தேவனாக விளங்கும் தேவ-தேவனே! ஆசாபாசங்களில் பற்று கொண்டதின் அபராத மாகத் தெற்கில் உள்ள யமலோகத்தவருடைய ஆராயாத ஆபத்தான நிலையில் என் உயிர் சேர்தல் ஆமோ? காத்தருளுவீர். தீயேன் நற்குணம் வாய்க்காமல் மயானத்தில் சென்று அழியலாமோ? என்று வேண்டியுள்ளார்.

இப்பாடலிலும் அருட்செல்வர் சொற்களை வெகு சாதுர்ய மாகப் பிரயோகம் செய்து உள்ளார். இத்தகைய சாதுர்யமான

தாமா தாமா
யாமா யாமா
காமா காமா
தேமா தேமா

பிரயோகங்கள் திருச்செங்கோட்டில் தான் அதிகம் உள்ளன. கங்காளம் = எலும்புக்கூடு, கங்காளன் = எலும்புக் கூட்டை அணிந்த சிவபெருமான், கங்காளி = பார்வதிதேவி, காளி.

இப்பாடலில் அருணகிரியார் நமக்கு உணர்த்துவது ஆசாபாசங்களில் ஈடுபடாதீர்கள், அது உங்கட்கு அழிவையே தேடும் என்பதாம்.

11

தந்த தாத்தத் தனத்தந் தாத்தத்
தந்த தாத்தத் தனத்தந் தாத்தத்
தந்த தாத்தத் தனத்தந் தாத்தத் தனதான.

துஞ்ச கோட்டிச் சுழற்கண் காட்டிக்
கொங்கை நோக்கப் பலர்க்குங் காட்டிக்
கொண்ட ணுப்பித்துலக்கஞ் சீர்த்துத் திரிமானார்—
தொண்டை வாய்ப்பொற் கருப்பஞ் சாற்றைத்
தந்து சேர்த்துக் கலக்குந் தூர்த்தத்
துன்ப வாழ்க்கைத் தொழிற்பண் டாட்டத் துழலாதே;

கஞ்சம் வாய்த்திட் டவர்க்குங் கூட்டிக்
கன்று மேய்த்திட் டவர்க்குங் கூற்றைக்
கன்ற மாய்த்திட் டவர்க்குந் தோற்றக் கிடையா நீ-

கண்டு வேட்டுப் பொருட் கொண்டாட்டத்
தின்ப வாக்யத் தெனக்குங் கேட்கத்
தந்து காத்துத் திருக்கண் சாத்தப் பெறுவேனே

வஞ்ச மாய்புக் கொளிக்குஞ் சூற்கைத்
துன்று சூர்ப்பொட் டெழச் சென்றோட்டிப்
பண்டு வாட்குட் களிக்குந் தோட்கொத் துடையோனே;

வண்டு பாட்டுற்றிசைக்குந் தோட்டத்
தன் குராப்பொற் புரக்கும் பேற்றித்
தொண்டர் கூட்டத் திருக்குந்தோற்றத் திளையோனே.

கொஞ்சு வார்த்தைக் கிளித்தண் சேற்கட்
குன்ற வேட்டிச் சியைக்கண் காட்டிக்
கொண்டு வேட்டுப் புனப் பைங்காட்டிற் புணர்வோனே

கொங்கு வாத்தித் தழைக்குங் காப் பொற்
கொண்ட வார்த்துச் சிறக்குங் காட்சிக்
கொங்கு நாட்டுத் திருச் செங்கோட்டுப் பெருமானே.
(திரு. 373)

பண்டு = முன்பு ஒரு சமயம், வஞ்சமாய்ப் புக்கு ஒளிக்கும் = வஞ்சகமாகக் கடலுட் புகுந்து ஒளிந்து கொண்ட, சூல்கை துன்று ஆர் = சூலம் ஏந்திய கையனாய் அருகில் வந்த சூரபத்மன், பொட்டு எழ = அழிந்து போகும்படி, சென்று ஓட்டி = போர்க்களஞ் சென்று விரட்டி, வாட்குட் களிக்கும் = வாளாயுதத்தை உபயோகித்து மகிழ்வுறும், தோள்கொத்து உடையோனே = பன்னிரு புயங்களை உடையவரே! வண்டுபட்டு உற்று இசைக்கும் = வண்டுகள் மகிழ்ச்சியுடன் ரீங்காரம் செய்யும், தோட்டத்து தன் குரா = தோட்டத்து உள்ள குளிர்ச்சியான குராமலர் மாலைகளைச், பொற்பு உர = சூடிய அழகிய திருமார்பனே! கும் பேற்றி தொண்டர் கூட்டத்து = கும்பு கூட்டி அடியார் கூட்டத்தில், இருக்கும் தோற்றத்து = இருக்கின்றவர்களில் தோற்றத்திலே, இளையோனே! = இளையவராக உள்ள இளம் பூரணரே, கொஞ்சு வார்த்தைக் கிளி = கிளிபோல் கொஞ்சும் சொற்களும், தன் சேல் கண் = சேல் மீன் போன்ற குளிர்ச்சியான கண்களும் உடைய, குன்ற வேட்டிச்சியை = குன்றில் வாழும் வேடர்குல மங்கை

வள்ளி அம்மையாரை, கண் காட்டிக்கொண்டு— கண் ஜாடை காட்டி உடன் அழைத்துக் கொண்டு போய், வேட்டு புன பைங்காட்டில்— வேடுவர்கள் வாழும் அழகிய தினை புனத்திலே, புணர்வோனே = அன்புடன் தழுவியவரே, கொங்கு உலாத்தி = வாசனையை வீசிடும் பூந்தாது, தழைக்குங்கா = தழைத்துள்ளசோலைகளில், பொன் கொண்டல் ஆர்த்து = அழகிய மேக கூட்டங்கள் ஒன்று கூடி ஒளிக்கும், சிறக்கும் காட்சி = சிறப்பான தோற்ற முடைய, கொங்கு நாட்டு = கொங்கு நாட்டைச் சேர்ந்த, திருச்செங்கோட்டு = திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட, பெருமாளே = பெருமையில் சிறந்தவரே! துஞ்சுகோட்டி = சோர்வு உற்றது போல், சுழல் கண் காட்டி = கண்களைச் சுழற்றிக்காட்டி, கொங்கை நோக்க பலர்க் குங்காட்டி = பலரும் காணும்படி தனங்களையும் காண்பித்து, கொண்டு அணுப்பி = (ஆடவர்களை) அழைத்துக் கொண்டு போய் ஏமாற்றி பணம் பறித்துக்கொண்டு, துலக்கஞ்சீர்த்து = தங்கள் பிரதாபம் பேசி, திரிமானுர் = திரிகின்ற விலை மாதர் களின், தொண்டை பொன்வாய் = கொவ்வைக்கனி போன்ற செவ்வையான அழகிய இதழின், கருப்பஞ்சாற்றைத்தந்து = கருப்பம் சாறு போன்று இனிக்கும் ஊறலைத்தந்து, சேர்த்து கலக்கும் = அணைத்துச் சேரும், துர்த்த துன்ப வாழ்க்கை = கொடியவர்களின் துன்பம் தருகின்ற வாழ்க்கையையே, தொழில் = தொழிலாகக் கொண்டு, பண்டு ஆட்டத்து உழலாதே = முன்பு நான் வேசியர் லோலனுகத்திரிந்து அழிந்தது போல் தொடர்ந்து அவ்வேசியர் நேசத்திலும் பாசத்திலும் உழலாது இருக்க, கஞ்சம் வாய்த்து இட்ட வருக்கும் = தாமரை மலரில் வீற்று இருக்கும் பிரமனுக்கும், கூட்டி கன்று = கன்றுகளை ஒன்று சேர்த்து, மேயத்திட்ட வர்க்கும் = மேய்த்தமாயவனுக்கும், கூற்றைக்கறை = இயமனைச் சினந்து, மாய்த்திட்டவர்க்கும் = மடியச் செய்த சிவபெரு மானுக்கும், தோற்றக் கடையா நீ = காண்பதற்கும் கிடைத் தற்கு அரியரான தாங்கள், கண்டு வேட்டு = அடியேனை வேசியர்லோலனை ஒரு பொருட்டாகக் கருதி என் மீது விருப்பம் கொண்டு என்முன் தோன்றி, பொருட்கொண்டாட் டத்து இன்ப வாக்யத்தை = போற்றத்தக்க பொருள் கொண்ட வாக்யத்தை, எனக்கும் = இந்த வேசியர் லோயனுக்கும், கேட்கத்தந்து—உபதேசித்து, காத்து—ஆட்கொண்டு அருள் பாலித்து, திருக்கண் சாத்த—கருணை காட்டியதை

பெறுவேனோ—பெறுவதற்கு நான் தக்கவனோ, என்று அருணகிரிநாதரை முருகன் ஆட்கொண்டதைக் கூறுகிறார்.

இப்பாடல் அருட்செல்வர் அருணகிரியாரின் வாழ்க்கைச் சம்பந்தமான மிக முக்கியமான அகச் சான்றினைக் கொண்டதாகும்.

அருட்செல்வர் அருணகிரிநாதர் வேசியர் இல்லமே கோயிலாகக் கொண்டு காமாந்தகாரராகத் திரிந்து வேதனைப் பட்டவர். அல்லது வேசியர் பாசம் அற்று வேலவனையே வேண்டிநின்று வேண்டியவரம் பெற்றவரா? என்ற மிக முக்கியமான சர்ச்சைக்குத் தீர்வு காணும் அகச்சான்றினைக் கொண்ட பாடல் இதுவாகும்.

அருட்செல்வர் அருணகிரிநாதர் உயர்ந்த குலத்தில் தோன்றியவர், சுற்றுந்தேர்ந்தவர். வேசியர் வாயிலையும் மிதியாதவர்,வேலனையே வந்தித்து வாழ்ந்தவர் என, வாதாடும் ஒருசிலருக்கு உண்மையை உணர்த்தும் வகையில் இப் பாடலில் "பண்டு ஆட்டத்து உழலாதே" என்னும் மூன்று சொற்களைக்கொண்டு = பண்டு = முன்னம் ஆட்டத்து = ஆடிய ஆட்டங்களான வேசியர்களுடன் கூடிக்குலாவிய செயல் களையே தொடர்ந்து செய்து கொண்டு, உழலாதே = உழன்று கொண்டு இருக்காமல் என்று வெகு அழகாக அவர் திருமுருகனால் தடுத்தாட் கொண்டதற்கு முன்பு வேசியர் மயக்கத்தில் மயங்கித்திரிந்து உழன்றவர் என்பதை உறுதிப் படுத்தியுள்ளார்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரிநாதர் திரு முருகனை நோக்கி, "கடலில் வஞ்சனையாக சூலாயுதத்தைக் கையில் கொண்டு ஒளிந்து இருந்த சூரனை ஓட ஓட விரட்டி வாளால் வெட்டிய பன்னிரு தோளனே! வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டு இசைபாடும் குளிர்ச்சியான தோட்டங்களில் உள்ள குராமலர்மாலைகளை அணிந்த அழகிய திருமார்புடன் அடியார்களின் கூட்டத்திலே பால முருகனாக் காட்சி தரும் இளம் பூரணனே! கிளிபோல் இனிமையாகக் கொஞ்சிப் பேசும் சொற்களையும் சேல் மீன் போன்று குளிர்ந்த அழகிய கண்களையும் கொண்டு, குன்றின் வாழும் வேடர் குல மங்கை வள்ளியம்மையாரைக் கண் ஜாடை காட்டி, உடன் அழைத்துக் கொண்டுபோய் வேடுவர்கள் வாழும், தினைப்புனத்திற்கு

அருகே உள்ள அழகிய பசும் சோலையில் அன்புடன் தழுவி ஆனந்தம் உற்றவரே! வாசனையை வீசும் பூந்தாதுகள் நிறைந்த சோலையில் மேககூட்டங்கள் ஒன்று கூடி ஒளிக்கும் சிறப்பான தோற்றமுடைய கொங்கு நாட்டின் திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்ட பெருமையில் சிறந்த செங்கோட்டு வேலவரே! நீர் தாமரை மலரில் வீற்று இருக்கும் பிரமனுக்கும் கன்றுகளை ஒன்று சேர்த்து மேய்த்த திருமாலுக்கும் காலனைக் காய்ந்த சிவபெருமானுக்கும் காண் பதற்கு அரியவர். ஆனால் அடியேன் மீது அன்புகொண்டு என் முன் தோன்றி ஆட்கொண்டீர், அதற்குமுன் அடியேன் சோர்வு உள்ளது போல் தமது கண்களைச் சுழற்றிக் காட்டியும் பலரும் காணத் தமது தனங்களையும் காட்டி அழைத்துக் கொண்டு போய் ஏமாற்றி பணத்தைப் பறித்துக் கொண்டு அனுப்பிவிட்டுத் தங்கள் பிரதாபங்களைப் பேசித் திரிகின்ற விலைமாதர்கள் தம் கொவ்வை செவ்வாயின் கருப்பஞ்சாறு போன்று இனிக்கும் ஊறலைத் தந்து அணைத்துச் சேரும் கொடியவர்களின் துன்பத்தைத் தரும் வாழ்க்கையையே தொழிலாகக் கொண்டு அல்லல் உற்றேன்.

இவ்விதம் அல்லல் உற்ற என்னை வலுவில் வந்து ஆட்கொண்டு அருள் செய்து போற்றத்தக்க பொருள் கொண்ட இன்ப உபதேசத்தையும், இந்த வேசியர்லோலனும் அறிந்திட உபதேசித்து காத்து அருளிய உமது கருணை கடாட்சத்தைப் பெறும் பாக்யத்தை பெறுவதற்கு ஏற்றவனோ என்பதாகக் கூறும் அருணகிரிநாதர் திருமுருகன் திருவருள் பெறுவதற்கு முன் வேசியர் மையலில் மயங்கி வேதனை பல உற்றவர் என்பதை அவரே கூறி உறுதிப்படுத்தும் இந்த அகச் சான்றைக் காட்டிலும் அருணகிரிநாதர் வேசியர் மயக்கத்தில் மயங்கியவரே; என்பதற்கு வேறு சான்று என்ன வேண்டும் சொல்வீர்.

"கஞ்சம் வாய்த்திட்ட வர்க்குங் கூட்டிக்
கன்று மேய்த்திட்ட வர்க்குங் கூற்றைக்
கன்ற மாய்த் திட்ட வர்க்குந் தோற்றக் கிடையா நீ".

மும் மூர்த்திகளுக்கும் காணக்கிடையாத அரியவன் திருமுருகன் எனத் திருமுருகனைப் போற்றும் அருணகிரிநாதர் கஞ்சம் வாய்த்திட்டவர் என்று பிரமனையும் கூட்டிக் கன்று

மேய்த்திட்டவர் என்று திருமாலையும் கூற்றைக் கன்றமாய்த் திட்டவர் என்று காலனைக் காலால் உதைத்த கால காலனும் சிவபெருமானையும் போற்றியுள்ள சொல் நயம் போற்றற் பாலது இவ்வடி மனப்பாடம் செய்வதற்கான ஒரு முக்கிய சொற்றொடர்.

"தொண்டர் கூட்டத்திருக்குந் தோற்றத்து இளையோனே"

திருமுருகன் திருவடியார்களின் கூட்டத்திலே குழுமி இருக்கும் போது திருமுருகன் இளையோனாக பாலமுருகனாகவே தோற்றம் அளித்தாலும் அவர் பெருமையில் சிறந்தவர் மும்மூர்த்திகளுக்கும் காணக்கிடையாதவன். ஆனால் அவன் அடியார்களுக்கு எளியவன். அன்பர்களுக்கு வலிய வந்து அருள் செய்வான். அஞ்சேல் என அடியவரை ஆதரிக்கும் பெற்றியன்.

'அருளாளன் அருமுகன்" என்பதை உணர்த்தும் பாடல் கந்தர் அநுபூதியில் 26 ஆவது பாடல்.

இப்பாடலின் முன் இரண்டு அடிகளும்

"ஆதாரம் இலேன் அருளைப்பெறவே
நீதான் ஒரு சற்றும்நினைத்திலையே"

இதற்கு உரையாசிரியர் பலரும் கண்ட பொருள் சில காண்பீர்:

1. உனது திருவடி அன்றி வேறு பற்றுக்கோடு ஒன்றும் இல்லாதவனாகிய யான் உனது திருஅருளை அடையும் நிமித்தம் நீ கொஞ்சமேனும் கருதாது இருக்கின்றனையே!
2. உமது திருவடியின்றி வேறு ஒருபற்றுக்கோடும் இல்லாதவனாகிய அடியேன் திருவருளை பெற்று உய்யுமாறு தேவரீர் ஒரு சிறிதும் நினைக்கவில்லையே. (நினைத்து அருள்புரியவும்)
3. நான் எந்தவிதமான பற்றுக்கோடும் இல்லாதவன், நீ என்னைக் காப்பாற்ற எண்ணங்கொண்டதாக ஒருசிறிதும் தெரியவில்லையே, உன் கருணை வருமா.
4. நான் ஆதாரமற்றவன். உன் அருளை நான் பெறுவதற்கு நீ சிறிதும் நினைத்தாயில்லையே.
5. பற்றுக்கோடு இல்லாதவனாகியயான் உனது திருவருளைப் பெறுமாறு நீ ஒரு சிறிதளவேனும் என்னைப்பற்றி நினைத்தாயில்லையே (இது முறையாகுமோ)

6. **உன் திருவடியன்றி வேறு எந்த விதமான பற்றுக்கோடும் அற்ற அடியேன் உன் திருவருளைப் பெறுதற்கு நீ ஒரு சிறிதேனும் என்னைப்பற்றி நினைத்தாயில்லையே (இது முறையாகுமோ)**

இதோ மேலே ஆறு உரையாசிரியர்கள் கண்டதான பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. அநேகமாக எல்லோரும், "அருணகிரிநாதர் ஆதாரம் அற்ற தன்னைத் திருமுருகன் சற்றும் நினைக்கவில்லை என்று சொல்லியிருப்பதாகப் பொருள் கண்டுள்ளதாகவே கூறியுள்ளார்கள். திருமுருகன் ஆதார மற்றவரான அருணகிரிநாதரை ஒரு சிறிதும் நினையாதிருந்தால், அருணகிரிநாதர் எப்படி அநுபூதியையும் மற்றும் திருப்புகழ் அலங்காரம் வகுப்பு முதலான நூல்களை இயற்றினர் சொல்வீர். திருமுருகன் அருள்பெற்றுதான் அருணகிரிநாதர் எல்லாப் பாடல்களையும் பாடியுள்ளார். அருணகிரிநாதர் பாடிய கந்தர் அநுபூதி 26-ஆவது பாடலில் உள்ள அருணகிரிநாதர் வாக்கு பொய்ப்பதற்கு இல்லை, அவரே அநுபூதி பாடல் 8-ல் 'பிமரம் கெட மெய்ப்பொருள் பேசினன்' என்றும் அநுபூதி 11-ல் கூகா என என்கிளை கூடி அழப்போகா வகை முருகன் மெய்ப்பொருள் பேசினன் என்றுசொல்லி இருக்கும் போது அநுபூதி 26-ல் எப்படி ஆதாரமற்ற தன்னை திருமுருகன் சிறிதும் நினைக்கவில்லை என்று சொல்வார்.

இந்த இரண்டு அடிகளுக்கும் எந்த விதமான சர்ச்சைக்கும் இடம் கொடுக்காத பொருத்தமான ஏற்புடைய பொருள்:-

முருகா! உனது அருளைப்பெற நான் ஆதாரம் அற்றவனே. ஆனல் தாங்கள் என்னை ஆதாரம் அற்றவன் என்று நினைத்தீர் இல்லை. அடியேனை உமது வழி வழி அடிமையாக எண்ணி உம்மை நான் நினையாதபோதும் அருள் செய்து உள்ளீர். முருகா! என்னே உம் கருணை என்பதே

அடுத்து அநுபூதிப் பாடல் 24 இன் முன்இரண்டுஅடிகள்

"கூர்வேல் விழிமங்கையர் கொங்கையிலே
சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?"

இதற்கு உரையாசிரியர்கள் சிலர் கண்ட உரை இதோ.

1. கூர்மையான வேலாயுதம் போன்ற கண்களையுடைய மாதர்களது முலைகளிலே படிகின்ற அடியேனது நெஞ்சம் உனது அருள் செல்வத்தைப் பெறும் வகை இனியேனும் எண்ணும் தன்மை உடையதாமோ.

2. கூரியவேல் போன்ற கண்களையுடைய மாதர்களுடைய தனங்களை சேர விரும்புகின்றவனாகிய சிறியேன் திருவருட் பெற்றியை கூடுமாறு எண்ணும் பேறு பெறுமோ.
3. கூர்மையான கண்களையுடைய பெண்களின் மார்பைச் சேரும் ஆசையுடையேன், உன்னையும் உன் அருளையும் சேர எண்ணுவது நியாயமா. உன்னருள் என்னை வந்து சாருமா.
4. கூர்மையானவேல் போன்ற விழிகளையுடைய மங்கையர் கொங்கையிலே சேரும் எண்ணத்தையுடைய என்னிடத்து உன் அருள் வந்து சேரவும் எண்ணுமோ.
5. கூர்மையான வேல் போன்ற கண்களினால் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்ற விலைமாதர்களின் முலைத்தடத்திலே சேரும் எண்ணத்தை யுடையவனாகிய சிறியேன் உனது திருவருட் செல்வத்தை அடையுமாறு இனியேனும் கருதும்பேறு உண்டாகுமோ. (உண்டாகும்).
6. கூரிய வேல் போன்ற விழிகளையுடைய மாதர்களின் தனத்தில் சேரும் மயலையுடைய அடியேன் நின் திருவருளைப் பெறுமாறு இனியேனும் கருதும் பேறு உண்டாகுமோ.

இதோ மேலே கண்ட இரண்டு அடிகளுக்கும் ஆறு உரையாசிரியர்களின் உரை மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

கூர் வேல் விழி மங்கையர் கொங்கையிலே விளையாடிய அருணகிரியார் திரு முருகனது திருவருள் கிட்டிய பின் அநுபூதிப்பாடலைப் பாடி இருக்கும்போது. உரையாசிரியர்கள் யாவரும் மங்கையர் கொங்கையில் விளையாடிய சிறியேன் உனது திருவருட் செல்வத்தை அடையுமாறு இனியேனும் கருதும் பேறு பெறுவேனோ எனக் கண்டுள்ள பொருள்கள் ஏற்புடையத்தாகாது.

இதற்கான பொருள். கூர்வேல் மங்கையர் கொங்கையில் சேர்வேன் உனது அருள் என்னை வந்து சேரும் என்று எண்ணுமதோ, மங்கையர்பால் நான் கொண்ட மாதர் ஆசையை மறப்பித்து உமது ஷண்முகத்தை நினைக்கச் செய்ததான உமது அருள் என்னை வந்து அடையும் என்று எப்படி நான் எதிர்ப்பார்த்து இருக்க முடியும் என்பதே ஏற்றப் பொருள்.

இதுபோன்ற அருளாளர் பாடல்களுக்கு இலக்கணத்தையும் அகராதியையும் துணைகொண்டு சொல்லுக்குச்சொல்

பொருள் காண்பது தக்க பொருளைக் கொடுக்காது. அருணகிரிநாதரின் சரித நிகழ்ச்சிகளையும் கருத்தில் கொண்டு பொருள் காண்பதே தக்க பொருளைத்தரும்.

இது போன்று பல இடங்கள் கந்தர் அநுபூதியில் உள்ளன. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை தமிழ் நாடு திருத்தணிகை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் பதிப்பாக வெளியிட்டு இருக்கும் கந்தர் அநுபூதி குகதாசன் உரை என்ற புத்தகத்தைக் காண்பீர்.

இந்த திருப்புகழ் பாடல் 11க்கும் மேலே கண்ட முறையில் தான் பொருள்காணவேண்டும். அந்த வகையிலேயே தான் பொருள் காணப்பட்டு மூவர்க்கும் காணக் கிடைய முருகன் என்னைக் மதித்து அருள் செய்துள்ளான் எனக்காணப் பட்டு உள்ளது. இப்பாடலுக்கு, ஏன் எனில் வேசியர் லோலனுய்த்திரிந்த அருணகிரிநாதரை திருமுருகன் ஆட்கொண்ட பின்னரே இப்பாடலைப் பாடியுள்ளதால் மீண்டும் என்னை ஆட்கொள்வாயோ என்று கேட்கமாட்டார்.

12

தானனத் தானதன தானனத் தானதன
★ ★ ★ ★ தந்ததான

நீலமஞ் சானகுழல் மாலைவண் டோடு கதி
நீடுபந் தாடுவிழி யார்பளிங் கான நகை
நீலபொன் சாபநுத லாசையின் தோடசையும்
நீன்முகந் தாமரையி னூர்மொழிந் தாரமொழி
நேர்சுகம் போலகமு கானகந் தாதர்புய
நேர் சுணங் காவிகிளை யேர்சிறந்தார் மலையி
ரண்டுபோல்—

நீளிபங் கோடிளதிர் தேனிருந் தாரமுலை
நீடலங்காரசர மோடடைந் தார்மருவி
நின்மணஞ் சாறு பொழி யாவளம் போதிவையில்
நீலவண் டேவியநல் காமனங் காரநிறை
நேச சந்தான அல்குல் காம பண்டார முதை
நேருசம் போகரிடை நூரலொளிர்ந் தாசையுயிர்
சம்பையாரஞ்;

சாலுபொன் தோகையமை பாளிதஞ் சூழ்சரண
தாள்சிலம் போலமிட வேநடந் தானநடை
சாதிசந் தானெகின மார்பரந் தோகை யென
தான்எழுங் கோவவிலை மாதரின் பார்கலவி
தாவுகொண் டேகலிய நோய்கள் கொண் டேபிறவி
தானடைந் தாழும்அடி யேனிடஞ் சாலும்வினை
அஞ்சியோடத்—

தார்கடம் பாடுகழல் பாதசெந் தாமரைகள்
தாழ்பெரும் பாதைவழி யேபடிந்தே வருகு
தாபம் விண் டேஅமுத வாரிஉண்டே பசிகள்
தாபமுந் தீரதுகிர் போனிறங் காழ் கொளுரு
சாரவுஞ் சோதிமுரு காவெனுங் காதல்கொடு
தானிருந் தோத இருவோ ரகம் பேறுறுக
விஞ்சைதாராய்;

சூலிஎந் தாய்கவுரி மோகசங் காரிகுழை
தோடுகொண் டாடுசிவகாமசுந் தாரிநல
தூளணைந் தாளிதிரு வாணிஅங் காளி கலை
தோகை செந்தாமரையின் மாது நின்றே துதி செய்
தூய அம் பாகழைகொள் தோளிபங் காளக்ருபை
தோய்பரண் சேயெனவுமே பெரும் பார் புகழும்
விந்தையோனே—

சூரசங் காரசுரர் லோகபங் காஅறுவர்
தோகைமைந்தாகுமரவேள் கடம்பார தொடை.
தோளகண் டாபாயதே சிகந் தாவமரர்
தோகை பங்காளனவே தாகயஞ் சூழ்சுருதி
தோதகம் பாடமலை ஏழுதுண் டாய் எழுவர்
சோரிகொண் டாறுவர வேலெறிந் தேநடன
முங்கொள்வேலா,

மாலியன் பாறஒரு ஆடகன் சாகமிகு
வாலியும் பாழி மரமோடு கும்பாகனனும்
அழியுங் கோரவலி ராவணன் பாற விடும்
ஆசுகள் கோலமுகி லோன்உகந் தோதிடையர்
மாதுடன் கூடி விளையாடும் போகதிரு
.மார்பகன காணமுடி யோன்அணங் கானமதி
யொன்றுமானை

மார்புடன் கோடுதள பாரமுஞ் சேர இடை
வார்துவண் டாடமுக மோடுக்ந் தீராச
வாயிதங் கோதிமணி நூபுரம் பாடமண
வாசை கொண் டாடுமயி லாளிதுங் காகுறவி
மாது பங்கா மறைகுலாவு செங்கோடை நகர்
வாழவந் தாய் கரிய மாலயன் தேவர் புகழ்
தம்பிரானே

சூலி எந்தாய் = திரிசூலத்தை ஏந்தியவளான எனது தாய், கவுரி = பொன்னிறமுடையவள், மோகசங்காரி = ஆசையை அறுப்பவள், குழை தோடுகொண்டு - தோடும் குண்டலமும் ஆகிய காது அணிகளை அணிந்து கொண்டு, ஆடும் = நடனம் செய்யும், சிவகாமசுந்தரி = சிவபெருமானை விரும்பும் அழகி, நல்தூள் அணிந்து ஆளி = நல்ல விபூதியை அணிந்து கொண்டு ஆள்பவள்., நிருவாணி = திகம்பரி, அம்காளி = அழகியகாளிதேவி, கலைதோகை = கலாதேவியும், செந்தாமரையின் மாது = சிவந்த தாமரை மலரில் வீற்று இருக்கும் இலக்குமியும், நின்றே துதிசெய் = நின்று கொண்டே போற்றும் தூய அம்பா = பரிசுத்தமான அன்னையாம், கழை கொள் தோளி = கரும்பு போன்று அழகிய தோள்களையுடைய பார்வதி தேவியை, பங்குஆள = தனது தேகத்தில் ஒரு பங்காக ஏற்ற, க்ருபைதோய் = கருணையில் மூழ்கிய, பரன்சேய் = சிவபெருமானது திருக்குமாரர், எனவும் = என்றும், பெரும் பார்புகழும் = பெரிய உலகம் போற்றும், விந்தையோனே = விசித்திரமான செயல்களைப் புரிகின்ற விசித்திரமானவரே! சூரசங்கார = சூரனைச்சம்காரம் செய்தவரே! சுரர்லோக பங்கா = தேவர்களுக்கும் தேவலோகத்திற்கும் சகாயரே! அறுவர்தோகை மைந்தா = கார்த்திகைப் பெண்கள் அறுவர்களின் புதல்வனே! குமரவேள் = குமாரக்கடவுளே! கடம்ப ஆரதொடை = கடம்பமலர் மாலைகளை மிகுதியும் அணிகின்ற, தோள் அகண்டா = அகண்ட புஜங்களையுடையவரே! பரமதேசிகா = பரமகுருநாதரே! அந்தா = அந்தமானவரே! அமரர் தோகை பங்காளன = தேவலோகத்து மயில் போன்ற தேவயானை அம்மையாரின் மணவாளரே! என்று, வேத ஆகமம் சூழ் = வேதமும் ஆகமங்களும் சூழ்ந்து கொண்டு, சுருதிதோதகம் பாட = சுருதியுடன் உமது வல்லமையைப் போற்ற, மலையேழும் துண்டாய் = சூரனுக்கு துணையாக வந்த ஏழுமலைகளும் பொடிபடவும், எழுவர் சோரிகொண்டு = அம்மலையில்

இருந்து எழுந்த அசுரர்களின் இரத்தம்ஒன்றுகூடி, ஆறுவர =ஆறுபோல் ஓடவும், வேல் எறிந்தே = வேலாயுதத்தை விடுத்து, நடனமும் கொள்வேலா = துடிக்கூத்தும் ஆடிய வேலவரே! மாலியன் பாற = மாலியவான் சாகவும், ஒரு ஆடகன்சாக = ஒப்பற்ற இரணியன் இறக்கவும், பாழி மர மொடு = வலிமையான ஏழுமரங்களுடன், மிகு வாலியும் = மிகுந்தவலிமையுடைய வாலியும், கும்பாகணனும் (கும்ப-கர்ணனும்) = கும்பகர்ணனும், ஆழியும் = கடலும், கோரவலி ராவணன் = பயங்கரமான வலிமை கொண்ட இராவணனும், பாறவிடும் = இறந்துபட விடுத்த, ஆசுகன் = அம்பினையுடைய இராமபிரானாகிய திருமால், கோலமுகிலோன் = அழகிய நீல மேகசாமள வர்ணன், உகந்து ஓது இடையர் = மகிழ்வுடன் போற்றித் துதிக்கும் ஆயர்குல, மாதுடன் கூடி = மாதர் களுடன் சேர்ந்து, விளையாடு சம்போக = மருவிவிளையாடியவர் திருமார்பகன் = திருமார்பிலே இலக்குமிதேவியை உடையவர், காணமுடியோன் = பொற்கிரீடம் கொண்ட, அணங்கு ஆன = அவரின் புதல்வியான, மதி ஒன்றும் ஆனை = அறிவு மிகுந்த தெய்வயானை அம்மையார், மார்புடன் கொடுதனபாரமும் சேர = மார்புடன் மலை போன்ற கொங்கையும் பொருந்த இடைவார்துவண்டு ஆட = இடையில் அணிந்த கச்சுதுவண்டு ஆட, முகமோடு உகந்து = முகமலர்ச்சியுடன், ஈரரச = கருணை ரசத்துடன், வாய் இதம் கோதி = வாயிலிருந்து வரும் ஊறலைப் பருகி, மணி நூபுரம் பாட = இரத்தினச் சிலம்பு ஒலிக்க, மண ஆசை கொண்டாடும் = திருமுருகனைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆவல்கொண்ட மயில் ஆளி = மயிலான தெய்வயானையின் மணவாளரே, துங்காகுறவிமாதுபங்கா = பரிசுத்தமான குறவர் குலத்து மாதாம் வள்ளியம்மையாரின் மணவாளரே! மறைகுலாவு = வேதம் முழங்கும், செங்கோடை நகர் = திருச்செங்கோடு என்றும் திருத்தலமும் அதில் வாழ் மக்களும், வாழ வந்தாய் = வாழ்வதற்காகவே திருச்செங்கோட்டில் கோயில் கொண்டவரே! கரியமால் அயன் தேவர் புகழ் = கரிய நிறமுள்ள திருமாலும் பிரமனும் தேவர்களும் போற்றிப் புகழ்ந்திடும், தம்பிரானே = தனப்பெருந்தலைவரே! நீல மஞ்சு ஆன குழல் = கரிய மேகம் போன்ற கூந்தலில், மாலை வண்டு ஒடுகதி = சூடிய மலர்களில் வண்டுகள் மொய்க்க. நீடு பந்தாடுவிழியார்—அங்கும் இங்குமாகப் புரளும் நீண்ட விழிகளையுடையவளும், பளிங்கு ஆன

நகை = பளிங்கு போல வெண்மையான பற்களையும், நில பொன் சாபநுதல் = வில் போன்ற அழகான கரிய புருவ மும், ஆசையின்தோடு அசையும் = பொன்னால் ஆன காது அணிகள் காதுகளில் அசைந்திடவும், நீள் முகம் தாமரை யினார் = தாமரை மலர் போன்று பிரகாசமான முகம் உடை யவர்கள், மொழிந்து ஆரமொழி = பொருத்தமாகப் பேசும் பேச்சுகள், நேர்சுகம் போல = கிளியின் மொழி போல் இருக்கும், கமுகு ஆன கந்தரர் = பாக்கு மரம் போன்ற கழுத்தினர், புயநேர் சுணங்கு = தோள்களில் தேமல் உடையவர், ஆவி கிளைஏர் சிறந்தார் = மூங்கிலின் அழகைக் கொண்ட சிறப்பினள், மலை இரண்டு போல = இரண்டு மலைகளைப் போன்று, நீள் இபம் கோடு = யானையின் நீண்ட கொம்பு போன்றதுமான, இளநீர் தேன் இருந்த ஆரமுலை = இளநீரையும் தேனையும்விட இனிமையான அமுதம் நிறைந்த கொங்கையர்கள், நீடு அலங்கார சரமோடு அடைந்தார் = நீண்ட அலங்காரமான கழுத்து அணிகளை அணிந்து இருப்பவர்கள், மருவி நீள் மணம் சாறு பொழியா = நறுமணம் மிகுந்த குழம்புகளைப் பூசிய கிண்ணம் போன்ற கொங்கையர்கள், போது இவையின் நீலவண்டு ஏவிய = மலர்களுள் நீலோற்பல மலர் பாணத்தை ஏவிய, நல்காமன் அலங்கார நிறை = நல்ல மன்மதனது இறுமாப்பு நிறைந்துள்ள(செயலால்), நேச சந்தான அல்குல் = அன்பிற்கு இடமானதும் சந்ததியைத் தருகின்றதுமான அல்குல் எனும், காமபண்டார = காமத் திற்கு ஏதுவான பாண்டமாக உள்ள, அமுதை நேரு = அமுதத்தை நிகர்க்கும், சம்போகர் — புணர்ச்சி அனுப வத்தைத் தருபவர்கள், இடை நூல் ஒளிர்ந்து = நூல்போல் சிறுத்த இடையினை உடையவர்கள், ஆசை உயிர் சம்பையர் = உயிரின்மீது மிகுந்த ஆசையுடையவர், அம்சாலு = அழகு நிறைந்த, பொன்தோகை அமை = பொன்சரிகை யிட்ட அழகிய முன்தானையமைந்த, பாளிதம் சூழ் = பட்டாடைகளை உடுத்தியவர்கள், சரணதாள் = ஆடவர் கள் அடிபணியும் கால்களில், சிலம்பு ஒலமிட = சிலம்புகள் சப்திக்க, நடந்து ஆனநடை = நடக்கும் நடையானது, சாதிசந்தான் எகினம் = உயர்ந்த வம்சத்து அன்னம் எனவும், மார்பர் அம் தோகை என = நிமிர்ந்த மார்பினையுடைய மயில் என்றும், தான் எழும் கோல = தான் எனும் அகம்பாவ எழுச்சி கொண்டவர்களுமான, விலைமாதர் = = விலை மாதர்களுடைய, இன்ப ஆர்கலவி = இன்பம் மிகுந்த

சேர்க்கையில், தாவுகொண்டு = பற்றுதல் அதிகம் கொண்டு மூழ்கி, கலிய நோய்கள் கொண்டு—அதன் காரணமாகக் கொடிய நோய்களைப் பெற்று, பிறவிதான் அடைந்து—பல பிறவிகளைப் பெற்று, ஆழும் அடியேனிடம்—துன்பத்தில் அழுந்துகின்ற அடியேனிடம், சாலும் வினை அஞ்சி ஓட —பொருந்திய வினைகள்யாவும் அஞ்சி என்னைவிட்டோட, தார் கடம்பு ஆடுகழல் = கடம்பமலர் மாலைகளையும் வீரக் கழலை அணிந்ததுமான, பாத செந்தாமரைகள்—செந் தாமரைத்திருவடிகளை, தாழ்பெரும் பாதை வழியே படிந்து— வணங்குகின்றதான பெருநெறியின் வழியே பொருந்தி, வருகு, தாபம் விண்டே = வருகின்றதான பாபம் துன்பம் ஆகியவற்றை ஒழித்து, அமுத வாரி உண்டு—உமது அருளாகிய அமுதவெள்ளத்தைப் பருகி, பசிகள் தாபமும் தீர = ஆசைகளும் துன்பங்களும் தீர்ந்திட, துகிர் போல் நிறம் – பவளம் போன்ற செந்நிறமும், காழ் கொள் உருசாரவுஞ்—ஜோதி சொரூபமும் பொருந்த, சோதிமுருகா எனும்—ஜோதிமுருக என்று உன்னைப் போற்றும், காதல் கொடு = ஆவல் மிகவும் கொண்டு, தான் இருந்து ஓத— தனித்து மனஅமைதியுடன் போற்றித்துதிக்க, இரு ஓர் அகம் பேறு உறுக—பெருமை பொருந்திய ஒப்பற்ற பேற்றினைப் பெறுவதற்கான உள்ளத்தையும், விஞ்சை தாராய் = ஞானத்தையும் அருள்செய்வீராக.

அருட்செல்வர் அருணகிரியார் இத்திருத்தலத்தில் பாடிய பாடல்களில் மிகவும் பெரிய பாடல் இப்பாடலே.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் திரு முருகனை நோக்கி வேத கோஷங்கள் முழங்கும் திருச்செங்-கோடு என்னும் திருத்தலமும் வேத கோஷத்தை முழக்கும் திருச்செங்கோட்டு மக்களும் வாழ்வு பெற்றிட வேண்டும் என்பதற்காகவே அன்பு கூர்ந்து திருச்செங்கோட்டு மாமலை யின்மீது கோயில் கொண்ட செங்கோட்டு வேலவரே! என்று அழைத்து, நீர் திருமாலாலும், பிரமனாலும் தேவர்களாலும் போற்றபடும் தனிப்பெரும் தலைவர்.

திரிசூலத்தைத் திருக்கரத்தே கொண்டு பொன் நிறத்துடன் திகழும் எனது தாய் கவுரி அம்மையார் ஆசை களை அறவே போக்குவான். குழையும் தோடும் பூண்டு ஆனந்தத் தாண்டவம் ஆடும் சிவபெருமானை விரும்பும்

சிவகாம சுந்தரி திருநீற்றை நெற்றியில் அணிந்து கொண்டு உலகத்தை ஆள்பவன். திகம்பரி, அழகிய காளிதேவி கலைமகளாலும் திருமகளாலும் நின்று போற்றித் துதிக்கப்படும் பெருமையினை உடைய பரிசுத்தமான அன்னையாம் கரும்பு போன்று அழகிய தோள்களையுடைய பார்வதிதேவியைத் தனது இடப்பாகத்தே கொண்ட கருணாமூர்த்தியான சிவபெருமானது திருக்குமாரன் திருமுருகன் என்று உலகமே போற்ற விசித்திரமான செயல்களைப் புரியும் விசித்திர மானவர்.

சூரபன்மனை சம்காரம் செய்து தேவர்களுக்கும் தேவலோகத்திற்கும் உதவிய தேவசகாயர் கார்த்திகைப் பெண்கள் அறுவர்களின் புதல்வர் குமாரக் கடவுள். கடம்ப மலர் மாலைகளை மிகவும் விரும்பி அணிபவர். அகண்ட புயங்களை யுடைவர். சிவபெருமானுக்கே பரமகுருவானவர். அந்தம் மிகுந்தவர்.

தேவலோகத்து மயில் போன்ற தெய்வயானை அம்மையாரின் மணவாளரே என்று வேதமும் ஆகமங்களும் உம்மைச் சூழ்ந்து கொண்டு உமது வல்லமையைப் போற்ற, சூரபன்மனுக்குத் துணையாக வந்த ஏழு மலைகளும் பொடி படவும், அம்மலைகளிலிருந்து எழுந்த அசுரர்களின் இரத்தம் ஒன்று கூடி ஆறு ஆக ஓடவும் வேலாயுதத்தை விடுத்து துடிக் கூத்தாடியவரும் நீர்.

இராவணனின் பாட்டனும் தலைமை அமைச்சருமாகிய மாலியவானும், ஒப்பற்ற இரணியனும் வலிமையான ஏழு மரங்களுடன் பராக்ரமமிக்கவாலியும், கும்பகர்ணனும், கடலும், வலிமை மிக்க இராவணனும் இறந்துபட அம்பினை விடுத்த இராமராகிய திருமால் அழகிய நீல மேக சாமள வர்ணன், தம்மை மகிழ்வுடன் போற்றிததுதிக்கும் ஆயர்குல மாதர்களுடன் சேர்ந்து விளையாடியவர் திரு மார்பிலே இலக்குமிதேவியை உடையவர். பொற்கிரீடம் கொண்டவர். அவரின் புதல்வியான அறிவு மிகுந்த தெய்வ யானை அம்மையாரின், மார்பில் மலை போன்ற கொங்கைகள் பொருந்த, இடையில் அணிந்த கச்சுதுவண்டு ஆட முக மலர்ச்சியுடன் கருணைரசத்துடன் வாயிலிருந்து வரும் ஊறலைப் பருகி இரத்தினச் சிலம்பு ஒலிக்க திருமுருகனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என ஆவல் மிகவும் கொண்ட

தெய்வயானையாகிய மயிலின் மணவாளா. பரிசுத்தமான குறவர் குல மாது வள்ளியம்மையாரையும் திருமணம் கொண்ட வள்ளி மணவாளர் என்பதாக முருகனைப் போற்றிப் புகழ்ந்து நம்பொருட்டு தம்மை வியாஜமாக வைத்துப் பாடிய பாடல்.

இந்தத் திருப்புகழில் முன் 16 வரிகளில் விலைமாதர் களின் அவயவங்களையும், குணங்களையும், செயல்களையும் விரிவாக வருணித்து விலைமாதர்களின் நேசமும் சேர்க்கையும் தீராத துன்பத்தைத் தரும் பல விதமான நோய்களைத் தருவதுடன் தீவினைகளைச் சேர்க்கும். பல பிறவிகளை எடுக்கச் செய்யும். ஆண்டவனை நினைக்கும் எண்ணத்தைப் போக்கும். பாபங்களையே செய்யத்தூண்டும். ஆகையால் சூரனைக் கொன்று தேவர்களுக்குச் சகாயம் செய்த தேவர்கள் சகாயனே அடியேனது வேசியர்கள் நேசத்தைப் போக்கி உன்னைப்பற்றி உன்பதம் பணிந்து உன் அருள் பெற்று. உன்னைச் சோதி முருகா சோதி முருகா என்று போற்றும் ஞானத்தை அருள் வாயாக என்று நம்பொருட்டு முருகனை வேண்டியுள்ளார்.

அருட்செல்வர் அருணகிரியார் இப்பாடல் மூலம் நமக்கு உணர்த்தும் அறிவுரை:— மாதர் அசையில் மயங்காதீர்கள். வேசியர் ஆசை வேதனை தரும். மால்மருகனே, வேசியர் நேசத்தை வேர் அறுக்க வல்லான். அவன் அடிபணிந்து அவனைப் போற்றினுல் அவன் உங்கட்கு அருள் செய்வான். அவனை வேண்டி அவனைப் போற்றிய தேவர்களுக்குச் சகாயனாய் நின்று, சூரனையே வதைத்து அருள்புரிந்தவன் ஆறுமுகவன். தன்னையே நினைந்துப் போற்றிய வல்லியம்மை யாரை வலுவில் சென்று வதுவைகொண்டு அருளியவன்.

அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனையன்றி மற்ற எந்ததெய்வத்தையும் தனிப்பட்ட முறையில் பாடுவ தில்லை என்ற கோட்பாட்டைக் கொண்டவராஞலும் ஏனைய கடவுளர்களை ஒதுக்கினவர் அல்லர். அவர்களிடம் துவேசம் கொண்டவருமல்லர். அவர்களைப் போற்றுவதில் அவரினும் மிக்கர் இல்லை என்பதை இப்பாடல் நன்கு உணர்த்தும்.

திருமுருகனைச் சிவக்குமாரன் என்று போற்றும் போது அந்தச் சிவபெருமானையும் "கழை கொள் தோளின் பங்காளக் கிருபைநோய்பரன்" மூங்கிலைப் போன்று அழகிய தோள்களை

யுடைய பார்வதிதேவியை பாகத்தே கொண்ட கருணைமூர்த்தி எனப் புகழ்ந்து அந்தச் சிவபெருமானின் குமாரனே என முருகனையும் சிவனையும் சேர்த்துப் புகழ்ந்து உள்ளார்.

அடுத்து பார்வதி தேவியை
"சூலி யெந்தாய் கவுரிமோக சங்காரி..........................
.... கழை கொள்தோளி"

என்பதாகப் பார்வதி தேவியின் வர்ணனை ஒரு சாக்தரும் போற்றாத வகையில், தேவியின் பெருமையினை எடுத்துக் கூறி இத்தனை பெருமை கொண்ட தேவியை பாகத்தே கொண்ட கருணைமூர்த்தியான சிவபெருமானின் புதல்வரே என்று முருகனை போற்றியது காண்பீர்.

அருட்செல்வர் அருணகிரியார் சக்தியையும் சிவனையும் முருகனையும் போற்றியதால் சைவப்பற்று உடையவர், வைணவக் கடவுளாகிய *திருமாலை* விரும்பாதவர் என்று சொல்வதற்கு இடமில்லாமல் *திருமாலின்* புதல்வி தேய்வாயானை என்று *திருமாலின்* பெருமையையும் இந்தத் *திருப்புகழிலேயே* எடுத்துக்காட்டியுள்ளதும் காண்பீர்.

திருமாலின் இராமாவதாரப் பெருமையையும் கிருஷ்ணாவதாரப் பெருமையும் வைணவ ஆழ்வார்களைக் காட்டிலும் அழகு படத்திருமாலின் பெருமையை மாலியின் பாறவொரு ....—காணமுடியோன் என்றது அருட்செல்வர் அருணகிரியார் சமய துவேசமற்று ஆறு சமயங்களையும் நிலை நாட்டவந்த அவதார புருஷர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

நீல வண்டு ஏவிய நல்காமன் நீலோற் பல மலர் பாணத்தை ஏவிய, நல்ல மன்மதன். (வண்டு = பாணம்.) மன்மதனிடம் உள்ள பாணங்கள் ஐந்து. அவை

(1) தாமரைப்பூ, (2) மாம்பூ, (3) அசோகம்பூ
(4) முல்லைப்பூ,(5) நீலோற்பலப்பூ, பாணங்கள் 5

(1)	தாமரை மலர் பாணம்	நினைப்பூட்டும்
(2)	மாம்பூ பாணம்	பசலை நிறம் தரும்
(3)	அசோகு "	உணர்வை நீக்கும்
(4)	முல்லைப்பூ "	கிடைகட்டும் (படுக்கச்செய்யும்)
(5)	நீலோற்பலபூ பாணம்	கொல்லவேசெய்யும்
	வில் கரும்பு வில்	

நினைக்கும் அரவிந்தம் நீள் பசலை மாம்பூ
அனைத்துணர்வு நீக்கும் அசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டும் மாதே, முழு நீலம்
கொல்லுமதன் அம்பின் குணம்.

(இரத்தினச் சுருக்கம்)

செங்கோடை நகர் வாழ வந்தாய்:-

திருச்செங்கோட்டு நகரில் வாழவந்தவரே! எனப் பொருள் கொண்டு உள்ளார்கள் உரையாசிரியர்கள். ஆனால் இவன் கண்ட உரை திருச்செங்கோடு நாகர் வாழ்வுபெற *திருச்செங்கோட்டில் கோயில் கொண்டவரே!* என்பதாகும்.

திருச்செங்கோடன் இத் தரணியை வாழ்விக்க வேண்டி திருச்செங்கோட்டில் கோயில் கொண்டு உள்ளானே யன்றி அவன் வாழ திருச்செங்கோடை நாட வில்லை.

மறை குலாவு செங்கோடு:

மறை = வேதம்
குலாவு = கொண்டாடும், விளங்கும் என்றதான இருபொருளை யும் உடைத்து ஆனதால்

(1) மறை கொண்டாடும் செங்கோடு என்றும், (2) மறை விளங்கும் செங்கோடு என்றும் பொருள் கொள்ளலாம்.
முன்னது மறைகள் போற்றும், பூஜிக்கும் செங்கோடு = வேதங்கள் இத்திருத்தலத்து ஆண்டவனை பூஜித்த செங்கோடு எனவாகும். பின்னது (மறைகள் பூஜித்ததின் காரணமாக என்றும்) வேதங்கள் கோஷம் முழங்கும் செங்கோடு என ஆகும்.

அருட்செல்வர் அருணகிரியர் *கந்தர் அந்தாதி*
பாடல் 23ல், "*ஆரணத் தந்திநகர் என்றும்*"
பாடல் 68ல், "*ஆரண வெற்பாள என்றும்*"
பாடல் 82ல், "செழு மறைதேர் புஜக பூதரம்" என்றும்
பாடல் 90ல், '*ஆரண தந்திகிரி*' என்றும், இத்திருத்தலத்தைப் போற்றியுள்ளதால், நான்கு வேதங்களாலும் பூஜிக்கப்பட்டு வேதகோஷம் என்றும் முழங்கும் *திருச்செங்கோடு*, என இத்திருத்தலத்தின் சிறப்பை விளக்கியுள்ளார்,

13

தத்தன தத்தன தத்தன தத்தன
தத்தன தத்தன — தனதான

பத்தர்க ணப்ரிய நிர்த்தந டித்திடு
பட்சிந டத்திய — குகபூர்வ
பச்சிம தட்சிண உத்தரதிக்குள
பத்தர்கள் அற்புதம் — எனஓதும்
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி — தடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தஅ நுக்ரகம் — மறவேனே;
கத்திய தத்தைக ளைத்துவி ழத்திரி
கற்கவ ணிட்டெறி — தினைகாவல்
கற்றகு றத்திநி றத்தக ழுந்தடி
கட்டிய ணைத்தப — னிருதோளா;
சத்தியை யொக்கஇ டத்தினில் வைத்தத
கப்பனு மெச்சிட — மறைநூலின்
தத்துவ தற்பர முற்றுமுணர்த்திய
சர்ப்ப கிரிச்சுரர் — பெருமாளே;
[384தி.]

கத்திய தத்தை = கூச்சலிட்டுப் பறந்திடும் கிளிகள், **களைத்து விழ** = சோர்ந்து விழும்படி, **திரிகல்கவண் இட்டு எறி** = சுழற்றும் கவணில் கல்லை வைத்து எறிந்து, **தினை காவல்** = தினைப்புனத்தை காவல் செய்ய, **கற்ற குறத்தி** = கற்றுக்கொண்ட குறத்தியாகிய வள்ளி அம்மையாரின், **நிறத்தகழுத்து அடி** = ஒளிபொருந்திய கழுத்தினடியில், **கட்டி அணைத்த** = கட்டித்தழுவிய, **பனிருதோளா** = பன்னிரு தோள்களையுடையவரே !, **சத்தியை** = பராசக்தியான பார்வதி தேவியை, **ஒக்க இடத்தினில்** = சமமாக இடது பக்கத்தில், **வைத்த தகப்பனும்** = வைத்துக்கொண்ட தகப்பனாகிய சிவபெருமானும், **மெச்சிட** = மெச்சிமகிழும்படி, **மறைநூலின்** வேத நூல்களின், **தத்துவம் தற்பரம்முற்றும்** = உண்மைப் பொருள் பரம்பொருள் ஆகியயாவற்றை, **உணர்த்திய** = உபதேசித்து விளக்கி, **சர்ப்பகிரி** = சர்ப்பகிரி என்றும் திருச் செங்கோட்டு மலையில் கோயில்கொண்டு, **சுரர்பெருமானே** =

தேவர்களால் போற்றப்படும் பெருமையில் சிறந்தவரே! பக்தர்கணப்ரிய = உமது பக்தர்களாகிய அடியார்களின் திருக்கூட்டத்தின் அன்புகொண்டவரே! நிர்த்தம் நடத்திடும் பக்ஷி = நடனம் ஆடும்பக்ஷியாகிய மயிலை,

நடத்திய = வாகனமாகக் கொண்ட, குக = குகப்பெருமானே! பூர்வ = கிழக்கு, பச்சிம = மேற்கு, தக்ஷிண = தெற்கு உத்திர = வடக்கு திக்கு உள பத்தர்கள் = ஆகிய நான்கு திக்குகளிலும் உள்ள,பக்தர்கள் எல்லோரும், அற்புதம் என ஓதும் = இது அற்புதம், அற்புதம் என்று மெச்சும்படியாக, சித்ரகவித்வம் = சித்ரகவி பாடும் திறத்துடன் சத்தம் மிகுந்த சந்த மிகுந்த திருப்புகழை = திருப்புகழ் பாடல்களை சிறிது = சிறிதளவு அடியேனும் செப்பு என = அடியவனையும் பாடும்படியாக, வைத்து = அனுக்கிரகம் செய்து, உலகில் பரவ = அத்திருப்புகழ் பாடல்கள் உலக முழுவதும் பரவும் படியும் செய்து, தெரிசித்த அனுக்கிரகம் = உமது தரிசனத்தையும் தந்து அனுக்கிரகம் செய்ததை, மறவேனே = ஒரு போதும் மறக்கவே மாட்டேன்.

ஏனைய பாடல்களைப் போல் இல்லாமல் இப்பாடல் அருட்செல்வர் அருணகிரியாரின் வாழ்க்கைச் சம்பந்தமான விபரங்களைக் கொண்டு உள்ளது.

திருமுருகன் திருவருள் பேற்றே, திருப்புகழ் பாடல்களை அருட்செல்வர் அருணகிரியார் பாடினர். அவருடைய காலத்திலேயே திருப்புகழ் பாடல்கள் அனைவராலும் வரவேற்கப்பட்டு ஆதரித்துப் போற்றப்பட்டு அவருடைய புகழ் நான்கு திசைகளிலும் பரவி, ஆங்காங்கு உள்ள பக்தர்கள் அற்புதம் அற்புதம் என்று திருப்புகழ் பாடல்களையும் அருட்செல்வர் அருணகிரியாரையும் போற்றிப் புகழ்ந்து ஆதரித்தார்கள் என்பதும் இப்பாடலால் தெளிவுபடுத்தப் படுகிறது.

செங்கோடமர்ந்த செங்கோடனை நோக்கி அருட்-செல்வர் அருணகிரியார், சர்ப்பகிரி எனப்படும் திருச்செங்-கோட்டு மலையின்மீது கோயில் கொண்டுள்ள தேவர்கள் போற்றும் பெருமையில் சிறந்தவரே! கூச்சலிட்டுப் பறந்து வந்து தினையைக் கொத்தும், கிளிகள் சோர்ந்து விழும்படி சுழற்றும் கவணில் கல்லை வைத்து சுழற்றி எறிந்து தினைப்

மலைமேல் நாகாசல ஆண்டவரின் கோயில்
நுழைவாயில் (வடக்கு நோக்கியது)

புனம் காவல் செய்யக் கற்றுக் கொண்ட, குறவர் மடந்தை வள்ளி அம்மையாரின் ஆபரணங்கள் அணிந்த தோள்களைக் கட்டித் தழுவிய பன்னிரு புயத்தரே! பராசக்தியாகிய உமா தேவியாரைச் சமமாகத் தமது உடலின் இடப்பாகத்தே கொண்டுள்ள உமது தந்தையாகிய சிவபெருமான் மெச்சி மகிழ்வு உறும்படி அவருக்கு வேதத்தின் உண்மைப்பொருள், பரம்பொருள் ஆகியவற்றையும் உபதேசித்தவரே! உமது பக்தர்களாகிய அடியார்களது திருக்கூட்டத்தார்களுடன் அன்பு கொண்டவரே! நடனம் ஆடும் பக்ஷியாகிய மயிலை வாகனமாகக் கொண்ட குகப்பெருமானே! கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு திக்குகளில் உள்ள பக்தர்கள் அனைவரும் இது அற்புதம் இது அற்புதம் என்று போற்றும் படி சந்தம் மிகுந்த திருப்புகழ் பாடல்களைச் சித்ரக்கவியாகப் பாடும் ஆற்றலைச் சிறிது அடியேனுக்குமளித்து அனுக்கிரகித்த உமது கருணையை என்றும் மறக்கமாட்டேன்; என்பதாகத் தனக்குத் தரிசனமும் தந்து திருப்புகழைப் பாடவும் திருவருள் சுரந்த திருமுருகனுக்குத் தமது நன்றியை இப்பாடல் மூலம் சமர்ப்பித்துள்ளார்.

திருச்செங்கோட்டு மலையின் மீது செங்கோடன் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் வலது கையில் வேலும் இடதுகரத்தில் சேவலும் கொண்டு கோயில் கொண்டுள்ள இந்தமலையின் மீதே சிவபெருமானும், மாதொருபாகனாய் அர்த்தநாரீச்சுரர் எனத் திருப்பெயர் தாங்கி மேற்கு நோக்கிக் கோயில் கொண்டுள்ளதை நமக்குணர்த்துவான் போல் அருட்செல்வர் அருணகிரிநாதர் "சத்தியை யொக்க இடத் தினில் வைத்த தகப்பன்" எனச்சிவபெருமானை அறிமுகப்படுத் துவது அருட்செல்வர் அருணகிரிநாதரின் சொல் சாதுர்யத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இத்திருத்தலத்தில் அருட்செல்வர் அருணகிரிநாதர் எவ்வளவு காலம் தங்கி எவ்வளவு பாடல்களைப் பாடினார், முன் பாடிய பாடல் எது பின் பாடியபாடல் எது என்பதான விவரங்களை அறிவதற்கான சான்றுகள் ஏதும் இல்லை. இத்திருத்தலத்தில் பாடிய 21 பாடல்களே நமக்கு இன்றளவும் கிடைத்துள்ளன. இந்தப் பாடல்களை அச்சேற்றிய பலரும் அவர் அவர்களுக்குத் தோன்றிய

வகையில் வரிசைப்படுத்தியுள்ளதால் இப்பாடல்களை இப்புத்தகத்தில் அகரவரிசையிலேயே வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் இப் பாடலுக்கு முன் பாடலாகத் தமது திருப்புகழ் விரிவுரை ஆறுவது தொகுதியில் "அந்த வேட்கைப்பற்றிநோக்க" எனத்தொடங்கும் திருப்புகழ் பாடலை முன் பாடலாகவும் அதற்கு அடுத்த பாடலாக இந்தப்பாடலையும் கண்டதின் காரணமாகவோ என்னமோ? இப்பாடலில் கண்ட "சித்ர கவித்துவசத்தமி குத்ததிருப் புகழைச் சிறிதடியேனுஞ் செப்பென வைத்துலகிற் பரவத்தெரிசித்தவனுக்ரக மறவேனே" என்ற தொடருக்கு விரிவுரை காணும் போது, முன் பாடலில் அருணகிரிநாதர் "சித்ரவாக்குப்பெற்று வாழ்த்தித் துதிக்கின்ற திறத்தைத் தந்தருள்" என்று வேண்டினர்; அதற்கு இசைந்து திருமுருகன் "சித்ரகவித்துவ சத்தமிகுந்த திருப்புகழைப் பாடுந்திறத்தை அருளியுள்ளார்· அந்த அநுக்கிரகத்தை மறக்கமாட்டேன் என்று அருணகிரிநாதர் சொல்லுவதாக விபரம் கண்டுள்ளார்.

"செப்பென வைத்து" — "செய்ப்பதிவைத்து"

இப்பாடலின் நான்காவது அடியில் உள்ள "செப்பென வைத்து" என்பதற்குப் பதிலாக "செய்ப்பதிவைத்து" எனப் பாடபேதம் உள்ளது. அதன்படி பொருள் காணும் போது இப்பாடலின் மூன்ருவது நான்காவது ஆகிய இரண்டு அடிகளுக்கும் சேர்ந்து "சந்தம் மிகுந்த திருப்புகழ் பாடல் களைச் சித்ர கவியாகப்பாடும் ஆற்றலைச் சிறிது அடியேனுக்கு மளித்து, 'செய்ப்பதியாகிய வயலூரில்' வைத்து அனுக்கிர கித்த உமது கருணையை என்றும் மறக்க மாட்டேன், "அல்லது" சந்தம் மிகுந்த திருப்புகழ் பாடல்களைச் சித்திரக் கவியாக செய்ப்பதியாகிய வயலூரையும் திருப்புகழில் சேர்த்துப்பாடும் ஆற்றலையும் சிறிது அடியேனுக்கு அனுக்கிர கித்த உமது கருணையை என்றும் மறக்கமாட்டேன்" எனப் பொருள் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் "செய்ப்பதிவைத்து" என்னும் பாட பேதத்தை ஏற்றல் அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங் கோட்டை அடைவதற்கு முன்பே 'வயலூர்' திருத் தலத்தைத் தரிசித்தவர் ஆகிருர்.

அருணகிரிநாதர் வரலாறும் நூல் ஆராய்ச்சியும் என்ற அருமையான புத்தகத்தின் ஆசிரியர் திரு. தணிகைமணி டாக்டர். வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ., டி.லிட்., அவர்கள் எழுதிய புத்தகத்தில் அருட்செல்வர் அருணகிரிநாதர் தரிசித்த தலவரிசையில் 87–ஆவது திருத்தலமாக திருச்செங் கோட்டை தரிசித்துத் திருச்செங்கோடனின் அருள் பெற்று அதன் பின் ''வயலூரை'' 92–ஆவது திருத்தலமாகத் தரிசித்தார் எனக்கண்டுள்ளார். இரண்டும் முரண்பாடாக உள்ளன.

இதனுல் அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங் கோட்டை அடைவதற்கு முன்பே வயலூரை தரிசித்தாரா அல்லது திருச்செங்கோட்டை தரிசித்தபின் வயலூர் சென்ருரா என்ற சந்தேகத்திற்கு இடம் தந்துள்ளது.

அருட்செல்வர் அருணகிரிநாதர் திருச்செங்கோட்டி-லேயே பாடியுள்ளதான ''பொன்றலைப் பொய்க்கும் பிறப்பை'' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடல் 375ல்

''செய்ப்பதி மீதே
தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுக்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்கயத்தைத் தருவாயே''

''செய்ப்பதி' என்னும் 'வயலூர்' திருத்தலத்தில் கோயில் கொண்ட வயலூர் ஆண்டவனுக்கு ஆட்பட்டு தொண்டு செய்யும் பணியை மேற்கொண்டு அவரது திருவடிகளில் அட்டாங்கமாக நமஸ்கரித்து திருவடிகளைப் பற்றுவதற்கு செங்கோட்டு வேலவராகிய தாங்கள் உம்முடைய செந் தாமரை போன்ற திருவடியைத்தந்து அருள வேண்டும்'' என்று செங்கோட்டு வேலவனிடத்து வேண்டியுள்ளதால், திருச்செங்-கோட்டை தரிசித்தப் பின்னரே அருட்செல்வர் அருணகிரி-நாதர் வயலூர் சென்று வயலூர் அண்டவனை தரிசித்துள்ளார் என்பது அருட்செல்வரின் வாக்காலேயே உறுதிப்படுத்தப் பட்டு உள்ளதால் ''செய்ப்பதிவைத்து'' என்னும் பாட பேதம் இப்பாடலுக்கு ஏற்றதில்லை என்பதும் தெளிவு படுகின்றது.

திரு தணிகைமணி அவர்கள் வகுத்த திருத்தலயாத் திரையில் கண்டபடி அருணகிரிநாதர் திருச்செங்கோட்டை தரிசித்த பின்னரே வயலூர் சென்று வயலூர் ஆண்டவனை தரிசித்துள்ளார் என்பதே ஏற்புடைத்து.

14

தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த தனதான

பந்தாடி அங்கை தொந்தார் பரிந்து
பைந்தார் புனைந்த குழல் மீதே
பண் பார் சுரும்பு பண்பாடு கின்ற
பங்கே ருகங் கொள் முகமீதே;
மந்தார மன்றல் சந்தாரம் ஒன்றி
வன்பாத கஞ்செய் தனமீதே
மண்டாசை கொண்டு விண்டாவி நைந்து
மங்காமல் உன்றன் அருள்தாராய்;
கந்தா அரன் தன் மைந்தா விளங்கு
கன்று முகுந்தன் மருகோனே
கன்று விலங்கல் ஒன்றுறு கண்ட
கண்டா அரம்பை மணவாளா!
செந்தா தடர்ந்த கொந்தார் கடம்பு
திண்தோள் நிரம்ப அணிவோனே!
திண்கோடரங்கள் எண்கோடுறங்கு
செங்கோடமர்ந்த பெருமாளே.
(திரு 366)

கந்தா = கந்தக் கடவுளே! அரன்றன் மைந்தா = சிவகுமாரனே! விளங்கு கன்று ஆமுகுந்தன் = கன்றுகளையும் பசுக்களையும் காத்து கடவுளாய் விள்ங்கும் திருமாலின் மருகோனே = மருகரே! கன்று = கோபம் கொண்டு. விலங்கல் ஒன்று = மலைகளில் ஒன்றான கிரவுஞ்ச மலையைப் பிளந்து, ஆறுகண்ட கண்டா = வழியை உண்டாக்கிய வீரரே! அரம்பை மணவாளா = தேவலோகத்து மகளாம் தேவசேனையின் மணவாளரே! செந்தாது அடர்ந்த = செவ்விய பூந்தாதுகள் நிரம்பிய, கொந்து ஆர் கடம்பு = பூங்கொத்துகளைக் கொண்டு தொடுத்த கடம்ப மலர் மாலைகளை, திண் தோள் நிரம்ப = வலிமை மிக்க பன்னிரு தோள்களிலும் அதிகமாக, அணிவோனே = அணிந்து கொள்பவரே! திண் கோடரங்கள் = வலிமையுடைய குரங்குகள், எண்கு ஒடு = கரடிகளுடன் உறங்கும் = ஒன்று சேர்ந்து தூங்குகின்ற, செங்கோடு அமர்ந்த = திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட,

பெருமானே = பெருமையிற் சிறந்தவரே!, பந்து ஆடி அம் கை நொந்தார் = பூப்பந்துகளை வைத்து விளையாடியதால் கொப்பளித்திடும் அழகிய மென்மையான கைகளையுடைய மாதர், பரிந்து பைந்தார் புனைந்த = ஆர்வமுடன் அன்று மலர்ந்த மலர்களைக் கொண்டு தொடுத்த பூச்சரங்களைச் சூடிய, குழல்மீது = கூந்தலின் மீதும், பங்கேருகம் கொள் = தாமரை மலர்போன்ற, முகமீதே = முகத்தின் மீதும், பண் ஆர், சுரும்பு = இயல்பாகவே அழகான வண்டுகள், பண்பாடுகின்ற = இனிய இசையுடன் ரீங்காரம் செய்திட, மந்தாரமன்றல் = மந்தார மலரின்வாசமும், சந்தன ஆரம் ஒன்றி = சந்தனமும் மலர்மாலைகளும் சேர்ந்து வாசனை வீசிட, வன் பாதகம் செய் = கொடியப் பாதகங்களைச் செய்திடத் தூண்டும், தன மீது = கொங்கைகள் மீதும், மண்டு ஆசை கொண்டு = அளவுகடந்த ஆசை கொண்டு, விண்டு ஆவிநைந்து—ஆவி பிரிவது போன்ற துன்பங்களையடைந்து, மங்காமல் மங்கி மாய்ந்து போகாமல், உன்றன் அருள்தாராய் = உய்வதற்கான உனது அருளைத் தருவாயாக,

திருவருட்செல்வர் அருணகிரியார் திருச்செங்கோட்டு வேலவனை நோக்கி; - கந்தக்கடவுளே! சிவபெருமானின் அருமை மைந்தரே! கன்றுகளையும் பசுக்களையும் காத்திடும் கடவுளாகிய கோபாலரின் மருகனே! மிகுந்த கோபத்துடன் மலைகளில் ஒன்ருகிய கிரவுஞ்ச மலையைப் பிளந்து அதனுள் அடைபட்ட வீரவாகு தேவர் முதலானவர் வெளிப்பட வழி செய்தவரே! தேவலோகத்தைச் சேர்ந்த தேவசேனை அம்மையாரின் மணவாளரே! செவ்விய பூந்தாதுகள் மிக்க கடம்ப மலர்களைக்கொண்டு அழகுபடத்தொடுத்த மலர் மாலைகளை புஜபராக்ரமிக்க பன்னிரு புஜங்களிலும் நிரம்ப அணிந்து கொள்பவரே! ஒன்றுக்கு ஒன்று பகையாகிய குரங்குகளும் கரடியும் ஒன்று சேர்ந்து ஒரே இடத்தில் துஞ்சும் விசேடமிக்க திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட பெருமையில் சிறந்தவரே! பூப்பந்துகளைக் கொண்டு விளையாடியதால் கைகள் கொப்பளிக்கும் மென்மையும் அழகும் உடைய கைகளையுடைய மாதர்கள் ஆர்வமுடன் அன்று மலர்ந்த அழகிய பூக்களைத் தொடுத்துப் பூச்சரங் களாகத் தமது கூந்தலில் சூடிய மாதர்களின் கூந்தலையும் தாமரை மலர் போன்ற முகங்களைத் தாமரை மலர் என நினைத்தும் வண்டுகள் சூழ்ந்து இயல்பாகவே இனிமையாக ரீங்காரம் செய்யும் அழகான முகத்தின் மீதும், மந்தார

மலரின் வாசனையும் சந்தன மாலைகளின் வாசனையும் சேர்ந்து வீசி கொடியபாதகங்களைச்செய்யத் தூண்டும் கொங்கைகளின் மீதும் மிகுதியான ஆசையைக் கொண்டதின் காரணமாக, ஆவியே பிரிவது போன்ற, துன்பத்தையுற்று அழிந்து போகாமல் உம்முடைய திருவருளை அடியேன் பால் செலுத்தி ஆட்கொள்வீராக, என்று நம்பொருட்டு அருட்செல்வர் தம்மை வியாஜமாக வைத்து நமக்கு அருள் செய்யும்படி நாம் முருகனை வேண்டும் வகையில் பாடியுள்ள பாடலாகும்.

இப்பாடல் மூலம் அருட்செல்வர் அருணகிரியார் நமக்குச் சொல்லாமல் சொல்லும் அறிவுரை:—மாதர்களது கூந்தல் அழகிலும் முகவசீகரத்திலும் கொங்கையின் அழகிலும் மயங்கி மனதைப் பறிகொடுத்து பரிதவிக்காதே. அவைகள் கொடிய பாதகம் செய்யவே, வழிகாட்டும் ஆகையால் திருமுருகன் திருவடியைப்பற்றி அவன் அருள் பெற்று நல்வழி கொண்டு நலம்பெறுவீர். செங்கோடன் கோயில் கொண்ட திருச்செங்கோட்டு மலையின் மீது ஒன்றுக்கு ஒன்று பகையான குரங்கும் கரடியும் ஒன்று சேர்ந்து சிநேக பாவத்துடன் தூங்குகின்றன. ஆகையால் நீங்கள் பகைமையை விடுத்து ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம். என்ற சமத்துவபாவம் கொண்டு அன்பு கொள்வீராக என்பதாம்.

''கன்ரு விலங்கல் ஒன்று ஆறு கண்ட கண்டா":-

விலங்கல்—மலைகள் ஒன்று + ஆறு—ஏழு எனக்கொண்டு ஏழுமலைகளையும் அழித்த வீரனே எனப் பொருள் கொள்வது இவ்விடத்து பொருந்தாது கிரவுஞ்சத்தை பிளந்த செயலே ஈண்டு ஏற்ற முடைத்து. ஏழுகிரிகளும் சூரனுக்குத் துணையாக வந்தன அவற்றை அழித்தார். ஆனல் கிரவுஞ்சன் வீரவாகு தேவரையும் மற்றவர்களையும மாயம் செய்து கிரவுஞ்ச மலைக்குள் சிறைபடுத்தினன். அதன் காரணமாக கிரவுஞ்சன் மீது சினம்கொண்டு அவனைப் பிளந்து வழிசெய்து எல்லோரையும் விடுவித்தார். ஆகையால் கிரவுஞ்சத்தைப் பிளந்ததே இங்கு ஏற்றமுடைய பொருள். அருட்செல்வர் மிகவும் எச்சரிக்கையாக கன்ரு. கோபம் கொண்டு என்ற சொல்லை உபயோகித்துள்ளதும் காண்பீர். ஏழுமலைகளைக் காட்டிலும் திருமுருகனுக்கு கோபம் ஏற்பட்டது கிரவுஞ்ச மலையின் மீது தான் அதிகம்.

கன்று ஆ முகுந்தன்—கன்றுகளையும் பசுக்களையும் காத்த திருமால்.

15

தத்ததன தான தத்ததன தான
தத்ததன தான தனதான

புற்புதமெ னுமை அற்பநிலை யாத
பொய்க்குடில்கு லாவு மனையாளும்
புத்திரரும் வீடு மித்திரருமான
புத்திசலியாத பெருவாழ்வு
நிற்பதொரு கோடி கற்பமென மாய
நிட்டையுடன் வாழும் அடியேன்யான்
நித்தநின தாளில் வைத்ததொரு காதல்
நிற்கும் வகை யோத நினைவாயே
சற்பகிரிநாத முத்தமிழ்வி நோத
சக்ரகதை பாணி மருகோனே
தர்க்கசமண் மூகர் மிக்ககழு வேற
வைத்த ஒரு காழி மறையோனே
கற்புவழு வாது வெற்படியின் மேவு
கற்றை மற வாணர் கொடிகோவே
கைத்த அசுரேசர் மொய்த்த குல கால
கற்பதரு நாடர் பெருமாளே
(திரு 385)

சர்ப்பகிரிநாத = சர்ப்பம் போன்று உள்ள மலையான திருச்செங்கோட்டின் மீது கோயில் கொண்ட நாதனும் திருச்செங்கோட்டு வேலவரே!, முத்தமிழ் விநோத = முத்தமிழுக்காக விநோதங்கள் செய்தவரே!, சக்ரகதைபாணி மருகோனே = சக்ராயுதத்தையும் கதையையும் திருக்கரத்தில் ஏந்திய திருமாலின் மருகரே!, தர்க்க சமண்மூகர் = தர்க்கம் செய்து தோற்று வாய் அடைத்துப்போன சமணர்கள், மிக்க கழு ஏறவைத்த = அனைவரையும் கழு மரத்தில் கழு ஏறச்செய்த, ஒரு காழி மறையோனே = ஒப்பற்ற சீர்காழி என்னும் திருத்தலத்தில் அந்தணர் மரபில் தோன்றிய திருஞான சம்பந்தமூர்த்தியே, கற்பு வழுவாது = மகளிர் தம் ஒழுக்கம் வழுவாமல், வெற்பு அடியில் மேவு = வள்ளி மலை அடிவாரத்தில் வாழும், கற்றை மறவாணர் கொடி = திரளாகவாழும் வேடுவர்களின் குலக்கொடியான வள்ளி அம்மையாருக்கு, கோவே = கொம்பாக அமைந்த வள்ளி

மணவாளரே! கைத்த அசுரர் ஈசர் = சினம் கொண்ட அசுரர் தலைவரின், மொய்த்த குல கால = நெருங்கிய குலத்துக்கு முடிவைச் செய்தவரே, கற்பதரு நாடர் = கற்பக மரம் உள்ள நாட்டினர் ஆன தேவர்கள், பெருமாளே = போற்றிடும் பெருமையில் சிறந்தவரே! புற்பதம் என் நாம = நீர்க்குமிழி என்று சொல்லப்படும், அற்பம் நிலையாத = சிறிதும் நிலையற்றதான, பொய்க்குடில் = பொய்யான இந்த உடலுடன், குலாவு மனையாளும் = உறவு கொள்ளும் மனைவியும். புத்திரரும் = புதல்வர்களும், வீடும் = வீடும் (ஏனைய பொருள்களும்), மித்திரரும் ஆன = நண்பர்களும் ஆன சூழலில், புத்தி சலியாத = புத்தி சோர்வு அடையாத பெருவாழ்வு = இவ்வாழ்வே பெறுதற்கு அரிய பெரு வாழ்வு என்று நினைத்து இவ்வாழ்வு, நிற்பது ஒரு கோடி கற்பம் என = ஒரு கோடி கற்ப காலம் நீடித்து நிற்கும் என்று நினைத்து, மாய நிட்டையுடன் = மாயமான மயக்க நம்பிக்கையில், வாழும் அடியேன் யான் = வாழுகின்ற அடியேனாகிய நான், நித்தம் நினதாளில் = தினந்தோறும் உமது திருவடியில், வைத்த ஒரு காதல் = வைத்துள்ளதான ஓர் அன்பானது, நிற்கும் வகை = நீடித்து நிற்கும்படியான வழியை, ஓத நினைவாயே = உபதேசித்திட நீர் கருணை கொள்ள வேண்டும்.

சர்ப்பம் போன்ற தோற்றத்தைத் தரும் திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட திருச்செங்கோட்டு வேலவரே! முத்தமிழுக்காக பல திருவிளையாடல்கள் செய்த விநோதரே! சக்ராயுதத்தையும் கதையையும் திருக்கைக் கொண்ட திருமாலின் திருமருகரே! பாண்டிமாநகரிலே பாண்டியனது சபையில் அனல் வாதமும் புனல் வாதமும் செய்துசமணர்களை வாதில் வென்று வாய்பேசா ஊமைகளாக்கி கழுவில் ஏறச்செய்த, சீர்காழி என்னும் திருத்தலத்தில் தோன்றிய அந்தணர்குலச் செம்மலான ஞானசம்பந்தரே! மகளிர் ஒழுக்கம் வழுவாது, வள்ளி மலையின் அடிவாரத்தில் வாழும் வேடுவர் குலக்கொழுந்தாம் கொடிபோன்ற வள்ளி அம்மையாருக்குக் கொம்பாய் அமைந்த வள்ளிமணாளரே! சினம் கொண்ட அசுரர்களின் தலைவனுடன் நெருங்கிய குலத்தவர்களையும் அழித்தவரே! கற்பகமரம் உள்ளதான தேவலோகத்தவர்கள் போற்றிடும் பெருமையில் சிறந்தவரே! நீர்மேல் தோன்றும் குமிழி தோன்றியதும் மறைவது போல் சிறிதும் நிலை அற்றதான மெய் எனப்படும் இந்தப்பொய்யான

உடலுடன் உறவாடும் மனைவி, மக்கள் சுற்றம் நண்பர் வீடுவாசல் என்ற சூழ் நிலையில் புத்தியானது வெறுப்பு அடையாமல் இல்வாழ்க்கையே பெறுதற்கு அரிய பெரு வாழ்வு, இவ்வாழ்வு ஒருகோடி கற்ப காலம் இப்படியே நிலைத்து நீடித்து இருக்கும்; என்றும் அழிவு அற்றது என்றும் நினைத்து மயக்க நிலையிலேயே வாழ்கின்ற அடியேன் அனுதினமும் உம்முடைய திருவடிகளில் வைக்கும் எனது ஒரு சிறு பற்று என்றென்றும் நீடித்து நிற்கும் வகையை உபதேசிக்க நீர் கருணை கொண்டு அருள் புரிய வேண்டும் என்று நமக்காகவே அருட்செல்வர் அருணகிரியார் தம்மை வியாஜமாக வைத்து நாம் வேண்டுவது போல் திருமுருகனிடத்து வேண்டியுள்ளார்.

மெய் என்று பெயர் கொண்ட உடல் பொய்யானது இது நீடித்து நிற்காது, நீரின்மேல் தோன்றும் குமிழ் எப்படித் தோன்றியதும் மறைந்து விடுகிறதோ அப்படியே அழிந்து விடும். இந்த உடலுடன் உறவாடும் மனைவி மக்கள் சுற்றம் நண்பர் முதலானவர்களும் வீடு வாசல் போன்றதும் நீடித்து நிற்கக் கூடியதல்ல. தோன்றியயாவும் அழிந்தே போகும் ஆகையால் இந்த உடல் என்றும் நிலைத்து இருக்கக் கூடியது. இந்த வாழ்வு பெறுதற்கரிய வாழ்வு. இவ்வாழ்வுடன் இப்பூமியில் ஒரு கோடி கற்பகாலம் நீடித்து நிலையாக இருக்கலாம் என்று கனவு காணுதீர்கள். இப்பிறவி தப்பினல் மறு பிறவி கிடைப்பது அரிது. ஆகையால் மெய்ப்பு உள்ள போதே திருமுருகன் திருவடியைப் பற்றிப் போற்றி உய்வீர்களாக, என்றும் நிலைத்து நீடித்து இருப்பவன் திருமுருகன் ஒருவனே என்பதை ஓர்ந்து அவன் அடியைப் பற்றுங்கள். உங்கட்கு உய்வு உண்டு என்று அருட்செல்வர் அருணகிரியார் நமக்கு அறிவுரையையும் இப்பாடல் மூலம் சொல்லாமல் சொல்லுகிருர்.

ஒருகோடி கற்பம்:- சாதாரணமாக உலக வழக்கில் ஒருவன் நீடித்தகாலம் வாழ்வதாக நினைக்கின்ருன் என்பதற்கு, ஒரு கோடி கற்பகாலம் ஜீவித்து இருக்கப்போவதாக எண்ணம் போலும் என்பர்.

நானூற்று முப்பத்திரண்டு கோடி வருடம் கொண்டது ஒரு கற்பம். இது பிரமனுக்கு ஒரு நாள் என்பர்.

முத்தமிழ் விநோதன்:- திருமுருகன் முத்தமிழுடன் தொடர்பு கொண்டு திருவிளையாடல்கள் பல செய்துள்ளதால் அருட்செல்வர் அருணகிரியார் திருமுருகனை 'முத்தமிழ் விநோதன்' எனப் போற்றியுள்ளார்.

இத்திருத்தலத்திலேயே திருமுருகன் தமிழுக்காகவும் தமிழ்புலவரும் தமது அடியாருமான ஒருவருக்குமாகச் செய்த திருவிளையாடல் இத்திருத்தலத்துடனும் தொடர்பு கொண்ட திருவிளையாடல் ஆகும்.

பிரதிவாதி பயங்கரன் என்ற கற்றுத்தேர்ந்த ஆணவம் மிக்க தமிழ்புலவர், தன்னிலும் கற்றவர் இல்லை என அகந்தை கொண்டு எல்லாப் புலவர்களுடனும் வாதம் செய்து வென்று வெற்றிக்கொடி நாட்டி திருச்செங்கோட்டில் உள்ள முருக பக்தரும் தமிழ் புலவருமான குணசீலர் என்பவரை வெற்றி கொள்ள திருச்செங்கோட்டை நோக்கி வெண்குடை மேளதாளங்கள் புடை சூழ பல்லக்கில் வந்து கொண்டு இருந்தார் திருச்செங்கோட்டை அடையவும் சர்ப்பம் போல், நீண்டு கிடக்கும் மலையைப்பார்த்ததும், இந்த சர்ப்பம் ஏன் படம் கொண்டு ஆடவில்லை என்று நினைத்து

"சமரமுகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமென்ன
அமரிற் படம் விரித் தாடாததென்னை"

என்று தொடங்கி அதனை முடிக்க முடியாமல் முழித்தார்.

அப்போது ஆங்கு ஆயர் சிறுவனாய் வந்த திருமுருகன்
அஃது ஆய்த்திலையோ!
நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாடுயர்ந்த
குமரன் திரு மருகன் மயில் வாகனம் கொத்துமென்றே"

எனப் பாடலைப் பாடி முடித்தார். அகந்தை கொண்ட பண்டிதரும், தாம் முடிக்க முடியாமல் திகைத்தபாடலை ஓர் ஆயர் சிறுவன் 'இம்மலைமுருகவேளின் மலை. அவர் வாகனமாகிய, மயில் கொத்தும் என்று பயந்து பாம்பு படம் எடுக்கவில்லை என்று எவ்வளவு நயமாகவும் அழகாகவும் ஒரு நொடியில் பாடலைப்பூர்த்தி செய்து விட்டானே என வியந்து, பல்லக்கினின்றும் கீழே இறங்கி ஆயர் சிறுவனை அருகழைத்து மாடு மேய்க்கும் உனக்கு இவ்வளவு நன்ருகக் கவிபாடும் ஆற்றல் எப்படி வந்தது என்று கேட்க, ஆயர் சிறுவனுகிய முருகனும்

தான் திருச்செங்கோட்டில் இருக்கும் கவிதா இரத்தினமான குணசிலருடைய கடை மாணுக்கன் என்றும் தனக்கு நன்கு கவிபாட வராததால் தன்னை குணசீலர் மாடு மேய்க்கும்படி அனுப்பிவிட்டார் என்றும் கூறினர். அது கேட்ட பண்டிதர் கடை மாணுக்கனே இத்துணை சாமர்த்தியமாக நாம் முடிக்க முடியாமல் முழித்தப்பாடலை முடித்துள்ளான் எனில் ஏனைய மாணுக்கர்களும் அவர்களின் ஆசானும் மிகவும் திறம் பெற்றவர்களாக இருக்கத்தான் வேண்டும் அவர்களுடன் வாதிட்டு தோல்வி அடைவதை விடவந்த வழியே ஏகுதல் சிறந்தது எனத்தேர்ந்து திரும்பிவிட்டார்.

இந்த விதம் திருமுருகன் ஆயர் சிறுவனுய் வந்தது தமது பக்தனுன குணசீலர் தம் முன்வந்து தம்மை பிரதிவாதி பயங்கரத்தினிடம் பங்கப்படாமல் காப்பாற்ற வேண்டும் என வேண்டிக் கொண்டதற்கு இசைந்து நடத்திய தமிழ் திருவிளையாடலில் இது ஒன்று.

இதைபோல் திருமுருகன் ஔவைப் பிராட்டியுடன் ஆயர்குலச் சிறுவனுய் வந்து சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டு திருவிளையாடல் புரிந்து உள்ளான் முத்தமிழ் விநோதர் ஆன திருமுருகன்.

தமிழின் மீது பற்று மிகுதியும் கொண்ட தமிழ்க் கடவுளாம் திருமுருகன் ஔவைப் பாட்டியாருடன் சிறிது விளையாடி அவ்வம்மையாரின் பாடல்களைக் கேட்க வேண்டும் என்ற எண்ணங்கொண்டு ஔவையார் வரும் வழியில் ஆயர் சிறுவனுய் வேடம் கொண்டு ஒரு நாவல் மரத்தின் மீது அமர்ந்து இருந்தார் ஔவையாரும் வழி நடந்த களைப்பு தீர அம் மரத்தடியிலேயே அமர்ந்தார். மரத்தில் ஆயர் சிறுவன் நாவற் பழங்களைப் பறித்துக் கொண்டு இருப்பது கண்டு தனக்கும் உண்பதற்கு சில நாவற் பழங்கள் கொடுக்கும்படி ஆயர் சிறுவனைக் கேட்டார். அப்போது அந்த ஆயர் சிறுவன் பாட்டி உங்களுக்கு சுட்டப்பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா என்று கேட்டான். அது கேட்ட ஔவையார் நாவற் பழத்தில் சுடுகிற பழம் கூட உண்டோ, அப்படியாயின் சுடுகிறபழமே கொடு என்று கேட்டார். ஆயர் சிறுவனுன திருமுருகனும் நல்ல கனிந்த பழங்களைப் பறித்து கீழே மணலிற்போட, மணல் பழங்களில் ஒட்டிக்கொண்டது. அதை ஔவையார் மணலைப்

போகக ஊதி ஊதி உண்டார். அப்போது ஆயர் சிறுவனை ஆறுமுகன் பாட்டி பழம் மிகவும் சுடுகின்றதோ ரொம்பவும் ஊதுகின்றீர்களே என்று கேட்க, இந்த உண்மை தெரியாமல் ஓர் ஆயர் சிறுவனிடம் ஏமாந்துவிட்டோமே என்று ஒளவையார் மனம் நொந்து

கருங்காலிக் கட்டைக்கு நாணுக் கோடாலி
இருங் கதலித் தண்டுக்கு நாணும் -பெருங் கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்ற
தீவிரவும் துஞ்சாதென் கண்"

என்று வருந்திப் பாடினர். உடனே திருமுருகன் ஒளவையார் முன் தோன்றி உம்மோடு விளையாடவே வந்தேன் எனக் கூறிச் சில பாடல்களை ஒளவையாரைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்து அருள்புரிந்தார்.

அடுத்து கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடேன் என்று ஆணவம் கொண்டு கூறிய பொய்யாமொழிப் புலவர் மதுரையை நோக்கி ஒரு காட்டின் வழியே செல்லும்போது அவரைத் திருமுருகன் வேடுவனுக வழி மறித்து தம் பெயர் முட்டை என்றும் தம்மைப் பாடும்படியும் அச்சுருத்தினர். வேடனைக் கண்டு பயந்த புலவரும்

"பொன்போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலும்
மான வேல் முட்டைக்கு மாருய தெவ்வர் போம்
கான வேல் முட்டைக்குங்காடு"

என்று பாடினர். பாடவும் வேடனுய் வந்த வேலவன் பாலுள்ள கள்ளி தீப்பற்றி எறியும் போது வேல முள் சாம்பலாக அன்றே ஆகிவிடும் அது எங்ஙனம் தைக்கும், உமது பாடலில் பொருட் குற்றம் உள்ளது உன் பெயரைச் சொல் நான் பாடுகிறேன் என்ருர். புலவர் தன் பெயர் பொய்யா மொழிப் புலவர் எனக் கூறினர். உடனே வேடனுய் வந்த வேலவனும் பொய்யா மொழிப் புலவரே உம் மொழியும் பொய், ஆம்மொழிதான். கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடேன் என்றவா இப்போது முட்டையை அல்லவா பாடியுள்ளீர் என்று எள்ளி நகையாடி அவரை ஆட்கொள்ளவும் செய்தார்.

இது போன்று தமிழின் நிமித்தம் பல விநோதங்களைச் செய்துள்ளார் திருமுருகன். எனவேதான் அருட்செல்வ அருணகிரியார்.

"தமிழ்த்ரய விநோதக் கலாதான்" என்று
வேடிச்சி காவலன் வகுப்பிலும்
"தமிழ்த்ரய விநோதக் காரன்" என்று
வேளைக்காரன் வகுப்பிலும்
"முத்தமிழ் வித்வ விநோதா" என்று
திருப்புகழ் பாடல் (838)லும் கூறியுள்ளார்.

16

தத்தத்தத் தத்தத் தத்தத்
தத்தத்தத் தத்தத் தத்தத்
தத்தத்தத் தத்தத் தத்தத் தனதான

பொற்சித்ரப் பச்சைப் பட்டுக்
கச்சிட்டுக் கட்டிப் பத்மப்
புட்பட்டுக் கொப்பக் கற்பித் திளைஞோர்கள்
புட்பட்டுச் செப்பத் துப்பற்
கொத்தப் பொற் றித்தத் திட்பப்
பொற்பிற் பெற்றுகரச் சக்ரத் தனமானார்
கற்சித்தச் சுத்தப் பொய்ப்பித்
தத்திற்புக் கிட்டப் பட்டுக்
கைக்குத்திட் டிட்டுச் சுற்றித் திரியாமல்
கற்றுற்றுக் சித்திக் கைக்குச்
சித்திப்பப் பக்ஷத் திற்சொற்
கற்பித் தொப்பித்துக் கொற்றக் கழல்தாராய்
குற்சித்துக் கொட்டுக் கொட்டுத்
துக்கச்சத் துக்குக் குக்குக்
குக்குக்குக் குக்குக் குக்குக் கெனமாறு
குட்சிக்குப் பக்ஷிக் கைக்குக்
கக்ஷத்திற் பட்சத் தத்தக்
கொட்டிச்சுட் டிக்கொக் கரிக்குக் குடதாரி
சற்சித்துத் தொற்புத் திப்பட்
சத்தர்க்கொப் பித்தட ஆத்துச்
சத்தத்தைச் சத்திக் கொச்சைப் பதிவாழ்வே

தக்ஷப்பற்றுக் கெர்ப் பத்திற்
செற்பற்றைச் செற்றிட்டுச்சச்
சற்பப்பொற் றைக்குட் சொக்கப் பெருமாளே
(திரு 386)

குட்சிக்குப் பக்ஷிக்கைக்கு = வயிற்றுக்கு உண்பதற்கு இரையில்லாமையால் பசியால் வருந்தி, குற்சித்து = அரு வருப்பு உற்று, கொட்டு கொட்டு = கொட்டு கொட்டு என்று, துக்க அச்சத்து = துக்கமும் அச்சமும் கொண்டு குக்குக்குக்குக்குக்குக் குக்குக்குக்குக் என = குக்குக்குக்குக் குக்குக்குக்குக்குக் என்று, மாறு = ஓயாமல் கத்திக் கொண்டு, கக்ஷத்திற் பட்சம் தத்தக்கொட்டி = விலாப் புறத்துப் பக்கங்களிற் படும்படிச் (சிறகை) அடித்துக், சுட்டி கொக்கரி = குறிப்புடன் கொக்கரிக்கும், குக்குடதாரி = சேவலைத் தாங்கியவரே! சத்சித்து = சத்தும் சித்தும் கூடிய, தொல் புத்திபட்ச = ஆதியாய் ஞானமும் அன்பும் மயமான, அத்தர்க்கு = தந்தையாகிய சிவ பெருமானுக்கு ஒப்பித்த அட்சரத்துச் சத்தத்தை = அட்சரங்களின் சப்தம் கொண்டு தேவாரப் பாடலைப் பாடி சமர்ப்பித்த, சத்தி = ஆற்றல் கொண்டு, கொச்சைப் பதிவாழ்வே = சீர்காழியை வாழவைக்க வந்த திருஞானசம்பந்தரே, தக்ஷப்பற்று = அந்த க்ஷணமே பற்றுவதும், கெர்ப்பத்தில் = மாதவின் கருவிலே, செல்பற்று = சேர்க்கச் செய்யும் மண் பொன் பெண் ஆகிய மூவாசைகளையும், செற்றிட்டு உச்ச சர்பப் பொற்றைருள் = நாகமலையாகிய உயரமான திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட, சொக்கப் பெருமாளே = அழகு மிக்கப்பெருமையிலும் சிறந்தவரே! பொன் சித்ர பச்சைப் பட்டு = பொன் சரிகையால் சித்ர வேலைப்பாடுகள் செய்யப் பட்ட பச்சை நிறமுடைய பட்டு, கச்சிட்டுக் கட்டி = இரவிக்கைகளை அணிந்து இருக்கமாக கட்டிய கொங்கைகள் பத்ம புட்பத்துக்கு ஒப்ப = தாமரை மலருக்கு ஒப்பு ஆகும் என்று, கற்பித்து இளைஞோர்கள் = இளஞ்ஞர்களுக்கு கற்பனை கூறி (அவர்களை), புள் பட்டு செப்பத்து = பறவை களை வலையில் சிக்க வைப்பது போல் வேசியர்கள் தங்களது காம வலையில் சிக்க வைத்து, பொற்றித்த = பொன் தித்த = பொருளைப் பெறுவதற்காக, பல் கொத்த = அவர்களை பல் குறி இட்டு கட்டி அணைத்து, திட்பப் பொற்பில் பெற்று = பக்குவமாகவும் நயச்சியமாக

-வும் அழகாகப் பேசி ஆடவர்களிடமிருந்து பொருளைப் பெற்றிடும், உக்ர சக்ரத்தன மானுர் = கொடிய சக்ரம் போல் வட்ட வடிவமான தனங்களை உடைய விலை மாதர் களின், கல்சித்த = கல் போன்ற கடின நெஞ்சமாகிய, சுத்தப் பொய் பித்தத்தில் புக்கு = சுத்தப் பொய்யான பித்துச் சூழலில் புகுந்து, இட்டப்பட்டு = அதில் அதிக விருப்பம் வைத்து, கைக் குத்திட்டு இட்டு = (தன்னைப் போல் அவ் வேசையரிடம் வரும் மற்ற காமுகர்களுடன்) கைக்குத்துச் சண்டையும் போட்டு, சுற்றித்திரியாமல் = அங்கும் இங்குமா சுற்றித் திரியாமல், கற்று உற்று = ஞான நூல்களைக் கற்று உண்மையடைந்து, சித்தி கைக்கு சித்திப்ப = நல்ல சித்தி யானது கை கூடுவதற்கு, பக்ஷத்தில் = அன்புடன் உன்னைத் துதிக்கும், சொல் கற்பித்து = சொற்களை கற்பித்தும், ஒப்பித்து = அச்சொற்களை உனது திருவடிகளுக்கு திருப்பி ஒப்பித்துப் போற்றுவதற்கு, கொன்றக்கழல் தாராய் = உனது வீரக்கழல் அணிந்த திருவடிகளைத் தந்து அருளு வாயாக.

அருட்செல்வர் அருணகிரியார் இப் பாடலில் திரு முருகனை நோக்கி, உண்பதற்கு உணவு இன்றி வயிற்றுப் பசி யால் வருந்தி கொட்டு கொட்டென்று விழித்துக் கொண்டு துக்கமும் அச்சமும் உற்று குக்குக்குக்குக் என்று ஓயாமல் கத்திக்கொண்டும் விலாப்புறத்தின் பக்கவாட்டில் சிறகை அடித்துக் கொண்டு பசியை அறிவிக்கும் வகையில் கொக்கரக்கோ என்று கூவும் சேவலை திருக்கரத்தே தாங்கிக் கொண்டு இருப்பவரே! சத்தும், சித்தும், நிறைந்து ,ஆதியாய், ஞானமும் அன்பும் மயமான தந்தையாகியசிவபெருமானுக்கு, அட்சரங்களின் ஓசை கொண்டு தேவாரப் பாக்களைப் பாடிக் காட்டிய சீர்காழிச் செல்வமே! மண் பொன் பெண் ஆகிய மூவாசைகளைப் பற்றினல் அப்பற்று மீண்டும் பிறவிக் கேது வான மாதாவின் கர்ப்பத்தில் கொண்டு சேர்க்கும் அத்தகைய அடியேனது மூவாசைகளையும் அடியேனை ஆட்கொண்ட அக்கணமே போக்கி, உயர்ந்த திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட அழகில் சிறந்த பெருமை மிக்கவரே!

பொற்சரிகை கொண்டு விசித்திரமாக சித்ரவேலைகள் செய்யப்பட்ட பட்டு இரவிக்கைகளை அணிந்து இருகக் கொங்கைகளை கட்டி அதைத் தாமரைப் பூவிற்கு நிகர் என்று இளஞ்ஞர்களுக்கு விவரித்து, பறவைகளை வேடன் வலையில்

சிக்கவைப்பது போல் தங்களது வலையில் சிக்க வைக்கும் வேசியர்கள் அந்த இளஞ்ஞர்களிடமிருந்து பொன்னைப் பெறு வதற்காக நயச்சியமாகவும் பக்குவமாகவும் பேசி பல்குறி இட்டு அணைத்து கொடிய சக்கரம் போல் உள்ள வட்ட வடிவமான கொங்கைகளைக் காட்டியும் அபகரிக்கும் கல் நெஞ்சர்களின் சுத்தப் பொய்யான காம மயக்கில் மூழ்கி இஷ்டம் கொண்டு அவ்வேசையர்களை நாடி வரும் மற்றவர் களுடன் எதுத்துச் சண்டையும் செய்து இந்த விதமாக வீணேசுற்றித் திரிந்து அலையாமல், ஞானம் தரும் நல்ல நூல்களைக் கற்று உம்மை அடைந்து நல்ல சித்திகள் கை கூடப்பெற்று அன்புடன் உம்மை துதிப்பதற்கான நல்ல சொற்களைக் கற்பித்தும் அதையே திருப்பிச்சொல்லி உம்மை போற்றுவதற்கும் உம்முடைய வீரக்கழல் அணிந்த திருவடி களைத் தந்து அருள்வாயாக என்று இப்பாடலையும் நம் பொருட்டே திருமுருகனிடத்து தம்மை வியாஜமாகவைத்து நாம் வேண்டுவது போல் வேண்டியுள்ளார்.

இப்பாடல் மூலம் அருட்செல்வர் நமக்கு உணர்த்தும் அறிவுரை:-

வேசியர் மயக்கத்தில் மயங்கி அவர்கள் வலையில் சிக்கிடாதீர்கள். அது வேதனையைத் தரும். மண் ஆசை பெண் ஆசை, பொன் ஆசை, ஆகிய மூவாசைகளையும் விட்டு முருகன் திருவடிகளைப் பற்றுங்கள். மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து உழல்வதற்கு காரணம் மூவாசையே. அதனை அகற்றுவீர். திருமுருகன் திருவடியைப்பற்றுங்கள். அவன் உங்கட்கு மூவாசையையும் ஒழித்து இனியும் பிறவா வரம் தருவான்.

அடியேனது மூவாசைகளை போக்கி அருளியவன் திருமுருகனே!

ஞான நூல்களைக் கற்று அதைக் கொண்டு திரு முருகனைப் போற்றிப் புகழுங்கள். அவனைப் பற்றினால்அவனை நீங்கள் எப்படி எல்லாம் புகழ வேண்டும் என்பதை கற்றுத் தருவான். அது கொண்டு அவனையே புகழ்ந்து போற்றுங் கள். மற்றுநரர்களைப் போற்றித் திரியாதீர்கள் என்பதாம்.

இப்பாடலில் சந்தம் நோக்கி தக்ஷணப்பற்று என்பது தக்ஷப்புற்று என்றும் அட்சரத்து என்பது அட்சத்து என்றும் உபயோகிக்கப்பட்டுள்ளது.



திருச்செங்கோட்டு மலையின் அடிவாரத்தில்
உள்ள ஆதிசேடன் திருவுருவம்.

17

தந்த தத்தத் தந்த தத்தத்
தந்த தத்தத் தந்த தத்தத்
தந்த தத்தத் தந்த தததத் — தனதான.

பொன்ற லைப்பொய்க் கும்பி றப்பைத்
தும்ப றுத்திட் டின்று நிற்கப்
புத்தி யிற்சற் றுங்கு றிக்கைக் — கறியாமே-
பொங்கி முக்கிச் சங்கை பற்றிச்
சிங்கி யொத்தச் சங்க டத்துப்
புண்ப டைத்துக் கஞ்ச மைக்கட் — கொடியார்மேல்
துன்றும் இச்சைப் பண்ட னுக்குப்
பண்ப ளித்துச் சம்ப்ர மித்துத்
தும்பி பட்சிக் கும்ப்ர சச்செய்ப் — பதிமீதே
தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுக்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்க யத்தைத் — தருவாயே;
குன்றெ டுத்துப் பந்தடித்துக்
கண்சி வந்துச் சங்க ரித்துக்
கொண்ட லொத்திட் டிந்த்ர னுக்கிச் — சுரலோகா
கொம்பு குத்திச் சம்ப முத்தித்
திண்ட லத்திற் றண்டு வெற்பைக்
கொண்ட முக்கிச் சண்டையிட்டுப் — பொரும்வேழம்
சென்று ரித்துச் சுந்த ரிக்கச்
சந்த விர்த்துக் கஞ்சு கித்துச்
சிந்தை யுட்பற் றின்றி நித்தக் — களிகூருஞ்
செண்ப கத்துச் சம்பு வுக்குத்
தொம்ப தத்துப் பண்பு ரைத்துச்
செங்கு வட்டிற் றங்கு சொக்கப் — பெருமாளே.

[திரு 375]

குன்று எடுத்து பந்தடித்து = மலையை எடுத்துப்பந்து ஆடுவது போல், கண்சிவந்து சங்கரித்து = கண் சிவக்கும் படி கோபம் கொண்டு சூரனைப்பந்தாடி அழித்து, கொண்டல் ஒத்திட்டு = கைம்மாறு கருதாது மழை பொழியும் மேகத்தைப் போல், இந்திரனுக்கு இ சுரலோகா = தேவேந்திரனுக்கு

அவனது நாட்டை மீட்டுக் கொடுத்த தேவலோகாதிபதியே! கொம்புகுத்தி = கொம்பினால் குத்தியும், சம்பு அழுத்தி = சம்பு கொண்டு அழுத்தியும், திண் தலத்தில் = திண்மையான பூமியில் உள்ள, வெற்பை = மலைகளை, தண்டு கொண்டு அமுக்கி = கதையைக் கொண்டு அமுக்கியும், சண்டையிட்டு = சண்டைகள் செய்து, பொரும் வேழத்தை = போர் புரிந்த யானையை, சென்று உரித்து = எதிர்சென்று கொன்று அதன் தோலை உரித்து தரித்துக்கொண்டு, சுந்தரிக்கு அச்சம் தவிர்த்து = உமாதேவியாரின் பயத்தைப்போக்கி, கண்சுகித்து = மகிழ்வுடன், சிந்தையுட் பற்று இன்றி = திருவுளத்தில் எதன் மீதும் பற்று இல்லாமல், நித்தம் களிகூரும் = எப்போதும் ஆனந்தம் கொண்டவராய், செண்பகத்துச் சம்புவுக்கு = செண்பகமலர் சூடும் சிவபெருமானுக்கு, தொம் பதத்து பண்பு உரைத்து = 'தவம்' என்னும் சொல்லுக்கு விளக்கம் கூறி, செங்குவட்டிற் = திருச்செங்கோட்டு மலையின் மீது, தங்கும் = கோயில்கொண்ட, சொக்கப் பெருமாளே = அழகில் சிறந்த பெருமையை உடைய பெருமானே! பொன்றலை = இறந்துபடுதலை, பொய்க்கும் = பொய்யாக்கும், பிறப்பை = பிறவியை, தும்பு அறுத்திட்டு = பிணைக்கும்கயிறு ஆகியவினையை நீக்கி, இன்று நிற்க = இன்று ஒரு நிலையில் நிற்கும்படி, புத்தியில் சற்றும் = புத்தியிலே ஒரு சிறிதும், குறிக்கைக்கு = குறித்துக்கொள்ள, = அறியாமே = அறியாமல், பொங்கிமுக்கி = கோபத்தால் கொதித்து முயற்சி செய்தும், சங்கைபற்றி–சந்தேகம் கொண்டு, சிங்கி ஒத்த சங்கடத்து = நஞ்சு ஒத்த, துன்பங்களால், புண் படைத்து = மனம் புண்ஆகி, கஞ்சமைக்கண் = தாமரை மலர் போன்று மை பூசிய கண்களையுடைய, கொடியார்மேல் = மாதர்கள்மீது, துன்றும் இச்சைப் பண்டனுக்கு = மிகுதியும் காம ஆசை கொண்ட எனக்கு, பண்பு அளித்து = நற் குணத்தை அளித்து, சம்பிரமித்து = சிறப்புறச் செய்து, தும்பி பட்சிக்கும்ப்ரச = வண்டுகள் உண்ணும் தேனை உடைய, செய்பதி மீதே = வயலூர் எனும் திருத்தலத்திலேயே, தொண்டுபட்டு = தொண்டு செய்து, தெண்டன் இட்டு = பணிந்து போற்றி, கண்டு பற்ற = தரிசனத்தைக்கண்டு திருவடிகளைப் பற்றுமாறு, தண்டைவர்க்க = தண்டை முதலான அணிகளை அணிந்த, துங்கஅரத்த பங்கயத்தை = தூய்மையும் செம்மையும் உடைய உம்முடைய திருவடித் தாமரைகளை, தருவாயே = தந்து அருள்வாய்.

இப்பாடலில் அருட்செல்வர் அருணகிரியார் முருகனை நோக்கி,மலையை எடுத்து பந்து ஆடுவது போல் சீற்றத்துடன் சூரனுகிய மலையைப்பந்துப்போல் ஆடி அழித்துக் கைம்மாறு கருதாது மழையைப பொழியும் மேகத்தைப் போல் தேவேந்திரனுக்கு அவனது நாட்டை மீட்டுக் கொடுத்தத் தேவலோகாதிபதியே! கொம்பினுல் குத்தியும் சம்புகொண்டு அழுத்தியும், திண்மையான பூமியின் மீது உள்ள மலைகளை கதைகொண்டு தாக்கியும் சண்டைகள் செய்து போர் புரிய வந்த யானையை எதிர்த்துச் சென்று அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்துகொண்டு அருகில் உள்ள உமா தேவியாரின் பயத்தைப்போக்கி, மகிழ்வுடன் திருவுளத்தில் எதன்மீதும் பற்றுஇன்றி எப்போதும், சண்பகமலரைச் சூடிக் கொண்டு ஆநந்தமாகவே இருக்கும் சிவபெருமானுக்கு த்வம் என்னும் சொல்லுக்கு விளக்கம் கூறி, திருச்செங்கோட்டின் மலைமீது கோயில்கொண்ட அழகில் சிறந்த பெருமையை உடைய பெருமாளே!

இறத்தலைப்பொய்யாக்குவது பிறவி; பிறவி இல்லையேல் இறத்தல் இல்லை, இறத்தல் இல்லையேல் பிறவியும் இல்லை, இறத்தலையும் பிறவியையும் பிணைப்பது வினை. வினை அற்ருல் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. அந்த வினையை நீக்கி புத்தியானது ஒரே நிலையில் நின்று நல்ல ஒழுக்கத்தை மேற் கொள்ள அறியாமல் சினம் கொண்டு கொதித்தும் முயற்சிகள் செய்தும் சந்தேகம் கொண்டும் நஞ்சு ஒத்த துன்பங்களால் மனம் புண்ஆகி மைபூசி தாமரைமலர் போன்ற கண்களை உடைய மாதர்கள் மீது மிகுதியும் காம ஆசை கொண்ட எனக்கு, நற்குணத்தை அளித்து சிறப்புறச் செய்து வண்டுகள் உண்ணும் தேன் மிகுந்த வயலூரில் வந்து தரிசித்து திருவடி களை வணங்கித் தொண்டுகள் புரிந்து திருவடிகளைப்பற்று வதற்கு தண்டை முதலான ஆபரணங்களை அணிந்த, தூய்மையும் செம்மையும் ஆன உமது திருவடித் தாமரை களைத் தந்து அருள் செய்ய வேண்டுமென, செங்கோடனை வேண்டியுள்ளார்.

இப்பாடல் மூலம் அருட்செல்வர் அருணகிரிநாதர் நமக் கெல்லாம் சொல்லாமல் சொல்லி உணர்த்தும் அறிவுரை:—

பிறவிக்கு வித்து வினை. வினையின் காரணமாகவே நாம் பிறவிகளைப் பெறுகின்ருேம். இப்பிறவியில் எடுத்த உடல் என்றும் நீடித்து நிற்காது. இறந்துபட்டே ஆகும். வினைகளைச்

செய்யத் தூண்டுவது மாதர் ஆசையேயாகும். அவ்வாசை ஆண்டவனையும் நினைக்கவிடாது. ஆகையால் மாதர் ஆசையை மறந்து மால்மருகன் மலரடி பற்றி உய்யும் வழி காண்பீர் என்பதாம்.

"குன்றெடுத்துப் பந்த டித்துக்
கன்சி வத்துச் சங்கரித்துக்
கொண்ட லொத்திட் டிந்தரனுக்கிச் சுரலோகா"

என்னும் இந்த மூன்றுவரிகளுக்கும் உரை ஆசிரியர்கள் கிரவுஞ்ச மலையை வேலாயுதத்தால் பந்து போல் எறிந்து கண் சிவந்து அதனை அழித்து மேகம் போல் கைம்மாறு கருதாது இந்திரனுக்குத் தேவலோகத்தை ஈந்தவரே! எனப் பொருள் கண்டுள்ளார்கள்.

கிரவுஞ்சனை அழிப்பதால் தேவலோகம் மீட்கப்பட முடியாது. சூரபதுமனை அழித்தால்தான் தேவலோகம் மீட்கப் படும். ஆகையால் மலை போன்ற தேகத்தை உடைய சூரபதுமனை எடுத்து பந்து போல் பந்தாடி கண் சிவக்கும் படி கோபம் கொண்டு சூரனை அழித்து கைம்மாறு கருதாத மேகம் போல் தேவலோகத்தை தேவேந்திரனுக்கு மீட்டுக் கொடுத்த தேவலோகாதிபதியே! என்ற பொருளே ஏற்ற முடைத்தாம்.

திருவண்ணாமலையில் திருமுருகனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்ட "முத்தைத்தரு பத்தித்திருநகை" என்ற பாடலை பாடியபின் அருட்செல்வர் அருணகிரிநாதர் வேறு எங்கும் எந்தப் பாடலையும் பாடாமல் வயலூர் சென்று வயலூர் ஆண்டவனை தரிசித்தப் பின் திருப்புகழ் பாடினார் என்று ஒரு சிலரும், வயலூர் செல்வதற்கு முன்பே, பல திருத்தலங்களைத் தரிசித்தே ஆங்காங்கே திருப்புகழ் பாடல் கள் பாடிய பின்பே வயலூர் அடைந்தார் என ஒரு சிலரும் கூறி வருகிறார்கள்.

திரு தணிகைமணி அவர்கள திருச்செங்கோட்டை தரிசித்தபின் தான் அருணகிரிநாதர் வயலூர் சென்று வயலூர் ஆண்டவனை வழிபட்டார் என்று அவர் கண்ட திருத்தல யாத்திரை வரிசையில் கண்டுள்ளார்.

இந்த சர்ச்சைக்குத் தீர்வு காணும் வகையில் அருட்செல்வர் அருணகிரிநாதர் இந்தப் பாடலில், திருச்செங்கோட்டு வேலவரை தரிசித்து அவரது அருள் ஆசியைப் பெற்ற பின் தான் வயலூர் சென்று வயலூர் வள்ளலைக் கண்டு அவருக்குத் தொண்டு செய்தார் என்ற உண்மையை

"செய்பதி மீதே
தொண்டு பட்டுத் தெண்ட னிட்டுக்
கண்டு பற்றத் தண்டை வர்க்கத்
துங்க ரத்தப் பங்கயத்தைத் தருவாயே".

என்று அருட்செல்வர் அருணகிரிநாதரின் வாக்கே உறுதிப் படுத்துவது காண்பீர்.

பாடல் 13 இல் விளக்கமும் காண்பீர்;

18

தந்தத் தனத்தந் தாத்தன தந்தத் தனத்தந் தாத்தன
தந்தத் தனத்தந் தாத்தன தனதான.

மந்தக் கடைக்கண் காட்டுவர் கந்தக் குழற்பின் காட்டுவர்
மஞ்சட் பிணிப்பொன் காட்டுவர் அநுராக
வஞ்சத் திரக்கங் காட்டுவர் நெஞ்சிற் பொருத்தங் காட்டுவர்
வண்பற் றிருப்புங் காட்டுவர் தனபாரச்

சந்தம் பொருப்புங் காட்டுவர் உந்திச் சுழிப்புங் காட்டுவர்
சங்கக் கழுத்துங் காட்டுவர் விரகாலே
சண்டைப் பிணக்குங் காட்டுவர் பண்டிட் டொடுக்கங் காட்டுவர்.
தங்கட் கிரக்கங் காட்டுவ(து) ஒழிவேனோ

பந்தித் தெருக்கந் தோட்டிணை இந்துச் சடைக்கண் சூட்டுமை
பங்கிற் றகப்பன் தாட்டொழு குருநாதா
பைம் பொற் பதக்கம் பூட்டிய அன்பற்கெதிர்க்குங் கூட்டலர்
பங்கப் படச்சென் றோட்டிய வயலூரா

கொந்திற் புனத்தின் பாட்டிய வந்தக் குறப் பெண் டாட்டொடு
கும்பிட் டிடக் கொண்டாட்டமொ டணைவோனே.
குன்றற் கடப்பந் தோட்டலர் மன்றற் ப்ரசித்தங் கோட்டிய
கொங்கிற் திருச்செங் கோட்டுறை பெருமானே.

(திரு 376)

பந்தித்த எடுக்கந் தோட்டினை = தொடுக்கப்பட்ட எருக்கம் பூ மாலையையும், இந்துச் சடைக்கண் சூட்டும் = சந்திரனையும் சடையில் சூட்டிக் கொண்ட வரும், உமை பங்கில் = உமாதேவியை இடப்பாகத்தே கொண்டவருமான், தகப்பன் = தந்தையாகிய சிவபெருமான், தாள் தொழு குருநாதா = உம்முடை திருவடிகளைப் தொழுதிடும் குருநாதரே! பைம்பொன், பதக்கம் பூட்டிய = பசும் பொன்னால் ஆகிய பதக்கத்தைச் சூட்டிய, அன்பற்கு = அடியவருக்கு, எதிர்க்கும் கூட்டலர் = (அவரை) எதிர்த்து வந்த பகைவர்கள் கூட்டத் தாரின், பங்கப்பட = எதிர்ப்பு தோல்வி அடையும்படி, சென்று ஒட்டிய = எதிர் சென்று பகைவர்களை புறங்காட்டி ஓடும் படிச் செய்த, வயலூரா = வயலூரில் கோயில் கொண்டவரே! கொந்திற் புனத்தின் பாட்டு = கொத்துக் கொத்தாக பூக்கள் பூத்துக் குலுங்கும் தினைப்புனத்தினிடத்தே, இயல் அந்தக் குறப் பெண்டு = இருந்த அந்த குறப்பெண்ணும் வள்ளி அம்மை யாரொடு, ஆட்டொடு = திருவிளையாடல் செய்து, கும்பிட்டிட = அவள் பாதத்தைப் பணிந்து, கொண்டாட்ட மொடு = மகிழ்வுடன், அணைவோனே = அணைந்து தழுவுகின்றவரே கொங்கில் = கொங்கு நாட்டில் உள்ள குன்றில் = மலைகளில், கடப்பம் தோட்டு அலர் மன்றல் = கடப்பமலர் சோலைகளில் வீசும் மலர்களின் வாசனைக்கு, ப்ரசித்தம் கோட்டிய = பிரசித்தத்தைத் தேடிக்கொண்ட திருச்செங்கோட்டுறை = திருச்செங்கோட்டு மலையில் கோயில் கொண்ட, பெருமாளே = பெருமையில் சிறந்தவரே! மந்தக்கடைக்கண் காட்டுவார் = (வேசியர்கள் ஆடவர்களை, வசிகரிப்பதற்காக முதலில் மெது வாகத் தமது கடைக்கண்களால் சாடை காட்டி அழைப் பார்கள்:, கந்தக் குழற்பின் காட்டுவர் = பின் வாசனை பூசிய கூந்தலைக் காட்டுவார்கள், மஞ்சள் பிணி பொன் காட்டுவர் = மஞ்சள் பூசிய முகத்தின் பொலிவைக் காட்டுவார்கள் = அநுராக வஞ்சத்து இரக்கம் காட்டுவர் = காமப்பற்று, உள்ளவர்கள் போல் வஞ்சனையாக உருக்கம் காட்டி நடிப்பார்கள், நெஞ்சிற் பொருத்தம் காட்டுவர் = நெஞ்சத்தே அன்பு கொண்டவர்கள் போல் காட்டுவார்கள், வண் பல் திருப்புங் காட்டுவர் = வளமான பற்களின் அழகைக் காட்டி பல் இளிப்பார்கள், தனபாரச் சந்தப் பொருப்புங் காட்டுவர் = மலை போன்றுப் பருத்துள்ள அழகிய கொங்கைகளையும் அசைத்துக் காட்டு வார், உந்திச் சுழிப்புங் காட்டுவர் = உந்தியின் சுழியையும் காட்டுவார்கள், சங்கக் கழுத்துங் காட்டுவர் = சங்கு போன்ற கழுத்தையும் காட்டுவார்கள், விரகாலே சண்டைப் பிணக்கும்

காட்டுவர் = சாமர்த்தியமாக் சண்டையிட்டு ஊடுதலையும் காட்டுவார்கள், பண்டு இட்ட ஒடுக்கம் காட்டுவர் = நீடித்த நேசக் குறைப்பையும் காட்டுவார்கள், தங்கட்டு = ஆகிய வேசியர்களுக்கு, இரக்கம் காட்டுவது = கருணை காட்டுவதை, ஒழிவேனோ = ஒழிக்க மாட்டேனோ.

கொங்கு நாட்டில் உள்ள மலைகளில் மிகவும் சிறந்து வாசனை மிகுந்த கடப்ப மலர் சோலைகளைக் கூடுதலாக உடையதும் கடப்ப மலர் மாலைக்கு புகழ் பெற்றதுமான திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட செங் கோட்டு வேலவரே! எருக்கம் பூ மாலைகளையும் சந்திரனையும் சடாமகுடத்தில் கொண்ட உமை யொரு பாகர் சிவபெருமான் உமது தாளைப் பணியும் படியான பெருமை கொண்ட குருநாதரே! பசும் பொன்னால் ஆகிய பதக்கத்தை உமக்கு அணிவித்து ஆனந்தம் கொண்ட பக்தனை, எதிர்த்து வந்த பகைவன், தோல்வியுற்று, ஓடும்படிச் செய்து பக்தனைக் காப்பாற்றிய வயலூர் குமரேசா! கொத்துக் கொத்தாக பூக்கள் பூத்துக் குலுங்கும் தினைபுனத்திலே இருந்த குறவர் குலக் கொழுந்தாம் வள்ளியம்மையாருடன் திருவிளையாடல் கள் செய்து அம்மையார் பாதம் பணிந்து, மகிழ்வுடன் அம்மையாரைத் தழுவியவரே!

ஆடவர்களை வசீகரித்து அவர்களைத் தமது காம வலை யில் சிகக வைத்து பொருள் தேடவே, விலை மாதர்கள் முதலில் கடைக்கண் சாடை காட்டி அழைப்பார்கள். பின் நறுமணம் பூசிய கூந்தலை ஆற்றுவதுபோல் ஆற்றிவாசனை வீசச் செய்வார்கள். மஞ்சள் பூசிய முகத்தின் பொலிவைக் காட்டுவார்கள். காமப் பற்று உள்ளவர்கள் போல் வஞ்சனை யாக உருக்கம் காட்டி நடிப்பார்கள். நெஞ்சில் அன்பு உள்ளவர் போல் பசப்புவார்கள். வளமான பற்களின் அழகைக் காட்டி பல் இளிப்பார்கள். மலை போன்று பருத்த அழகிய கொங்கைகளை அசைத்துக் காட்டுவார்கள். சாமர்த்தியமாகச் சண்டை இட்டு ஊடுதலையும் காட்டுவார் கள். நீடித்த நேசத்தின் குறைப்பையும் காட்டுவார்கள். இத்தகைய வேசியர்களிடம் அன்பு கொண்டு கருணை காட்டு வதை விட்டு ஒழித்திட அருள் செய்வாய் என்று நாம் திருமுருகன் திருவருளை வேண்டுவது போல் நமக்காகப் பாடி யுள்ளார்.

இப் பாடல் மூலம் அருட்செல்வர் அருணகிரியார் நமக்கு உணர்த்தா நிற்பது வேசியர்களின் கதையை விவரமாகக் கூறியுள்ளேன். அவர்கள் பால் கருணை கொள்ளாதீர்கள். அவர்களுக்கு காட்டும் கருணையை ஏழை எளியவர் களிடத்தே காட்டுங்கள். கந்தன் கழல் பற்றுங்கள். காத்திடு வான் கந்தன். வயலூர் ஆண்டவனுக்கு உள்ளன்புடன் ஒருவன் பதக்கம் செய்து அணிவித்தான். அவனுக்கு அவன் பகைவனை எதிர்த்து வெற்றி காணச் செய்தான். உள்ளன் புடன் தன்னை நேசித்த வள்ளியை நாடிச் சென்று அவன் திரு-வடியையும் பணிந்து உள்ளாள். அப்படிப் பணிந்த முருகன் சாதாரணமானவன் அல்லன். அவரது திருவடியைச் சிவபெருமானே பணிந்துள்ளார். அவன் எல்லோருக்கும் குருநாதன். அவன் திருவடியைப்பற்றி உய்வீர் என்பதாம்.

உமை பங்கிற் றகப்பன் தாட்டொழு குரு நாதா.

சொல்லின் செல்வர் அருட்செல்வர் அருணகிரியார் சொற்களை அமைக்கும் சாதுர்யத்தால், இச் சொற்றொடருக்கு, உமா தேவியை ஒரு பாகத்தே கொண்ட சிவபெருமானுன் தகப்பனுரின் திருவடிகளைத் தொழுகின்ற குருநாதரே! என்றும் உமாதேவியை ஒரு பாகத்தே கொண்ட சிவபெருமானுகிய தகப்பனுர் உமது தாளைத்தொழும் குருநாதரே என்று இரண்டு விதமாகவும் பொருள் கொள்ளும் வகையில் அமைத்துள்ளார்.

இந்த சொற்றொடருக்கு இரண்டு பொருளும் பொருத்த மாகவே உள்ளது. எனினும் ஈண்டு திருமுருகனை "குருநாதா" என்று போற்றுவதால் அதற்கு ஏற்ப இப் பாடலைப் பொருத்த வரையில், 'தகப்பனுராகிய சிவபெருமானுல் பணியும் திருவடி களை உடைய குருநாதனே' என்ற பொருளே இங்கு ஏற்ற முடைத்து.

இவ்விதம் இரு பொருள்படும்படி அருட்செல்வர் அருணகிரியாரின் வாக்குகள் சில காண்போம்.

1. வள்ளிபதம் பணியும் வேளை. இதற்கு வள்ளியின் பாதம் பணியும் வேள் அல்லது வள்ளியால் பாதம் பணியப் பெறும் வேள் என்றும்
2. வள்ளி பாதம் பணியும் தணியன். இதற்கு வள்ளியின் பாதம் பணியும் தணியன் அல்லது வள்ளியால் பாதம் பணியப் பெறும் தணியன் என்றும்

3. குறமகள் பாதம் போற்றும் பெருமாள் (தி. 679) இதற்கு குறமகள் பாதம் போற்றும் பெருமாள் அல்லது குறமகளால் பாதம் போற்றப்படும் பெருமாள் என்றும்.

4. வள்ளி மையல் கொள்ளும் செல்வப் பிள்ளை (தி. 665) இதற்கு வள்ளி மீது மையல் கொள்ளும் செல்வப் பிள்ளை அல்லது வள்ளியால் மையல் கொள்ளப்படும் செல்வ பிள்ளை என்றும் இரு வகையிலும் பொருள் கொள்ளும் அழகு வியக்கற்பாலது.

"பைம் பொற் பதக்கம் பூட்டிய அன்பற் கெதிர்க்குங் கூட்டலர் பங்கம் படச் சென் றோட்டிய வயலூரரா"

வயலூரில் கோயில் கொண்ட திரு முருகனுக்கு அவர் பால் உண்மை அன்பு கொண்ட ஓர் அடியார் அவருக்கு பசும் பொன்னால் ஆன பதக்கம் ஒன்றை அணிவித்து அந்த அழகினை அனுபவித்த ஒருவருக்கு ஏற்பட்ட பகைவர்களின் எதிர்ப்பை முறியடித்துத் திருமுருகன் காப்பாற்றிய செயல் பற்றிக் கூறியுள்ளார்.

திருமுருகன் எளியார்களுக்கு எளியர். முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான். பொற்பதக்கம் பூட்டினால் தான் அருள்வான் என்பதில்லை. அடியவர்கள் உள் அன்புடன் உருகி உள்ளத்தில் கொண்டால் நிச்சயம் அருள் செய்வான் உண்மை.

இந்தத்திருச்செங்கோட்டிலேயே சிறந்த முருக பக்தரான குணசீலர் என்ற தமிழ் புலவர் மறுநாள் தன்னுடன் தர்க்க வாதம் செய்ய வரப்போகும் பிரதிவாதி பயங்கரன் என்ற அகந்தை மிகுந்த புலவரிடமிருந்து தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டதற்கு இணங்க, திருமுருகனே ஆயர் சிறுவனாக அப்புலவர் முன் சென்று அவரை வெற்றிக்கொண்டு திரும்பிப்போகச் செய்த சரிதையை திருப்புகழ்பாடல் 15 ல் காண்பீர்.

அருட்செல்வர் அருணகிரியார் குறிப்பிட்டுள்ளபடி வயலூர் வள்ளலுக்கு பொற்பதக்கம் அணிவித்து அழகுக்கு அழகு செய்து ஆனந்தம் அடைந்து, அவன் அருள் பெற்ற அடியார், யார் என்று விளங்கவில்லை என்றாலும் அவர்

சிறுபாணாற்றுப்படை எனும் சங்க நூலில் போற்றப்படும் நல்லியக்கோடன் என்ற அரசனைத்தான் இருக்க வேண்டும் எனக் கருத ஆதாரங்கள் உள்ளன.

எனவே நல்லியக் கோடன் சரிதையை காண்போம்.

நல்லியக்கோடன் என்பவர் சங்க கால அரசர்களில் ஒருவர். இவர் முருகனிடத்து மிகவும் பக்தி உடையவர். திருமுருகனுக்கு பைம்பொற் பதக்கங்களையும் மற்ற பொன் ஆபரணங்களும் அணிவித்து ஆனந்தம் அடைந்தவர். ஈகையில் இவர்க்கு இணை இல்லை. ஏற்றவர்க்கு இல்லை எனாது வாரி வழங்கிய வள்ளல். ஒரு சமயம் பகையரசர்கள் எல்லோரும் ஒன்று கூடி நல்லியக்கோடனின் நாட்டை முற்றுகை இட்டனர். அவர்களை எதிர்க்கும் அளவிற்கு தன்னிடம் போதிய படைகள் இன்மையால் திருமுருகனே தனக்குத் துணை என அவரைத் தனக்கு உதவும் படி உள்ளம் உருகி முருகா மூவற்கு முதல்வா அறத்தினை மறம் தான் வெற்றி பெற்றன என்றால் இனி உலகில் வேறெவர் அறநெறி நிற்பார் அற்றவர்க்கு உற்ற அறுமுகத்தவா அமரர்க்காக அசுரர்தம் கிளையைச் செற்றவா அது மெய் எனில் தமியோன் என்செய் வேன் இது திருவுளத்திற் கழகோ. இன்று நாயேனைப்பகைவர் சூழாமுன் இனி தெழுந்து ஆதரி என வேண்டினார். சத்தி வேற் குமரனும் நல்லியக் கோடர் சொப்பனத்தில் எழுந்தருளி பூவுடைறு மோர் பொய்கையைக் காண்பித்து அப் பொய்கையின் பூவினைக் கொய்து உனது பகைவர்கள் மீது எறிவாயாக எனக் கூறினார். அதன்படியே அரசனும் அம் மலர்களைப் பறித்து பகைவர்கள் மீது எறிந்தான். அவைகள் திருமுருகன் அருளால் வேலாகச் சென்று பகைவர்களை ஓட்ட வெற்றி கொண்டான். அப்படி வேல் கொண்டு எறிந்து வெற்றி கொண்ட இடமே இன்று, வென்ற ஊர் வேலூர் என வழங்கப் படுகிறது. இவ் வரலாறு சிறு பாணாற்றுப் படையில் காணலாம்.

திறல் வேல் நுதியிற் பூத்த கேணி
விறல் வேல் வென்றி வேலூர்
ஏறறருஞ் சென்னிக்

குறிஞ்சிக் கோமான் கொய் தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலை இய பண்பின்
நல்லியக் கோடன்.

—சிறுபாணாற்றுப்படை

பாவின் கற்பகத்தரு

19

தத்தா தத்தா தத்தா தத்தா
தத்தா தத்தத் தனதான.

மெய்ச்சார் வற்றே பொய்ச்சார் வுற்றே
நிச்சார் துற்பப் பவவேலை
விட்டே றிப்போ கொட்டா மற்றே
மட்டே யத்தத் தையர்மேலே
பிச்சா உச்சா கிப்போர் எய்த்தார்
பத்தார் விற்பொற் கழல் பேணிப்
பிற்பால் பட்டே நற்பால் பெற்றூர்
முற்பாலைக் கற் பகமே தான்
செச்சா லிச்சா லத்தே றிச்சே
லுற்று ணித்துப் பொழிலேறுஞ்
செக்கோ டைக்கோ டுக்கே நிற்பாய்
நித்தா செக்கர்க் கதிரேனல்
முச்சா லிச்சா லித்தான் வெற்பான்
முத்தார் வெட்சிப் புயவேளே
முத்தா முத்தீ அத்தா அத்தா
முத்தா முத்திப் பெருமாளே
(திரு 377)

செம் சாலி சாலத்து ஏறி = அடர்த்தியாக வளர்ந்து உள்ள செந்நெல் பயிர்களின்மேல் ஏறி, சேல் உற்று = சேல் மீன் கள் அடைந்து, அணித்துப் பொழில் ஏறும் = பக்கத்தில் உள்ள சோலைகளையடைந்து அதன் மீதும் தாவும் வளம் உள்ள, செக்கோடை கோடுக்கே = திருச்செங்கோட்டின் மலையின் மீதே, நிற்பாய் நித்தா = நின்ற கோலத்தில் கோயில் கொண்ட நித்திய மூர்த்தியே! செக்கதிர் கதிர் ஏனல் = சிவந்த கதிர் களைக் கொண்ட தினைப்பயிர்களும், முச்சாலி சாலித்தாள் = முப் போகம் விளையும் நெற்பயிர்களும் நிறைந்த, வெற்பாள் = மலையில் வாழும் வள்ளி அம்மையாரின் முத்தம் ஆர் வெட்சிப்புயவேளே = முத்தம் பொருந்த வேட்சிமலர் மாலை அணிந்த புயத்தை உடைய முருகப் பெருமானே; முத்தா = முத்தியை அருள் பவரே! முத்தீயத்தர் = கா ருக பத்யம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்னும் மூன்று வேதாக்

கினிக்கும் தலைவரே! சுத்தா = சுத்தனே! முத்தா முத்திப் பெருமாளே = மேலானமோட்ச வீட்டை அருளும் பெருமையில் சிறந்தவரே! மெய்ச்சார்வு அற்றே = உண்மையின் தொடர்பு இல்லாமல், பொய்ச்சார்வு உற்று = பொய்யின் துணைகொண்டு நிச்ச ஆர்துற்ப = எப்போதும் நிறைந்த துன்பம் உள்ள, பவ வேலை = பிறவிக் கடலை, விட்டு ஏறி = கடந்து கரைஏறிப், போக ஒட்டாமல் = போகவிடாமல், தேம் மட்டே = தேனின் இனிய சுவையும் குறைவே என்று சொல்லும் படி, அத் தத்தையர் = கிளிபோல் கொஞ்சிப் பேசும் அந்த விலைமாதர்களின் மீது, பிச்சாய் = காம வெறி கொண்டு, உச்சாகி = உச்ச நிலையை அடைந்து, போர் எய்த்தார் = கல்விப் போரில் சிக்கி வருந்தியவர்கள், பத்தார் = பக்தர்களின் வில் போன கழல் = பொன்மயமாகப் பிரகாசிக்கும் திருவடிகளை, பேணி = பணிந்து போற்றி, பின்பால் பட்டே = அதன் காரணமாக பின்னர் நல்ல வழியில் நின்று, நல் பால் பெற்றோர்முன் = நல்ல ஒழுக்கத்தைப் பெற்றவர்களின் முன் பாலை கற்பகமே தான் = தாங்கள் பாலைவனத்திலே தோன்றிய கற்பகமரம் ஆவீர்.

அருட்செல்வர் அருணகிரியார் ஆறுமுகனை நோக்கி, அடர்த்தியாக வளர்ந்து உள்ள செந்நெல் பயிர்களின் மேல் சேல்மீன்கள் தாவி ஏறி அடுத்துள்ள சோலைகளை அடைந்து அதன் மீதும் தாவும் வளம் உள்ள திருச்செங்கோட்டின் மலையின் மீது நின்றகோலத்தில் கோயில் கொண்ட நித்ய மூர்த்தியே!

சிவந்த கதிர்களையுடைய தினைப் பயிர்களும், முப்போகம் விளையும் செந்நெல் பயிர்களும் நிறைந்த வள்ளி மலையில் வாழும் வள்ளி அம்மையாரை மகிழ்வுடன் அணையும் வேட்சி மலர் மாலையணிந்த புயங்களை உடைய முருகப் பெருமானே! முத்தியை அருள்பவரே! காருகபத்யம் ஆகவணீயம் தட்சிணாக்கினி என்னும் மூவகை வேதாக்னிகளுக்கும் முதல்வனே! தூயவரே! மேலான முத்தியை அருளும் பெருமையில் சிறந்தவரே!

உண்மையின் தொடர்பு இல்லாமல் பொய்மையின் துணை கொண்டு எப்போதும் துன்பத்தையே தரும் பிறவிக் கடலைக் கடந்து கரை ஏறிப் போக விடாமல் தேனினும் இனிய சுவையுடையது என்று சொல்லும்படி கிளியைப் போல் கொஞ்சிப் பேசும் இனிமையுடைய விலைமாதர்களின் மீது காதல்

பைத்தியம் அதிகரித்து கலவிப் போரில் சிக்கி வருந்துபவர்கள் உம்முடைய பக்தர்களின் பிரகாசிக்கும் அழகிய திருவடிகளைப் பணிந்து அதனால் நல்வழியில் நின்று நல்ல ஒழுக்கத்தைப் பெற்றவர்களுக்கு நீர், ஏதும் கிடைக்காத பாலைவனத்தில் தோன்றிய கற்பகத்தருவைப் போல் வேண்டியவர்கள் வேண்டுவதை வழங்கும் வள்ளல் எனத் திருமுருகன் பெருமையை பெருமைபட பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

இப்பாடல் மூலம் அருட்செல்வர் அருணகிரியார் நம்மை நோக்கி நீவீர் என்றும் நிலைத்தும் நீடித்தும் நில்லாத இந்த் மெய் என்று சொல்லப்படும் பொய்மையான உடலை நம்பி பிறப்பதும் இறப்பதுமான துன்பத்திற்கு உட்படாமல் பிறவிக் கடலைத் தாண்டுவதற்கான ஓடமாம் திருமுருகன் திருவடியைப்பற்ற, ஓடக்காரனாகிய திருமுருகன் திருவாடியார் கள் துணை கொண்டு முன்னம் செய்த தவறுகளை உணர்ந்து, வருந்தி அடியார்களின் சேர்க்கையால் நல்வழிப்பட்டு நல்ல ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து திருமுருகன் திருவடியைச் சிந்தையில் கொண்டால் உங்கட்கு திருமுருகன் ஏதும் கிடைக் காத பாலைவனத்தில் திடீர் என்று ஓர் கற்பகமரம் தோன்றிக் கேட்டதைக் கொடுப்பது போல நீங்கள் வேண்டும் வரங்களை வழங்கி அருள் செய்வான் ஆகையால் முருகனையும் அவன் அடியார்களையும் போற்றிப்பணிந்து நல்வழிப்படுவீர் என அறிவுரை கூறியுள்ளார்.

பாலைக்கற்பகம்:- பாலைவனத்தில் மணலைத்தவிர ஒதுங்க நிழலும் குடிக்க நீரும் கிடைக்காது, அந்த இடத்தில் கற்பக மரமே தோன்றினால் எவ்வளவு மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் தருமோ, அதுபோல் இந்த உலகமாகிய பாலைவனத்தில் திருமுருகனுடைய திரு அவதாரம் பாலை வனத்து கற்பகமரமாக ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் தருவதாகும்.

இந்த உலகத்தில் அறிந்தோ அறியாமலே மாதர் ம்யக்கில் மயங்கி மதிகெட்டவர்கள் ஆனாலும் அல்லது பஞ்சமா பாதகங்களைச் செய்தவர்கள் ஆனாலும் அவர்கள் தம் பிழை உணர்ந்து நல்வழிப்பட நினைத்து அடியார்களின் அடி பணிந்து அவர்களுடன் இணைந்து நல்வழிப்பட்டு நல்ல ஒழுக்கம் கொண்டால், அவர்கள் தாம் உய்ய ஏதும் வழி யில்லையே என்று ஏங்காமல் அவர்களைக் காத்திடவே திருமுருகன் பாலைவனத்து கற்பக மரமாக உள்ளான் என்று

திருமுருகனின் பெருமையைப் பெருமிதத்துடன் பேசும் அருட் செல்வர் அருணகிரியார் வேசியர் மயக்கத்தில் மயங்கி வேதனை புலவுற்று உய்யும் வழி அறியாது தவித்து தம் செயலுக்கு வருந்த அவரைத் திருமுருகன் பாலகற்பகம் போல் தோன்றி ஆட்கொண்டு அருள் செய்தான் என்பதான அவர் சுய சரிதையையும் குறிப்பாக இப்பாடல் மூலம் உணர்த்துவதும் காண்பீர்.

எனவே இப்பாடல் அருட்செல்வரின் வரலாற்றினைக் குறிக்கும் பாடலாகும்.

இத்திருத்தலத்தில் அருட்செல்வர் அருணகிரியார் பாடிய இரண்டு பாடல்களில் அருட்செல்வர் அருணகிரியார் வேசியர் வசம் சிக்கி வேதனைப்பட்டவர் என்பதை உறுதிப்படுத்து வதற்கான அகச்சான்றுகளை உடையனவாக உள்ளது. அவை களில் ஒன்று இப்பாடல் மற்றது பாடல் 11ம் ஆகும்.

செஞ்சாலி = இது இங்கு செச்சாலி என வந்துள்ளது.
செங்கோடை = இது செக்கோடை என வந்துள்ளது.

தன் தவறு உணர்ந்து திருந்தும் நோக்கம் கொண்டு செயல் படுபவர்களுக்கு திருமுருகன் பாலவனத்து கற்பகம் என்ற இதே கருத்தினை இத் திருதலத்தில் பாடியுள்ளதான திருப்புகழ் 21 லும் எடுத்துக்காட்டியுள்ளார், தன் தவறு உணர்ந்த சூரபன்மனையும் மயில் வாகனமாக ஏற்றுக் கொண்டார் என்பதை அழகு படக் காட்டியுள்ளார் அருட் செல்வர் அருணகிரியார்.

முத்தீ:- காருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி என்று மூன்று வகைகளைக் கொண்டது வேள்வித்தீ. இத்தீகளை முறையே வட்ட வடிவம், சதுர வடிவம், பாதி சந்திர வடிவம் கொண்ட குண்டங்களில் தான் வளர்க்க வேண்டும்.

20

தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த தனதான

வண்டார் மதங்கள் உண்டே மயங்கி
வந்தூரு கொண்டல் அதனோடும்
வண்காமன் அம்பு தன்கால் முடங்க
வன்போர் மிகுந்த விழிவேலும்

கொண்டே வளைந்து கண்டார் தியங்க
நின்றூர் குரும்பை முலைமேவிக்
கொந்தா ரரும்பு நின்தாள் மறந்து
குன்றுமல் உன்றன் அருள்தாராய்;
பண்டாழி சங்கு கொண்டாழி தங்கு
பண்போன் உகந்த மருகோனே
பண்சார நைந்து நண்போதும் அன்பர்
பங்காகி நின்ற குமரேசா
செண்டாடி அண்டர் கொண்டாட மன்றில்
நின்றாடி சிந்தை மகிழ்வாழ்வே
செஞ்சாலி மிஞ்சி மஞ்சாடு கின்ற
செக்கோ டமர்ந்த பெருமாளே
(369)

பண்டு ஆழிசங்கு கொண்டு = ஆதிமுதல் சக்கரமும் சங்கும் கொண்டு, ஆழி தங்கும் பண்போன் = பால் கடலில் பள்ளி கொண்ட திருமால், உகந்த மருகோனே = விரும்பும் மால்மருகரே! பண்சார = இசை பொருந்த, நைந்து = உள்ளம் உருகி, நன்பு ஓதும் அன்பர் = துதிகளைச் சொல்லிப் போற்றுகின்ற பக்தர்கள், பங்காகி நின்ற குமரேசா = பக்கத்தில் துணையாக நிற்கும் குமரேசரே! செண்டு ஆடி = அசுரர்களை செண்டு ஆடுவது போல் ஆடி ஒட்டிய உன்னை, அண்டர்கள் கொண்டாட = தேவர்கள் போற்றுவது கண்டு, மன்றில் நின்று ஆடி = தில்லையில் பொன்னம்பலத்தில் அனந்தத்தாண்டவம் ஆடிய சிவபெருமான், சிந்தை மகிழ்வாழ்வே = உள்ளத்து உவகை கொள்ளும் செல்வமே! செஞ்சாலி = செந்நெல் பயிர்கள், மிஞ்சி = மிகுதியாக வளர்வதற்காக, மிஞ்சு ஆடுகின்ற = மேகங்கள் உலாவுகின்ற வளப்பம் மிக்க, செங்கோடு அமர்ந்த = திருச்செங்கோட்டில் கோயில் கொண்ட, பெருமாளே = பெருமையில் சிறந்தவரே! வண்டார் = வண்டு கள், மதங்கள் உண்டே = தேனையுண்டு, மயங்கி வந்து ஊரு = மயக்கத்துடனேயே வந்து மொய்க்கின்ற, கொண்டல் அதனோடும் = மேகம் போன்ற கூந்தலுடன், வண் காமன் அம்பு = புகழுடைய மன்மதனின் மலர் பாணத்தின், தன் கால் மடங்க = ஏற்றம் குறைய, வன்போர் மலைந்த = வலிய போரை எதிர்க்கும், விழி வேலும் = வேல் போன்ற கூர்மையான கண்களை, கொண்டே = கொண்டே (ஆடவர்களை),

வளைந்து = தங்கள் வலையில் சிக்க வைத்து, கண்டார் தியங்க = பார்த்தவர்கள் திகைக்கும்படி, நின்றார் = நிற்கும் விலை மாதர்களின், குரும்பை முலை மேவி = தென்னங் குரும்பை போன்ற கொவ்வைகளின் மீது விருப்பம் வைத்து, கொந்து ஆர் அரும்பு = அன்று மலர்ந்த மலர்களால் நிரம்பிய, நின் தாள் மறந்து = உமது திருவடிகளை மறந்து, குன்றாமல் = நான் அழிவு அடையாமல் இருக்க, உன்றன் அருள் தாராய் = உம்முடைய திருவருளைத் தந்து ஆட்கொள்ள வேண்டும்.

செந்நெல் பயிர்கள் மிகுந்து மேகங்கள் உலாவுகின்ற வளப்பம் மிக்க திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட பெருமையில் சிறந்த செங்கோட்டு வேலவரே! ஆதி முதல் சக்கரமும் சங்கும் கொண்டு பாற்கடலில் பள்ளிகொண்ட திருமாலுக்கு உகந்த மருகரே! இசையுடன் உள்ளம் உருகி உமது புகழ்களைப் பாடியும் போற்றியும் வணங்கும் பக்தர்கள் பக்கத்திலேயே அகலாது துணையாக இருக்கும் முருகப்பெருமானே! பூச்செண்டாடுவது போல் அசுரர்களைச் செண்டாடி அழித்த உம்மை தேவர்கள் கொண்டாடுவது கண்டு மகிழ்வு கொள்ளும் மன்றில் ஆடிய சிவபெருமானது செல்வமே! தேனை உண்ட மயக்கத்துடன் வண்டுகள் மொய்க்கின்ற மேகம் போன்ற கூந்தலுடன் வளப்பம் உள்ள மன்மதனுடைய மலர்க்கணையின் சிறப்பு குறைய வலிய போர்புரியும் கூர்மையான வேல் போன்ற கண்களைக் கொண்டு ஆடவர்களைத் தங்கள் வலையில் சிக்க வைத்துக்கண்டவர் திகைக்கும்படி அழகாக இருக்கும், விலை மாதர்களின் தென்னங்குரும்பை போன்ற கொங்கைகளின் மீது விருப்பம் வைத்து, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உமது மலர் திருவடிகளை மறந்து அழிவு அடையாமல் இருக்க உமது திருவருளைத் தந்து ஆட்கொள்ள வேண்டும் என்று நமக்காக தாம் வேண்டுவது போல் முருகனை வேண்டிப்பாடிய பாடலாகும்.

இசையுடன் உள்ளம் உருகத் திருமுருகனை போற்றிப் பணியும் அன்பர்களை விட்டு அகலாது பக்கத் துணையாகத் திருமுருகன் எப்போதும் இருப்பான். ஆகையால் அவனது திருப்புகழை இசையுடன் பாடுங்கள். மால் மருகனை மறந்து மாதர் ஆசையில் மயங்காதீர். மாதர் மயக்கம் போக்க மரகத

மயிலேறும் மாணிக்கம் அன்றி மற்றவர்களால் ஆகாது. ஆகையால் மாமயிலோன் மலரடியை மறவாதீர்.

"வண்காமனம்பு தன்கால் மடங்க
வன்போர் மலைந்த விழிவேலுந்"

மன்மதனுடைய மலர் பாணத்தைக் காட்டிலும் வேல் விழியார் தம் கண் பாணமே காம இச்சையைக் கவரும் என்றதான சொல் நயம் போற்றற்பாலது.

21

தனத்தந் தான தானன தனத்தந் தான தானன
தனத்தந் தான தனதானன தனதான

வருத்தங் காண நாடிய குணத்தன் பான மாதரு
மயக்கம் பூண மோதிய துரமீதே
மலக்கங் கூடியே இனவுயிர்க்குஞ் சேதமாகிய
மரிக்கும் பேர்க ளோடுற வணியாதே
பொருத்தும் பாவ நீடிய மலத்தின் தீமை கூடிய
பிறப்புந் தீர வேஉன திருதாளே
பெறத்தந் தாள வேஉயர் சுவர்க்கஞ் சேர வேஅருள்
பெலத்தின் கூர்மையானது மொழிவாயே
இரத்தம் பாய மேனிக ளுரத்துஞ் சாடிவேல் கொடு
எதிர்த்துஞ் சூரர் மாளவே பொரும்வேலா
இசைக்குந் தாள மேளமெ தனத்தந் தான தானன
எனத்திண் கூளி கோடிகள் புடைசூழத்
திருத்தன் பாக வே ஒரு மயிற் கொண்டாடியே புகழ்
செழித்தன் பாக வீறிய பெருவாழ்வே
திரட்சங்கோடை வாவிகள் மிகுத்துங் காவி சூழ்த்தரு
திருச்செங் கோடு மேவிய பெருமாளே
(திரு 378)

மேனிகள் உரத்தும் = உடலிலும் மார்பிலும், இரத்தம் பாய = இரத்தம் பெருகிப் பாயும் படி, வேல்கொடு சாடி = வேலாயுதத்தைக் கொண்டுத்தாக்கியும், எதிர்த்தும் = எதிர்த்தும், சூரர்மாளவே = அசுரர்கள் எல்லோரும் மாண்டு

போக, பொரும் வேலா = போர் செய்த வேலவரே! திண் கூளி கோடிகள் = வலிமையுடைய சிவகணங்களாம் பூதகணங்கள், கோடிக்கணக்கில் இசைக்கும் தாள மேளமே முழங்கும் மேள தாளங்களையே, தனத்தந்தான தானன = தனத்தந் தானதானன என புடைசூழ = என்றுமுழுங்கிக் கொண்ட புடை சூழ்ந்துவர அன்பாகவே திருந்த= அன்புடனே தனது முந்திய குணங் களிலிருந்து, திருந்திய ஒரு மயில் கொண்டு ஆடியே = ஒப்பற்ற சூரபன்மனாகிய மயிலை விருப்பமுடனே வாகனமாக ஏற்று அதன்மீதுஅமர்ந்து,புகழ் செழித்து= புகழினை மிகவும் பெற்று அன்பாக வீறிய = அன்பே உருவமாக மேம்பட்டு விளங்கும் பெரும் வாழ்வே = பெருமைக்கு உரியவரே! திரள் சங்கு ஓடை — திரண்ட சங்குகளையுடைய ஓடைகளும், வாவிகள் மிகுத்தும்—மிகுதியான குளங்களும் கொண்டு, காவி சூழ்தரு = குவளை மலர்கள் அதிகமாக உள்ள திருச்செங்கோடு மேவிய = திருச்செங்கோட்டு மலையின் மீது கோயில் கொண்ட, பெருமானே — பெருமையில் சிறந்தவரே! வருத்தம் காண நாடிய — ஆடவர்களின் மனதைப் புண்படச் செய்வதிலேயே ஆர்வம் கொண்ட, குணத்து அன்பான = குணத்தை விரும்பும், மாதரும் — விலை மாதர்களும், மயக்கம் பூண மோதிய — மயக்கம் கொள்ளும்படி அவர்களுடன் தாக்குண்ட துரமீதே — இந்த சுமையான உடல் மீது, மலக்கம் கூடி ஏயின — துன்பங்களோடு கூடிப் பொருந்திய, உயிர்க்கும் சேத மாகிய — உயிர்களுக்கும் அழிவாகி, மரிக்கும் பேர் களோடு — இறந்து படும் மக்களுடன், உறவு அணியாதே — உறவு கொள்ளாமல், பெருத்தும் பாவ நீடிய — நீண்ட கால மாகப் பாவங்கள் அதிகரித்து, மலத்தின் தீமை கூடிய — மும் மலங்களின் கொடுமையும் சேர்ந்து, பிறப்புந்தீரவே — பிறவித் துன்பமும் ஒழிவதற்காகவே, உனது இருதாளே — உம்முடைய இரண்டு திருவடிகளை, பெற தந்து ஆளவே — (அடியேன்)பெற்றிடத்தந்து ஆண்டருளவும், உயர் சுவர்க்கஞ் —உயர்ந்த தான சுவர்க்கத்தையும், சேரவே — சேர்வதற்கும், அருள் பொலத்தின் — அருள் பாலிக்கும் சத்தியின் கூர்மை யானது — நுண்பொருளை, மொழி வாயே = மொழிந்தருளுக!

உம்மை எதிர்த்த அசுரர்களின் உடம்பிலும் மார்பிலும் இரத்தம் பெருகிப் பாயும் படி வேல் கொண்டு தாக்கி அசுரர்கள் இறந்துபடும்படி போர் செய்த வேலவரே! மேளதாளங்கள் முழங்க சிவகணங்களாகிய பூதகணங்கள் கோடிக்கணக்கில் புடைசூழ திருந்திய அன்பினையுடைய